www.padippakam.com

1 - 15 ஜூலை 98 □ ரூ. 4.00

பதவியைப் பாதுகாக்க
கருணாநிதியின் பயங்கரவாத சட்ட

# புதிய ஜனநாயகம்




படிப்பகம்

www.padippakam.com

# தில்லியின் அழகுக்கு தொழிலாளர்கள் பலிகடா

தில்லி நகரத்தை அழகுபடுத்துவதற்காக ''மாஸ்டர் பிளான்'' என்ற திட்டத்தை உருவாக்கி, கடந்த எட்டு ஆண்டுகளாக ஆட்சியாளர்கள் அத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியும் வருகின்றனர். இத்திட்டத்தால் தில்லியின் அழகு கூடியதோ இல்லையோ, தில்லியில் முப்பது நாற்பது ஆண்டுகளாக உழைத்து வாழ்ந்து வந்த 50,000 தொழிலாளர்களின் வாழ்க்கை அலங்கோலமாகிவிட்டது.

இரு ஆண்டுகளுக்கு முன்பு தில்லி நகர எல்லையினுள் இயங்கி வந்த 168 தொழிற்சாலைகளை இத்திட்டத்தின்படி மூடச் சொல்லி உத்தரவிட்டது, உச்சநீதி மன்றம். இவ்வாலைகளால் தில்லி நகரச் சுற்றுச் சூழல் பாதிக்கப்படுவதால், இவை இனியும் நகர எல்லையினுள் இயங்க அனுமதி கிடையாது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. அதேபொழுதில், மூடப்படும் இத்தொழிற்சாலைகள், தங்கள் தொழிலாளர்களுக்கு சட்டப்படியான நட்ட ஈடுத் தொகை தர வேண்டும்; ஓராண்டுகால சம்பளத்தை கூடுதல் நிவாரணமாக அளிக்க வேண்டும் என்றும் அத்தீர்ப்பில் உச்சநீதி மன்றம் உத்தரவிட்டது.

மூடப்பட்ட 168 தொழிற்சாலைகளில் பொதுத் துறையைச் சேர்ந்த மூன்று நிறுவனங்கள் மட்டும் தான் தொழிலாளர்களுக்குத் தர வேண்டிய நட்டஈடு - நிவாரணத் தொகையைக் கொடுத்துள்ளன. தனியார் முதலாளிகள் தொழிலாளர்களுக்குப் பட்டை நாமம் போட்டுவிடச் சூழ்ச்சி செய்வதோடு, மூடிக் கிடக்கும் தொழிற்சாலைகளின் நிலங்களை மனைகளாக்கி விற்றுவிட மும்முரமாக இறங்கிவிட்டனர். தொழிற்சாலை இயங்கிய போதும் முதலாளிகளின் பணப்பெட்டி நிரம்பி வழிந்தது; தொழிற்சாலை மூடப்பட்ட பின்னும் அவர்களது கல்லாபெட்டி இளைத்துப் போய்விடவில்லை. ஆனால், காய்ந்து ஒட்டிக் கிடப்பதென்னவோ தொழிலாளியின் வயிறுதான்!

''தில்லி ஜன்வாடி அதிகார் மஞ்ச்'' என்ற அமைப்பு இத்தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த 53 பெண்களிடம் விரிவான நேர்காணல் ஒன்றை எடுத்து வெளியிட்டுள்ளது. தில்லியின் அழகுக்காக இவர்களின் வாழ்வு சின்னாபின்னமாகிப் போனதை, இந் நேர்காணல் முகத்தில் அறைந்தாற் போல வெளியுலகுக்கு எடுத்துக் காட்டிவிட்டது.

மூடப்பட்ட ஸ்ரீராம் நிறுவனத்தில் இருபது வருடமாக வேலை பார்த்து 2,500 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த பிம்லா தேவியின் கணவர் இன்று ரிக்ஷா ஓட்டி குடும்பத்தை நடத்துகிறார். மாதம் முப்பது நாட்களும் ரிக்ஷா ஓட்டினாலும் இவருக்கு கிடைக்கும் மாத வருமானம் தொள்ளாயிரம் ரூபாய் தான்! இவரைப் போலவே இருபது வருடம் வேலை பார்த்த சாந்தியின் கணவர் இன்று கட்டிட கூலித் தொழிலாளி. இப்படி வேலையிழந்த ஒவ்வொரு தொழிலாளியும், வேறு நிரந்தர வேலை எதுவும் கிடைக்காததால், அன்றாடம் கிடைக்கும் ஏதாவதொரு கூலி வேலையில் ஒட்டிக் கொள்ள வேண்டியதாகி விட்டது.

குடும்பத்தின் வருவாயை ஈடுகட்ட, பணக்கார வீடுகளில் வேலைக்காரியாகச் செல்வது, தையல், துணிகளில் பூ வேலைப்பாடு செய்தல், பூ கட்டுதல் - இப்படி ஏதாவதொரு வேலைக்குத் தொழிலாளர்களின் மனைவியரும் செல்வது தவிர்க்க முடியாததாகி விட்டது.

வருமானம் குறையும் பொழுது வயிற்றைக் கட்டுவது தான் ஏழைகளுக்குத் தெரிந்த வழி! சுதந்திர பாரத் மில்லில் வேலை பார்த்து வந்த கிரண்குமாருக்கு, வேலை போன பின்பு உணவிற்குக் கூடப் போதிய வருமானமில்லாததால், இவரது குடும்பம் பெரும்பாலான நாட்கள் வெறும் எலுமிச்சை பழச் சாற்றைக் குடித்தே உயிர் பிழைத்தது; இதனால், கர்ப்பமாக இருந்த இவரது மனைவியின் உடல் நிலை மிகவும் பலவீனமாகி மகப்பேறு சமயத்தில் தாயும் சேயும் இறந்து போயினர்.

''காலை சாப்பாட்டையும், குழந்தைகளுக்குப் பால் வாங்கி கொடுப்பதையும் நிறுத்தி விட்டோம்; எங்கள் உணவில் இருந்து காய்கறிகள் பெரும்பாலும் மறைந்து விட்டன; சப்பாத்திக்கு ஏதாவதொரு துவையல் செய்வோம்; இல்லையென்றால் உப்பைத் தொட்டுக் கொண்டு சாப்பிடுவோம்'' என்கின்றனர் அந்தப் பெண்கள்; ''குழந்தைகள் ரொட்டி கேட்டு அடம் பிடிக்கும் பொழுது தற்கொலை செய்து கொள்ளலாமா அல்லது குழந்தைகளைக் கொன்று போட்டு விடலாமா?'' என நினைக்கத் தோன்றும் என்கிறார் ஒரு தொழிலாளியின் மனைவி.

குடியிருப்பு, குழந்தைகளின் கல்வி, மருத்துவம் இவை போன்ற அத்தியாவசியத் தேவைகள் கூட இப்பொழுது இத்தொழிலாளர்களுக்கு பெரும் சுமையாகி விட்டது. நகரின் குப்பங்களில் சொந்தமாகக் குடிசை போட்டு வாழும் தொழிலாளர்களை விரட்டியடிக்க ''ரியல் எஸ்டேட்'' மாஃபியாக்கள் சுற்றி வருகின்றனர். தொழிற்சாலைகளை மூடிய பின்னும் தொழிற்சாலை குடியிருப்புகளில் வசித்து வரும் தொழிலாளர்களை விரட்டியடித்துவிட்டு, அந்த நிலத்தை வீட்டு மனை போட்டு விற்றுவிடத் துடிக்கிறார் மில் முதலாளி. தில்லியின் சுற்றுப்புறத்தைப் பாதுகாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை ஒட்டு மொத்த சமூகத்திற்குப் பலனளிக்காமல், ''ரியல் எஸ்டேட்'' முதலைகளுக்கு இலாபத்தை அள்ளிக் கொட்டுவதாக மாறிப் போய் நிற்கிறது.

தொழிற்சாலையை மூடிய கையோடு, நிர்வாகம் நடத்தி வந்த பள்ளிக்கூடங்களும் மூடப்பட்டதால், பல தொழிலாளர்களின் குழந்தைகள் பள்ளிக்குப் போவதையே நிறுத்திவிட்டன. வேலை பறிபோனதோடு, இத் தொழிலாளர் குடும்பத்தினருக்கு ''இ.எஸ்.ஐ.'' மருத்துவ வசதியும் மறுக்கப்பட்டு விட்டது.

நிரந்தர வருமானமில்லாததால் எதிர்காலம் குறித்த கவலைகள் இவர்களை அரை குறை நோயாளி ஆக்கிவிட்டன. ''எனது மண்டைக்குள் பிரச்சினைகள் குடைந்து கொண்டிருக்கின்றன. இரத்தக் கொதிப்பு அதிகரித்து மருத்துவம் பார்க்கச் சென்றேன். அவர்கள், மனதைப் போட்டு அலட்டிக் கொள்ளாமல் ஓய்வெடுக்கச் சொல்கிறார்கள். ஐந்து குழந்தைகளை வைத்துக் கொண்டு நான் எப்படி கவலையில்லாமல் இருக்க முடியும்?'' என்கிறார் ஒரு தொழிலாளியின் மனைவி. ''ஒரு நிமிடம் கூட அமைதியாக இருக்க முடியவில்லை; கடன் தொல்லை என்னை அச்சுறுத்துகிறது'' என்கிறார் மற்றொருவர். குடும்பக் கவலைகள் அதிகரிப்பதோடு, குடிப்பழக்கமும் அதிகரித்து, கணவன் - மனைவி இடையே நாள்தோறும் சண்டைகள், அடிதடி என்று, குடும்ப உறவுகளில் மோசமான விளைவுகள் ஏற்படத் தொடங்கி விட்டன.

''தில்லியின் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க ஆலைகளை மூடிவிட்டார்கள்; ஆனால், கெட்டு குட்டிச் சுவராகிப் போகும் எங்கள் குடும்பச் சூழலை என்ன செய்வது?'' எனக் குமுறுகிறார் கிரண்குமார் என்ற தொழிலாளி. இதே குமுறலை, நாளை திருப்பூர் சாயப் பட்டறைத் தொழிலாளர்களிடமிருந்தும் நாம் கேட்கக் கூடும். அழகு சென்னை 2000, சுத்தமான மும்பை என சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எடுக்கப்படும் ஒவ்வொரு திட்டத்திற்கும் பலியாகிப் போவது ஏழைகளும் கூலிகளும் தான். ''பாதுகாக்கப்பட வேண்டியது சுற்றுப் புறச் சூழல் மட்டுமில்லை; தொழிலாளர் வாழ்க்கையும் தான்'' என்பதை இனியும் ஆளும் கும்பல் அலட்சியப்படுத்தக் கூடாது என எச்சரிப்போம்!

• முத்து

**மில் முதலாளியிடமிருந்து நட்டஈடுத் தொகையைப் பெறக் காத்துக் கிடக்கும் தொழிலாளர்கள்**





படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 13

இதழ்: 14 - 16

1 ஜூன்'98 - 15 ஜூலை'98

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 96.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


## இந்து மதவெறியர்களின் தாக்குதல் அரசியல் எதிர்க்கட்சிகளின் கையாலாகாத்தனம்

எதிர்பாராத திடீர்த் தாக்குதல் மூலம் எதிர்த்தரப்பினரை வாயடைக்க வைத்துச் செயலிழக்கச் செய்வது; அந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள்ளாகவே அடுத்த தாக்குதலை ஏவி எதிராளிகளை முற்றாக முடமாக்குவது என்கிற உத்தியுடன் ஆளும் இந்துவெறிக் கும்பல் அடுத்தடுத்து தாக்குதல்களைத் தொடுக்க ஆரம்பித்து விட்டது. குறுகிய தேசிய வெறி - போர் வெறியூட்டும் வகையில் இரகசியமாகத் திட்டமிட்டு, திடீரென அணுகுண்டு வெடித்த இந்து வெறியர்கள், இப்போது அயோத்தி குண்டை ஏவித் தாக்கத் தொடங்கி விட்டனர்.

இந்துவெறியர்கள் அதிகாரத்துக்கு வந்ததும், அயோத்தியில் கோயில் கட்டுவதற்கான சிற்பங்கள், தூண்கள், பீடங்கள் தயாரிப்பு வேலைகள் மிக வேகமாக நடந்து வருகின்றன. இராசஸ்தானிலும், உ.பி.யில் அயோத்தியிலும் தயாரிப்பு வேலைகள் ஏறத்தாழ முடிவடைந்துள்ள நிலையில், இரவோடு இரவாக அவற்றைப் பொருத்தி, மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் பிரம்மாண்டமான 'ரெடிமேட்' ராமன் கோயிலைக் கட்டும் சதித் திட்டத்துடன் இந்துவெறிப் பரிவாரங்கள் தீவிரமாகச் செயல்பட்டு வருவதை இது நிருபித்துக் காட்டுகிறது.

கோயில் கட்டுவதற்கான துரித தயாரிப்புகள் பற்றி பத்திரிகைகளில் அம்பலமானதும், எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் கூச்சலிட்ட போது, ''பிரச்சினைக்குரிய இடத்திற்கு அப்பால், வெளியே சிற்ப வேலைகள் நடப்பதால் அதைத் தடுப்பது சாத்தியமல்ல'' என்றார் உள்துறை அமைச்சர் அத்வானி. ''மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் ராமன் கோயில் கட்டுவதா அல்லது மசூதியைக் கட்டுவதா என்கிற விவகாரம் உச்சநீதி மன்றத்தில் உள்ளதால் அதன் தீர்ப்பு வரும் வரை அயோத்தியில் ராமன் கோயில் கட்ட அனுமதிக்க மாட்டோம்' என்கிறார் பிரதமர் வாஜ்பாய். ஆனாலும் தற்போது நடந்து வரும் கோயில் கட்டுமான - தயாரிப்பு வேலைகளை அவர் தடுத்து நிறுத்த முற்படவில்லை.

இரட்டை நாக்குப் பேர்வழிகளான இந்து வெறியர்களுக்குப் பித்தலாட்டம் கைவந்த கலை. அரசியலமைப்புச் சட்டப்படி பதவிப் பிரமாண உறுதிமொழி எடுத்துள்ளதால், இந்து வெறி கொண்ட பிரதமரும் அமைச்சர்களும் நீதிமன்றத் தீர்ப்பை ஏற்போம் என்கின்றனர். அவர்களது கட்சித் தேர்தல் அறிக்கையோ, அயோத்தியில் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் ராமன் கோயிலைக் கட்டுவோம் என்று வாக்குறுதி அளிக்கிறது. அதேசமயம் கூட்டணிக் கட்சிகளுடன் சேர்ந்து வகுக்கப்பட்ட தேசிய செயல் திட்டத்தில் ராமன் கோயில் பற்றி எதுவு மில்லை.

அத்வானியும் வாஜ்பாயும் நீதிமன்றத் தீர்ப்பை ஏற்போம் என்று கூறிக் கொண்டிருக்கும் போதே, இந்துத்துவ பரிவாரங்கள் கோயில் கட்டியே தீருவோம் என்று கொக்கரிக்கின்றன. ஆர்.எஸ்.எஸ். தலைவர் ராஜேந்திர சிங், விசுவ இந்து பரிஷத் தலைவர் அசோக் சிங்கால், பஜ்ரங் தள் குண்டர்படைத் தலைவர் வினய் கத்தியார் மற்றும் மகந்துகள் அனைவருமே, ''மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் ராமன் கோயில் கட்டி முடிப்போம்; பிரதமரின் உறுதிமொழியின் படி நீதிமன்றத் தீர்ப்புக்காகக் காத்திருக்க மாட்டோம்; நீதிமன்றத் தீர்ப்புக்கும் கட்டுப்பட மாட்டோம்; அரசியல் சட்டம், அரசாங்கம், நீதிமன்றம் எதுவுமே எங்களது பணிகளைத் தடுக்க முடியாது'' என்று சவால் விடுக்கின்றனர்.

பாரதீய ஜனதாவின் துணைத் தலைவரான கே.எல். சர்மா, ''இராஜீவ் ஆட்சிக் காலத்தில் ஷாபானு என்ற முஸ்லிம் பெண்மணியின் ஜீவனாம்ச வழக்கு பற்றிய நீதிமன்றத் தீர்ப்புக்கு மாறாக, நாடாளுமன்றத் தீர்மானம் மூலம் முஸ்லிம்களின் தனி குடும்பச் சட்டத்தை இராஜீவ் ஏற்று ஆதரித்தார். அதுபோல, அயோத்தி விவகாரத்தில் நீதிமன்றத் தீர்ப்பு எமக்குச் சாதகமாக அமையாவிட்டால், நாடாளுமன்றத் தீர்மானம் மூலம் நாங்கள் கோயிலைக் கட்டி முடிப்போம்'' என்று உறுதியாக எச்சரிக்கிறார். ''இது மத சம்பந்தப்பட்ட விவகாரம். இதில் தலையிட்டு தடுத்து நிறுத்திட யாருக்கும் உரிமையில்லை; ராமன் கோயில் கட்டுவதை ஆட்சேபிப்பவர்களுக்கு இனி இந்தியாவில் இடமில்லை'' என்று இந்துவெறிப் பரிவாரங்கள் பகிரங்கமாகவே சவால் விடுக்கின்றன.

இத்தகைய அடாவடித்தனங்களும் கோயில் கட்டுவதற்கான வேகமான தயாரிப்புகளும் நீதிமன்ற உத்தரவுக்கே எதிரானது என்று நன்கறிந்த போதிலும், இந்துவெறி குண்டர்கள் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. பிரச்சினை நீதிமன்றத்தில் இருக்கும் போது அது பற்றி கருத்துகூட கூறக்கூடாது என்ற மரபைப் பற்றி வாய்க் கிழியப் பேசும் இந்துவெறி ஆட்சியாளர்கள், எந்தவொரு சட்டம், நீதிக்கும் கட்டுப்படாமல் இந்துவெறிப் பரிவாரங்கள் கொட்டமடித்த போதிலும் கை கட்டி நிற்கின்றனர்.

அயோத்தி விவகாரத்தை எப்போதும் சூடாகவே வைத்திருப்பதென்பது இந்து வெறியர்களுக்கு மிக அவசியமாக உள்ளது. நாட்டைச் சூழ்ந்துள்ள அரசியல் - பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்பி, அக்கறைகளை மக்கள் மீதே திணிக்கவும், தமது பாசிச நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ள இந்துவெறி ஆதரவைப் பெருக்கிக் கொள்ளவும், சிறுபான்மையினரை நரவேட்டையாடி ஒடுக்கவும் அவர்களுக்கு அயோத்தி விவகாரம் முக்கியமான துருப்புச் சீட்டாகியுள்ளது.

அணுகுண்டை வெடித்துக் குறுகிய தேசியவெறி - போர்வெறியைத் தூண்டி ஆதாயமடைந்ததைப் போலவே, திடீரென அயோத்தியை முற்றுகையிட்டு ராமன் கோயிலைக் கட்டி இந்துவெறியூட்டி நியாயப்படுத்துவது; காஷ்மீரில் தீவிரவாதத்தை முறியடிப்பது என்கிற பெயரில் பாகிஸ்தானுக்கு எதிராக ஒரு குறுகிய போரை நடத்துவது; திடீர் அவசர சட்டமாக பொது சிவில் சட்டத்தைத் திணிப்பது; பிரிவினைவாத - பயங்கரவாத பீதியூட்டி பாசிச

www.padippakam.com

ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவது என அடுத்தடுத்து பாசிசத் தாக்குதல்களைக் கட்டவிழ்த்து விடும் திட்டத்துடன்தான் இந்து வெறியர்கள் தீவிரமாகச் செயல்படுகின்றனர். நாட்டு மக்களின் கவனம் முழுவதும் இவற்றை நோக்கியே இருக்குமாறு எப்போதும் பதற்ற நிலையிலேயே வைத்திருக்கத் துடிக்கின்றனர்.

இத்தனைக்கும் பிறகும், இந்துவெறியர்களின் பாசிசத் தாக்குதல்களை எதிர்கொண்டு முறியடிக்கத் திராணியின்றி எதிர்க்கட்சிகள் அரண்டுபோய் நிற்கின்றன. கோயில் கட்டுவதற்கான தயாரிப்புப் பணிகளை ஏன் தடுத்து நிறுத்தவில்லை என்று விளக்கம் கேட்டு காங்கிரசு தலைவி சோனியா, இந்துவெறி பிரதமர் வாஜ்பாய்க்கு கடிதம் எழுதி விசாரிக்கிறார். எதிர்க்கட்சிகளோ கண்டன எதிர்ப்புடன் முடங்கி விட்டன. போலி கம்யூனிஸ்டுகளோ எதிர்ப்புக் கூச்சலுக்குப் பின், அயோத்திக்கு ஆய்வுக் குழுவை அனுப்பி ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர். ''மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் மீண்டும் மசூதியைக் கட்டிக் கொடுத்து, அதை முஸ்லிம்களிடம் ஒப்படை!'' என்பதற்கு மாறாக, மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் கோயிலோ, மசூதியோ கட்டாமல், இந்து - முஸ்லிம் மதச் சார்பின்மையின் நினைவுச் சின்னமாக்கிவிட வேண்டும் என்ற சமரசத் திட்டத்தை முன் வைக்கின்றனர். அதிகாரத்துக்கு வந்துள்ள இந்துவெறி பாசிசக் கும்பலை அனைத்தும் தழுவிய முறையில் அம்பலப்படுத்தி முறியடிப்பதற்குப் பதில்ாக, மத நல்லிணக்கம் பேசித் திரிகின்றனர்.

மத நல்லிணக்கம் பேசிவந்த முந்தைய ஐக்கிய முன்னணி ஆட்சியிலேயே, பிரதமர், உள்துறை அமைச்சர்களுக்குத் தெரிந்தே ராமன் கோயில் கட்டுவதற்கான சிற்பங்கள், தூண்கள் செதுக்கும் வேலைகள் நடந்து வந்த போதிலும், அதை தடுத்து நிறுத்தவில்லை என்ற உண்மையும் இப்போது அம்பலமாகியுள்ளது. அன்று கண்டுங்காணாமல் இச்சதிகளை அங்கீகரித்து வந்த இவர்கள்தான், இன்று அரசியல் ஆதாயத்துக்காக நாடாளுமன்றத்தில் எதிர்ப்புக் கூச்சல் போடுகின்றனர். இத்தகைய கையாலாகாத்தனத்தைச் சாதகமாக்கிக் கொண்டு, இந்துவெறிக் கும்பல் மேலேறித் தாக்கும் உத்தியுடன் அடுத்தடுத்து தனது பாசிச நோக்கங்களை செயல்படுத்தி வருகிறது. அரசு எந்திரத்தின் சக்தி வாய்ந்த ஒரு பெரும்பகுதியும், பத்திரிகைகளும் அதற்கு ஆதரவாகவும் விசுவாசமாகவும் உள்ளன.

இந்நிலையில், இத்தகைய மண் குதிரைகளான ஓட்டுக் கட்சிகளை இனியும் நம்ப முடியாது. அரசியல் ரீதியாகவும் அமைப்பு ரீதியாகவும் பாசிச குண்டர் படையாகத் திரண்டுள்ள இந்துவெறியர்களின் உண்மையான பலம் நாடாளுமன்றத்துக்கு வெளியேதான் உள்ளது என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டு வருகிறது. எனவே, நாடாளுமன்ற அரசியலுக்கு வெளியே, மதச்சார்பற்ற, புரட்சிகர ஜனநாயக சக்திகளின் தீரமிக்க தாக்குதல் போராட்டங்கள் மூலமே இந்துவெறி பாசிசக் கும்பலை முறியடிக்க முடியும்.

# 'தேசிய' நீரோட்டத்தில் கலந்ததே கருணாநிதியின் அரசியல் 'சாதனை'!

இந்திய சுதந்திர நாளைத் துக்க நாளாக அறிவித்தவர் பெரியார்; அவரின் வாரிசுகளோ சுதந்திரப் பொன்விழா ஆண்டில் தி.மு.க. தலைவர் கருணாநிதியின், பவள விழா, கட்சியின் பொன்விழா வருவதை நினைத்துப் புளகாங்கிதம் அடைகின்றனர்.

சலியா உழைப்பு, தோல்வி கண்டு துவளாமை, எழுத்தாற்றல் மூலம் எழுச்சி ஏற்படுத்தும் வல்லமை, நாவன்மை, கட்சியைக் கட்டுக் கோப்பாக வழிநடத்திச் செல்லும் ஆற்றல், கட்சியின் கடைசித் தொண்டனையும் பெயர் சொல்லிப் பாராட்டும் மாண்பு... எனப் பட்டியலிடுகின்றனர் பல்வேறு தரப்பினர்.

குடும்ப அரசியல், விளம்பர மோகம், பழிவாங்கும் போக்கு, இலஞ்ச - ஊழல்... என சில குறைகளையும் சுட்டிக் காட்டுகின்றனர் சிலர்.

இன்று தமிழக அரசியல் வரலாற்றில் புறக்கணிக்க முடியாத ஒரு சக்தியாக உள்ளவர் கருணாநிதி என எதிரிகளும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

தமிழக நலனுக்காக கருணாநிதி சாதித்ததென்ன? தமிழக மக்களின் நல்வாழ்வுக்கு அவர் ஆற்றிய தொண்டு என்ன? இதிலிருந்துதான் கருணாநிதியைப் பரிசீலிக்க வேண்டும்.

14 வயதில் இந்தித் திணிப்பை எதிர்த்து அரசியல் களம் புகுந்தார். இந்த 60 ஆண்டுகளில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக முதல்வராயிருந்தவர்; இன்றைக்கும் முதல்வராயுள்ளார்.

ஆனால் 1989-இல் இந்த முத்தமிழ் வித்தகரின் ஆட்சி, தமிழகத்தில் புற்றீசல்களாகப் பெருகியிருந்த ஆங்கில 'கான்வென்டு' பள்ளிகளைக் கட்டுப்படுத்தவில்லை. இன்று கிராமங்கள் வரை 'கான்வென்டுகள்' புற்றுநோயாகப் பல்கிப் பெருகி, இளங்குருத்தான இளைய தலைமுறையையே கருக்கி வருகின்றன.

இனப்படுகொலை செய்யும் சிங்களக் காடையரின் இலங்கையில் கூட பொறியியல், மருத்துவம் உட்பட அனைத்துக் கல்வியும் தமிழ் வழியில் பயிலலாம். ஆனால், தமிழுக்கென தனி அமைச்சரவை கண்டவரின் ஆட்சியில் முழுமையான தமிழ் வழிக் கல்வியைக் காணோம். இந்தி எதிர்ப்பு, ஆட்சியைப் பிடிப்பதற்கான பிழைப்புவாதமானது.

ஆரம்பகால திரைப்படங்களில் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்த கருணாநிதி இன்று மஞ்சள் துண்டுக்கு 'விஞ்ஞான' விளக்கம் தருமளவு சீரழிந்துள்ளார். 'தீ மிதிப்பது காட்டுமிராண்டித்தனம்' என உண்மையைக் கூறியவர், பார்ப்பன பாசிச மதவெறிக் கும்பல் எகிறிப் பாய்ந்ததும் 'மந்திரிக்குச் சொன்னேன்; மக்களுக்குச் சொல்லவில்லை' என மழுப்பினார். இந்துமதவெறியூட்டி, மக்களை மாய்க்கும் 'பிள்ளையார் விழா'வில் கொழுக்கட்டை சாப்பிடவும் தயாராகிவிட்டார்.

'அடைந்தால், திராவிட நாடு! இல்லையேல் சுடுகாடு' என முழங்கிய 'பகுத்தறிவு'ச் சிங்கங்கள், தடைச் சட்டம் வரலாம் எனக் கேட்ட மாத்திரத்தில் திராவிட நாடு கோரிக்கையைச் சுடுகாட்டு[illegible]னுப்பினர். இன்று அடிப்படைக் கொள்கையைக் கைவிட்ட தி.மு.க., ஆட்சியைப் பிடித்தது உலகில் எங்குமே நடக்காத சாதனை என மேலை அறிஞர்கள் ஆச்சரியப்பட்டு, ஆய்வு செய்வதாகப் பீற்றிக் கொள்கின்றனர்.

இவர்களின் மொழி, இன விடுதலை இலட்சியம் வெறும் மாநில சுயாட்சியானது. இதிலும் உறுதியாக நிற்பதில்லை. காங்கிரசை வீழ்த்தி ஆட்சியைப் பிடித்தது தி.மு.க. பின் அடுத்த தேர்தலிலேயே கருணாநிதி அந்த பாசிச காங்கிரசைத் தூக்கிச் சுமந்தார். எம்.ஜி.ஆர். தனிக் கட்சி தொடங்கிய பின் இரு கழகங்களும் மத்தியில் ஆட்சிக்கு வரும் கட்சிகளுடன் மாறி மாறிக் கூட்டுச் சேர்ந்து, அவர்களின் கைக்கூலிகளாக மாறினர்.

'மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி' என முழக்கமிட்ட கருணாநிதி மாநில உரிமைகளை அடகு வைத்தார். 1974-இல் கர்நாடகாவுடனான காவிரி நீர்ப் பங்கீடு ஒப்பந்தம் முடிவடையும் போது தமிழக உரிமைக்காக நிற்காது, இந்திரா காங்கிரசுடனான நல்லுறவுக்காக விட்டுக் கொடுத்தவர் கருணாநிதி. இன்று தஞ்சை தரிசாகிறது.

சேலம் இரும்பு உருக்காலை, சேது சமுத்திரத் திட்டம், கச்சத் தீவு என தமிழக உரிமைகளைக் கழக ஆட்சி காவு கொடுத்ததைப் பட்டியலிட்டு மாளாது.

அரசியலில் நிரந்தர நண்பனுமில்லை, பகைவனுமில்லை என்ற கடைந்தெடுத்த சந்தர்ப்பவாத அரசியலை நடத்தியவர் கருணாநிதி. அவசர நிலைக் கொடுமைகளை எதிர்த்ததாக மார்தட்டியவர், 1980 தேர்தலில் அதே இந்திராவுடன் கூட்டணி கண்டார்.

'தேனை எடுத்தவன் புறங்கையை நக்குவான்' எனக் கூறி ஊழலை நியாயப்படுத்திய கருணாநிதி, இலஞ்ச - ஊழலையே ஒரு கலையாக்கினார். தமிழகத்தின் பொறுக்கி - கிரிமினல் அரசியலின் பிதாமகன் கருணாநிதிதான். மாவட்டத்திற்கொரு கிரிமினல் அரசியல் தளபதிகளை நியமித்து, பொறுக்கி - கிரிமினல் அரசியல் நடத்தினார். இதைத்தான்



படிப்பகம்

www.padippakam.com

பார்ப்பன பாசிச ஜெயா அதன் உச்சத்திற்கு கொண்டு சென்றார். மலர்க் கிரீடங்கள், ஆளுயர மாலைகள், அலங்கார வளைவுகள் என ஊதாரித்தன, ஆடம்பர அரசியலை கருணாநிதி தொடங்க, தனது கார் செல்லும் பாதையை மலர்ச் சாலையாக்கினார் ஜெயா.

ஜெயாவின் இருண்ட கால ஐந்தாண்டு ஆட்சியிலும் கூட, கருணாநிதி மக்களின் பிரச்சினைகளுக்காக அரசியல் நடவடிக்கை எதுவும் எடுத்ததில்லை. ஜெயாவின் ஆடம்பர - வக்கிர - ஊதாரி - உல்லாச - காட்டாட்சியைக் கண்டு வெறுப்புற்ற மக்களின் எதிர்ப்பு அலையில்தான் ஆட்சியைப் பிடித்தார்.

முன்பு பேச்சில், எழுத்திலாவது தமிழினப் பிரதிநிதியாயிருந்த கருணாநிதி, இன்று ஒரு தரகு முதலாளியாக மாறிவிட்டார். தமிழகத்தில் மட்டுமின்றி ஆந்திரா, கர்நாடகா என கருணாநிதி குடும்பத்தின் தொழில் விரிவடைகிறது.

ஒருபுறம் சந்தர்ப்பவாதம், பிழைப்புவாதம் என அரசியலைச் சீரழித்து, மறுபுறம் இலஞ்ச - ஊழலில் தனது சொத்துக்களை விரிவாக்கினார் கருணாநிதி. கூடவே ஆரம்ப கால கொள்கைகளைக் கை கழுவினார். மொழி - இன உணர்வு, சாதி - மத ஒழிப்பு, பகுத்தறிவு என அனைத்தையும் ஓரங்கட்டி, 'தேசிய' அரசியலுக்குள் நுழைந்தார். மத்தியில் ஆட்சியிலும் பங்கேற்றார்.

தமிழ் உயிர் மூச்சு என முழங்கிய இவர்தான், தமிழ் மக்கள் இசைக்காக திருவையாற்றில் 'கலகம்' செய்த ம.க.இ.க. தோழர்களைக் கைது செய்து, பார்ப்பன கும்பலிடம் தனது விசுவாசத்தைக் காட்டிக் கொண்டார்.

இப்படி சகலத்திலும் 'தேசிய' அரசியலை ஏற்ற கருணாநிதி, இன்றைக்கு, இந்து மதவெறியர்களின் 'தேசிய' அலைவரிசையில் சிந்தித்து செயல்படத் தொடங்கியுள்ளார். இதனுடைய வெளிப்பாடுதான் முஸ்லிம்களை குறி வைத்து ஒடுக்கக் கொண்டு வரப்பட்டுள்ள 'தடா'வின் மறுபதிப்பான 'பொடா' சட்டம். ஒரே கல்லில் இரு மாங்காய் என்பது போல முஸ்லிம்களை மட்டுமல்ல, 'தேசிய' நீரோட்டத்திற்கு எதிராகச் சிந்திப்பவர்களையும் ஒடுக்கலாம்; பாரதீய ஜனதாவிற்கு சேவை செய்து ஆட்சியையும் காப்பாற்றிக் கொள்ளலாம். கூடவே தனது எதிரிகளையும் ஒடுக்கலாம்.

இங்குள்ள பெரும்பாலான பார்ப்பனர்களும் கருணாநிதியின் இந்த மாற்றத்தினால் அவரை ஆதரிக்கத் தயங்கவில்லை. 'அண்ணாமலை பல்கலையில் டாக்டர் பட்டம் வாங்க, உதயகுமாரைக் கொன்று, அவரது பெற்றோரையே தன் பிள்ளையில்லை என்று சொல்ல வைத்த கருணாநிதியில்லை; அன்பல் தர்மலிங்கத்தின் பாலியல் சீரழிவை மூடி மறைக்க திருச்சி கிளைவ் மாணவர் விடுதியில் கொலைவெறித் தாக்குதல் நடத்தியவரல்ல; இதையொட்டி தமிழக மாணவர்கள் கொதித்தெழுந்த போது நெல்லை பாளை கல்லூரியில் லூர்துவைக் கொன்றவரல்ல; பூச்சி மருந்து, அரிசி பேரம், வீராணம் என அடுத்தடுத்து ஊழல் செய்தவரல்ல; அந்த கருணாநிதி மாறிவிட்டார். இவர் நேர்மையான ஆட்சி தர முயல்கிறார். மேல்மட்டத்தில் ஊழல் இல்லை' என்று பார்ப்பனர்கள் பேசினாலும், அவர்கள் கருணாநிதியை ஆதரிப்பதற்கு இந்த 'மாற்றம்' உண்மைக் காரணமல்ல.

அவர் தேசிய நீரோட்டத்திற்கு மாறியதை, பகுத்தறிவைக் கை கழுவியதை, பார்ப்பன எதிர்ப்பைக் கைவிட்டதையே, முதிர்ந்த - பக்குவப்பட்ட - மாறிய கருணாநிதி எனக் கூறி ஆதரிக்கின்றனர்.

அ.தி.மு.க. கட்சி தனிப்பட்ட எம்.ஜி.ஆருக்காகத் திரண்டவர்களைக் கொண்டிருந்தது. பொறுக்கி - கிரிமினல் - கவர்ச்சி அரசியலும் பிழைப்புவாதமும் சந்தர்ப்பவாதமுமே அ.தி.மு.க.வின் மேலிருந்து கீழ்வரை அன்றிருந்தது, இன்றும் உள்ளது. தி.மு.க. அப்படியல்ல. கொள்கை உண்டு எனப் பேசுகிறார்கள். என்ன கொள்கை? 'சொல்லிக் கொள்ளப்பட்ட கொள்கைகளை எல்லாம் கை கழுவி விட்டு, அதே பொறுக்கி - கிரிமினல் - கவர்ச்சி அரசியலும் கேடு கெட்ட பிழைப்புவாதமும் சந்தர்ப்பவாதமும் தவிர வேறு என்ன உள்ளது?

தி.மு.க., பாரதீய ஜனதாவுடன் கூட்டு வைக்காது என எந்த தி.மு.க. தொண்டராவது உறுதி கூற முடியுமா? மாட்டார்கள். இதுதான் 60 ஆண்டு கால கருணாநிதியின் சாதனை. அண்ணா கைவிட்ட கொள்கைகளை முற்றாகக் கை கழுவி, கட்சியை பிழைப்புவாத சந்தர்ப்பவாதக் கும்பலமாக மாற்றி, தன்னைச் சுற்றி துதிபாடிகள் கூட்டம் ஒன்றைக் கட்டி, தி.மு.க.வை தனது குடும்ப சொத்தாக்கி, ஸ்டாலினை அதன் வாரிசாக்குகிறார். இந்த நாய்ச் சண்டையில்தான் ம.தி.மு.க. பிரிந்து, இன்று பார்ப்பன பாசிச கும்பலுடன் கூடிக் குலாவுகிறது. கருணாநிதியின் வளர்ப்பல்லவா?

ஒருபுறம் பார்ப்பன மதவெறிக் கும்பல் கோவையில் நரபலியாட்டம் போட்டது மட்டுமின்றி, குண்டு வெடிப்புக்குப் பின் தி.மு.க. கட்சி அலுவலகம், மன்றங்கள் பலவற்றையும் அடித்து நொறுக்கி, தரைமட்டமாக்கி, அரசியல் நடத்த அனுமதி மறுக்கிறது. கொள்கையற்ற, பிழைப்புவாதக் கும்பல் என்பதால் தி.மு.க. கைகட்டி, வாய் பொத்தி நிற்கின்றது.

மறுபுறம் பார்ப்பன ஜெயாவோ நாளொரு அறிக்கை, பொழுதொரு குற்றச்சாட்டு கூறி தி.மு.க. ஆட்சியைக் கலை எனப் பகிரங்கமாக, பார்ப்பன மதவெறி பாரதீய ஜனதாவே முகம் சுழிக்கும்படி கழிசடை அரசியல் நடத்துகிறது.

கொள்கை, கோட்பாடு ஏதுமற்ற கருணாநிதியோ மத்திய அரசுக்குக் காவடி தூக்குகிறார். அதன் மூலம் ஆட்சியைக் காப்பாற்றி விடலாம் எனக் கனவு காண்கிறார்.

பார்ப்பன பாசிச ஜெயாவிற்கும் பார்ப்பன பாசிச மதவெறிக் கும்பலுக்கும் இடையிலான அறிக்கைப் போரில் பல விசயங்கள் புழுத்து நாறுகின்றன. பா.ஜ.க. 'மத்தியில் ஆட்சியமைத்ததும், தி.மு.க. ஆட்சியைக் கலைப்போம்' என இரகசிய வாக்குறுதி தந்ததாக 'ஜெ' போட்டு உடைக்கிறார். பா.ஜ.க. பொதுச் செயலர் ஜனா. கிருஷ்ணமூர்த்தியோ, 'அப்படி ஏதும் வாக்குறுதி இல்லை. இடையில் தலைவர்கள் யாரேனும் வாக்கு கொடுத்தார்களா எனத் தெரியாது' என நழுவுகிறார். தேசியத் தலைவர்களோ 'இரகசிய உடன்பாடு ஏதுமில்லை. எல்லாமே வெளிப்படையானதுதான்' என்கின்றனர்.

இவ்வளவுக்கும் பின்னர் கருணாநிதி மேல்மட்ட அரசியல் மட்டுமே நடத்துகிறார். 356-வது சட்டப் பிரிவை எதிர்ப்பதிலேயே எத்தனை சந்தர்ப்பவாத பல்டிகள்? இன்று ஆட்சி போய்விடும் என்ற பயத்தில் நாங்கள் அன்றே எதிர்த்தோம் என பூசி மெழுகுகிறார். ஐக்கிய முன்னணி ஆட்சியிலேயே 356-ஐ நீக்கப் போராடியிருக்கலாமே!

அன்றைக்கு ஆபத்து இல்லை என எதிர்க்கவில்லை. இன்றைக்கும் மக்கள் மத்தியில், பா.ஜ.க.வின் - பாசிச ஜெயாவின் மக்கள் விரோதக் கொள்கைகளை எதிர்த்து பிரச்சாரம் செய்யத் தயாராயில்லை. மாறாக அ.தி.மு.க., கூட்டணியிலிருந்து தானாக வெளியேறிவிடும். பிறகு பா.ஜ.க.வை ஆதரித்தோ, மாற்று அரசு அமைவதில் பங்கெடுத்தோ பதவியைப் பாதுகாக்கலாம் எனக் காத்திருக்கிறார். இது சந்தர்ப்பவாதமும், தி.மு.க.வின் தற்கொலைப் பாதையுமே ஆகும்.

● இராசன்



பவள விழா மேடையில் கருணாநிதியும் துதிபாடிகளும்: ஆடம்பர வக்கிர அரசியல்



படிப்பகம்

www.padippakam.com

# அகண்ட பாரத கனவும் அணுகுண்டு வெடிப்பும்



ஐம்பது பேரைக் குண்டு வைத்துக் கொல்பவன் பயங்கரவாதி; ஐந்து லட்சம் பேரைக் கொல்லும் அணுகுண்டு வெடிப்பவன் தேச பக்தன்! - இப்படி ஒரு புதிய அகராதியை இந்து வெறி ஆட்சியாளர்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அந்த தேச பக்தியின் விலையும் சாதாரணமானதல்ல. பல்லாயிரம் கோடி ரூபாய்!

பாசிச ராஜீவ் ஆட்சிக்கு வந்ததும், அணுகுண்டு வெடிப்புச் சோதனை திட்டத்துக்கு எவ்வளவு செலவாகும் என்று அன்றைய தலைமைத் தளபதி சுந்தர்ஜியிடம் கேட்டபோது, அவர் அணு விஞ்ஞானிகளிடம் கலந்தாலோசித்து, ஏறத்தாழ 10000 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பீட்டு அறிக்கை கொடுத்தார். 1985-ல் இத்திட்டத்திற்கு ரூ. 10,000 கோடி என்றால், இன்றைய ரூபாய் மதிப்பின்படி அதைவிட இருமடங்குக்கு மேல் செலவிட்டு, பொஹ்ரானில் அடுத்தடுத்து 5 அணுகுண்டுகளை வெடித்து, நாட்டுக்குப் பெருமை ஏற்பட்டுள்ளது என்ற 'திறமையான' பிரதமர் பூரித்துப் போகிறார். இதைவிட வக்கிரமும் அயோக்கியத்தனமும் வேறு இருக்க முடியுமா?

ஏழை நாடான இந்தியாவில், ஏறத்தாழ 35 கோடிப்பேர் - மொத்த மக்கட் தொகையில் 38% பேர் முழு ஏழ்மை - அரைப்பட்டினி நிலையில் உள்ளபோது, பல ஆயிரம் கோடி ரூபாய் செலவிட்டு அணுகுண்டை வெடிப்பது அயோக்கியத்தனம் என்று எதிர்ப்பவர்களைப் பார்த்து, நீ தேச பக்தி இல்லாதவன் என்று இந்து வெறிப் பரிவாரங்கள் சாடுகின்றன.

பாசிஸ்டுகளின் அகராதியில் தேசபக்தி என்பதற்கு வேறு பொருள் உண்டு. பாசிச இட்லர் கூட தனது போர் வெறி - ஆக்கிரமிப்பு, அடக்குமுறைகளை எதிர்த்தவர்களைத் தேசபக்தி இல்லாதவர்கள் என்று குற்றம் சாட்டி சிறையிலிட்டு வதைத்தான். பாசிச இராசீவ் கூட ஃபோபார்ஸ் பீரங்கிக் கொள்ளையில் சிக்கியுள்ளதை அம்பலப்படுத்தி எதிர்த்தவர்களை, தேச பக்தி இல்லாதவர்கள் என்று சாடினார். அந்த அணி வரிசையில் இப்போது இந்துவெறியர்களும் சேர்ந்துள்ளனர்.

அவர்களது தேசபக்தி என்பதற்கு அண்டை நாடுகளுடன் பகைமையை வளர்த்து, ஆத்திரமூட்டி போரை நடத்துவது, அண்டை நாடுகளை அச்சுறுத்தி அடிபணிய வைப்பது, அகண்ட பாரதத்தை நிறுவுவது, இத்தகைய சுயநல - ஆதிக்க நோக்கங்களுக்காக நாட்டையும் மக்களையும் பலியிடுவது என்பதுதான் உண்மையான பொருள்.

முந்தைய பிரதமர்களான நேரு, சாஸ்திரி, இந்திரா, ராஜீவ் ஆகியோர் சீனப் போர், பாகிஸ்தான் போர், வங்கதேசப் போர், ஈழ ஆக்கிரமிப்பு, மாலத்தீவு தலையீடு, நேபாள பொருளாதாரத் தடை ஆகியவற்றின் மூலம் தெற்காசியாவில் இந்தியாவைப் பிராந்திய துணை வல்லரசாக்கினர். இந்துவெறி பிரதமரோ இன்னும் ஒருபடி முன்னேறி, அணுகுண்டுகளை வெடித்து, இந்தியாவை உலகின் 6-வது அணு ஆயுத வல்லரசாக்கிவிட்டதாகப் பீற்றிக் கொள்கிறார். இந்த ரவுடித்தனத்தை தேசியப் பெருமிதம் என்று இந்துவெறிப் பரிவாரங்களும் தேசிய பத்திரிகைகளும் உச்சி முகர்ந்து கொண்டாடுகின்றன.

குஜராத்தில் அண்மையில் வீசிய கடும் புயல் - வெள்ளத்தால் பல நூறு பேர் மாண்டு போயினர். நிவாரண உதவிகள் செய்யக்கூட வக்கின்றி ஆட்சியாளர்கள் நாட்டு மக்களிடம் நன்கொடை கேட்டு கையேந்தி நிற்கின்றனர். இந்த இலட்சணத்தில் - குடிக்கக் கூழில்லாதபோது கொண்டைக்குப் பூ கேட்ட கதையாக, அணுகுண்டு வெடிப்பது அயோக்கியத்தனமானது என்று எதிர்ப்போரைப் பார்த்து, நாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று பீதியூட்டுகிறது ஆளுங் கும்பல்.




நாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்பது உண்மைதான். அது நமது நாட்டுக்கு வெளியே - எல்லைக்கு அப்பாலிருந்து வரவில்லை. அது நமது நாட்டுக்குள்ளேயேதான் இருக்கிறது. நாடு மறுகாலனியாக்கப்பட்டு வருவதன் விளைவாக, அந்நிய மூலதன இரும்புப் பிடியில் நமது நாடு சிக்கித் தவிக்கிறது. தேசியத் தொழில்கள், சிறுதொழில்கள் நசிந்து பல்லாயிரக்கணக்கானோர் வாழ்விழந்து நிற்கின்றனர். விவசாயம் புறக்கணிக்கப்பட்டு, வேதனையில் தவிக்கும் விவசாயிகளில் பலர் கடன் சுமை தாளாமல் தற்கொலை செய்து கொள்கின்றனர். விவசாயத்துக்கான இலவச மின்சாரம் உலக வங்கியின் உத்திரவுப்படி ரத்து செய்யப்படுகிறது. வறட்சியும் பஞ்சமும் நாட்டைக் கவ்வி நிற்கிறது. அந்நியக் கடன் சுமையும் அதற்குச் செலுத்தும் வட்டியும் பூதாகரமாகி நாட்டின் பொருளாதாரத்தையே திவாலாக்கி வருகிறது. ரூபாயின் மதிப்பு செல்லாக் காசாகி விட்டது.

லஞ்சம், ஊழல், பிழைப்புவாதம், கிரிமினல் - ரௌடித்தனங்களால் நாடாளுமன்ற ஜனநாயகம் அங்கம் அங்கமாக வெட்டிச் சிதைக்கப்பட்டு, பாசிச அடக்குமுறைக்கான அபாயம் கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறது. ஆட்சியாளர்களின் கேடுகெட்ட - துரோகத்தனமான கொள்கைகளால் உள்நாட்டிலேயே உருவாகியுள்ள வறுமை, வேலையின்மை, விலையேற்றம், லஞ்ச - ஊழல், சாதி - மதவெறி முதலான அணுகுண்டுகள் வெடிக்கக் காத்திருக்கின்றன. இந்த ஆபத்துக்களை உருவாக்கி வளர்த்த இந்து வெறியர்கள் அணுகுண்டு வெடிப்பின் மூலம் இவற்றை மேலும் தீவிரப்படுத்தியுள்ளனர்.

அணுகுண்டு வெடிப்பைத் தொடர்ந்து அமெரிக்காவும் ஜப்பானும் பொருளாதாரத் தடைகளை விதித்து, 'உதவி'களை நிறுத்திவிட்டன. இப்பொருளாதார உதவிகள் நமது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு சதவீத அளவுதான் என்றும், இதனால் பெரிய பாதிப்பு ஏதும் வராது என்றும், எல்லா சவால்களையும் சமாளிக்கும் ஆற்றல் நமக்கு உண்டு என்று ஈனக்குரலில் ஆட்சியாளர்கள் வீர வசனம் பேசி வருகின்றனர்.

ஆனால் பொன்விழா கண்ட 'சுதந்திர' இந்தியாவில் அந்த ஒரு சதவீத உதவிக்காக கையேந்தி நிற்கும் அவல நிலைதான் இன்னும் நீடிக்கிறது. குறிப்பாக, சமூக நலத்



படிப்பகம்

www.padippakam.com



திட்டங்கள், மருத்துவ - சுகாதாரத்திற்கான ஒதுக்கீடுகள் ஒவ்வொரு வரவு- செலவு அறிக்கையிலும் படிப்படியாகக் குறைக்கப்பட்டு, இன்று இத்தகைய திட்டங்களே ஏறத்தாழ கைவிடப்பட்ட நிலையில் உள்ளன. சாதாரண இளம் பிள்ளைவாதம், அம்மை, மலேரியா தடுப்புக்குக்கூட அந்நிய ஏகாதிபத்தியங்களின் 'உதவி'யைச் சார்ந்திருக்க வேண்டிய வெட்கக்கேடான நிலையில்தான் இந்தியா உள்ளது. இந்நிலையில் ஏகாதிபத்தியங்களின் 'உதவி'யும் நின்று போனால் உழைக்கும் மக்களின் வாழ்வு கடுமையாகப் பாதிக்கப்படும்.

தற்போது, ''போலியோ'' எனும் இளம் பிள்ளைவாத நோய்த் தடுப்புக்காக ஜப்பான் அளித்துவரும் ரூ. 12 கோடி நிதியுதவி நிறுத்தப்பட்டுள்ளதால், இனி நாடு தழுவிய போலியோ ஒழிப்புத் திட்டம் முடமாகிப் போகும். இனி பிறக்கும் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுக்க முடியாமல் புதிய தலைமுறை பாதிக்கப்படும். இதேபோல, அரசு மருத்துவமனைகளை நவீனப்படுத்துவதற்கென ஜப்பான் வழங்க உத்தேசித்திருந்த 4000 கோடி ரூபாய் நிதியுதவியும் இனி கிடைக்காது. ஈராக்கின் மீது ஏகாதிபத்திய நாடுகள் விதித்த பொருளாதாரத் தடையால், அந்நாட்டின் பச்சிளங் குழந்தைகள் கொத்துக் கொத்தாக மாண்டு போகும் கொடுமை தொடர்கிறது. அணுகுண்டு வெடிப்பால் இந்தியாவும் அத்தகைய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இவை தவிர, அணுகுண்டு வெடிப்பின் விளைவாக இன்று தர்மபுரி மாவட்டத்தின் ''ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம்'' கானல் நீராகிவிட்டது. மாவட்டத்தின் 75% பகுதியின் குடிநீர் தேவை நிறைவேறும் என்று விளம்பரப்படுத்தப்பட்டு, திட்டப் பணிகள் ஏறத்தாழ முடிவடைந்த நிலையில் ஜப்பானின் கடனுதவி நிறுத்தப்பட்டு திரிசங்கு நிலையில் உள்ளது. இதேபோல மே. வங்கம், இராசஸ்தான் மாநிலங்களில் தொடங்கப்பட்ட குடிநீர் மற்றும் பிற சமூக நலத் திட்டங்கள் அணுகுண்டு வெடிப்புக்குப் பிறகு அந்நிய கடனுதவியின்மையால் முடங்கிவிட்டன.

அமெரிக்கா மற்றும் ''ஜீ-8'' எனப்படும் வல்லரசு நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடைகளால் ரூ. 50,000 கோடி அளவுக்கு ஆண்டுதோறும் இந்தியாவின் வளர்ச்சித் திட்டங்கள் பாதிப்படையும். சர்வதேசக் கடன் நிறுவனங்கள் இந்தியாவுக்கு வழங்கும் கடன்களுக்கு அமெரிக்க ஏற்றுமதி - இறக்குமதி வங்கியும், வெளிநாட்டு தனியார் முதலீட்டுக் கழகமும் கடன் உத்திரவாதம் அளிக்க மறுத்துவிட்டதால், இந்தியாவின் தொலைத் தொடர்பு, அடிக்கட்டுமானத் துறை திட்டங்கள் இனி நத்தை வேகத்தில்தான் நகர முடியும்.

எல்லாவற்றையும் விட, அமெரிக்காவின் பொருளாதாரத் தடையால் டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு சரிந்து கொண்டே போகிறது. அணுகுண்டு வெடிப்புக்குப் பிறகு இந்தியப் பங்குச் சந்தைகளில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டு இன்னமும் அதிலிருந்து மீள முடியவில்லை. அணுகுண்டு வெடித்த மே 11-ந் தேதியன்று ரூ. 39.79 ஆக இருந்த டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு, கடந்த ஒரு மாதத்தில் ரூ. 42.00 ஆக அதள பாதாளத்தை நோக்கிப் பாய்கிறது. இந்த இலட்சணத்தில் பொருளாதாரத் தடைகளால் பாதிப்பு ஏதும் ஏற்படாது என்று பசப்புவது, கேழ்வரகில் நெய் வடிந்த கதைதான்.



தேசிய வெறியாட்டம்: ''அடல்ஜி, நாங்கள் உங்கள் பக்கம்'' என்று அணுகுண்டு வெடிப்பைக் கொண்டாடும் இந்துவெறியர்கள்.

இதுவும் போதாதென்று, எந்த வெளிநாட்டையும் சார்ந்திராமல் சுயசார்புடன் நமது விஞ்ஞானிகள் அணுகுண்டு வெடிப்புச் சாதனையை நிகழ்த்தியுள்ளார்கள் என்று ஆளும் இந்து வெறியர்களும் பார்ப்பன பத்திரிகைகளும் கூசாமல் புளுகி வருகின்றன. அனைத்து ஓட்டுக் கட்சிகளும் இந்தக் கேலிக் கூத்தை வெட்கமின்றி ஆதரித்து நிற்கின்றன. இந்தியர்களால் தமது இந்திய வாரிசுகளை உருவாக்குவதைத் தவிர வேறெதுவும் சுதேசி இல்லை என்று மேலை நாட்டுப் பத்திரிகைகள் பரிகசித்து வரும் நிலையில், சாதாரண சோப்பு, பேனா, செருப்பு, மிதிவண்டி தயாரிப்பதற்கான தொழில் நுட்பத்துக்குக் கூட ஏகாதிபத்திய நாடுகளை இந்தியா சார்ந்திருக்கும் நிலையில், சுயசார்புடன் அணுகுண்டு வெடித்துச் சாதனை புரிந்துள்ளது என்பதை நம்பத்தான் முடியுமா?

1974-இல், 'பாசிச அன்னை' இந்திரா காலத்தில் இந்தியா வெடித்த முதல் அணுகுண்டு பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் தயவில்தான் வெடிக்கப்பட்டது. நாட்டு வெடிகுண்டுகளைத் தவிர, அனைத்து போர்த் தளவாடங்களையும் ஆய்வுச் சாதனங்களையும் ஏகாதிபத்தியங்களிடமிருந்து இறக்குமதி செய்துவரும் இந்தியா, சுயசார்புடன் அணுகுண்டு வெடித்துள்ளது என்றால், அதை நம்புவதற்கு நாட்டு மக்கள் இளிச்சவாயர்கள் அல்ல.

இது ஒரு புறமிருக்கட்டும். 'பொன்விழா' கண்ட இந்தியாவில் காலரா, மலேரியா, ஈ, கொசுக்களைக் கூட ஒழிக்க முடியாத நிலையில், கடந்த ஐந்தாண்டுகளாக பருத்தியைத் தாக்கும் பூச்சிகளைக் கூட ஒழிக்க முடியாத நிலையில், அணுகுண்டு வெடிப்பை சாதனையாகப் பெருமைப்பட்டுக் கொள்ளும் வக்கிரமான அற்பத்தனம் போதாதென்று, ஏழை நாடாக இருந்தாலும் கோழைகளல்ல; தேசபக்தி மிக்க வீரர்கள் என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டதாக இந்து வெறியர்கள் பீற்றிக் கொள்கிறார்கள்.

அணுகுண்டு வெடிப்பைத் தொடர்ந்து அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்ததும் அரண்டு போய், பீகாரின் கனிமச் சுரங்கங்களை அவசரமாக ஏகாதிபத்தியக் கொள்ளைக்கு தாரை வார்த்துக் கொடுத்துள்ள இந்தத் தொடை நடுங்கிகள், நாட்டுப்பற்று - வீரம் பற்றி சவடால் அடிக்க எந்த அருகதையும் இல்லை. வரவு - செலவு அறிக்கைக்கு முன்னும் பின்னும் ஏகாதிபத்திய கொள்ளைக்கு கதவை அகலத் திறந்துவிட்டு நாடு மறுகாலனியாவதைத் தீவிரமாக்கி வரும் இத்தேசத் துரோகிகளுக்கு, நாட்டுப்பற்று பற்றிப் பேச என்ன யோக்கியதை இருக்கிறது?

இந்துவெறி ஆட்சியாளர்களுக்கு, நாட்டின் மீது உண்மையில் பற்று இருக்குமானால், நாட்டை மறுகாலனியாக்கிவரும் ஏகாதிபத்தியங்களின் ஆதிக்க நிறுவனமான உலக வர்த்தக நிறுவனத்திலிருந்து (WTO) வெளியேற வேண்டியதுதானே? உலக வங்கி, ஐ.எம்.எஃப்.பின் கட்டளைகளுக்கு அடிபணிய மறுத்து எதிர்த்து நிற்க வேண்டியதுதானே? சுதேசி நாடகமாடும் இந்துவெறி ஆட்சியாளர்கள் பொருளாதாரத் தடை விதிக்கும் ஏகாதிபத்திய வல்லரசுகளை எதிர்த்து நின்று, அவற்றின் நிறுவனங்களை வெளியேற்றி, சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வேண்டியதுதானே? ஏகாதிபத்தியங்கள் கோலெடுத்தால் குரங்காக மாறி


படிப்பகம்

www.padippakam.com



ஆடும் இந்தக் கோழைகள், தமது சுயநல - ஆதிக்க நோக்கங்களுக்காக, தேசிய வெறியூட்டும் நோக்கத்திற்காக இத்தகைய தேசபக்தி நாடகமாடி வருகின்றனர்.


கூட்டணிக் கட்சிகளின் கழுத்தறுப்பால் தடுமாறி நிற்கும் கையாலாகாத அரசு என்று அம்பலப்பட்டுள்ள நிலையில், அணுகுண்டு வெடிப்பைச் சாதனையாகக் காட்டி, துணிவும் ஆற்றலும் கொண்டவர்கள் என்ற பிரமையை நாட்டு மக்களிடம் ஏற்படுத்துவது; அணுகுண்டு சாதனையைக் காட்டி எதிர்க் கட்சிகளை வாயடைக்கச் செய்வது; நாடு மறுகாலனியாக்கப்பட்டு வருவதன் விளைவாக தீவிரமாகிவிட்ட வறுமை, வேலையின்மை, விலையேற்றம் முதலான பிரச்சினைகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்பி, அண்டை நாடுகளால் நமக்கு ஆபத்து என்று பீதியூட்டி தேசிய வெறி - போர் வெறி போதையில் மக்களை ஆழ்த்தி, அரசியல் - பொருளாதார நெருக்கடிகளிலிருந்து தற்காலிகமாகத் தப்பித்துக் கொள்ளும் நோக்கத்தோடுதான் இந்துவெறி ஆட்சியாளர்கள் அவசரமாகவும் இரகசியமாகவும் அணுகுண்டு வெடிப்பை நடத்தியுள்ளனர்.

மதக் கலவரங்களைக் கட்டவிழ்த்து விட்டு எவ்வளவு முயற்சி செய்த போதிலும் நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையை இந்து வெறியர்களால் பெற முடியவில்லை. கூட்டணிக் கட்சிகளின் கழுத்தறுப்பால் எப்போது வேண்டுமானாலும் கவிழலாம் என்கிற நிலையிலேயே இந்து வெறியர்களின் கூட்டணி ஆட்சி உள்ளது. ஒரு வேளை ஆட்சி கவிழ்ந்து தேர்தல் வந்தால், அணுகுண்டு சாதனையைக் காட்டி, தேசிய வெறி - போர் வெறியைக் கிளறிவிட்டு, நாட்டு மக்களிடம் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுவிட முடியும் என்ற தொலைநோக்கு திட்டத்துடனும் இந்து வெறியர்கள் அணுகுண்டு வெடிப்பை நடத்தியுள்ளனர்.

இது தவிர, காஷ்மீர் பிரச்சினையை முன் வைத்து பாகிஸ்தானுடன் ஒரு குறுகிய போரில் இறங்கவும் இந்து வெறியர்கள் அலைகின்றனர். அதற்காகவே சீனாவையும் பாகிஸ்தானையும் வம்புக்கிழுத்து ஆத்திரமூட்டும் வெறித்தனமான பிரச்சாரத்தை ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இந்தியா ஆக்கிரமித்துக் கொண்டுள்ள காஷ்மீரோடு பாக். வசமுள்ள காஷ்மீரையும் சேர்த்துக் கைப்பற்ற, பாகிஸ்தானுடன் போர் தொடுக்கும் நோக்கத்திற்காகவே இந்து வெறி பாசிச தலைமைத் தளபதியும், ''இரண்டாவது பட்டேலு''மான அத்வானியிடம் காஷ்மீர் விவகாரப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

போர்வெறி பிடித்தலையும் இந்துவெறி ஆட்சியாளர்களைப் போலவே, பாகிஸ்தானின் சர்வாதிகார ஆட்சியாளர்களும் போட்டியாக 6 அணுகுண்டுகளை வெடித்து, தெற்காசிய பிராந்தியத்தை அணு ஆயுதப் போருக்கான அபாயத்தில் தள்ளிவிட்டுள்ளனர். இந்தியாவைப் போலவே ஏழை நாடான பாகிஸ்தானில் தீவிரமாகிவிட்ட உள்நாட்டு நெருக்கடிகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்பி, தேசிய வெறியும் போர் வெறியும் ஊட்டி தீராப் பகைமையை அந்நாட்டு சர்வாதிகாரிகள் வளர்த்து வருகின்றனர்.

அணுகுண்டு வேண்டாம்! உணவு வேண்டும்; வீடு வேண்டும்!'' - தலைநகர் தில்லியில் நடந்த அணுகுண்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்.




பகைமையும் போர் வெறியுமிக்க இரு நாடுகளில் யார் அணு ஆயதப் போரை நடத்தினாலும் அதன் வெற்றியைக் கொண்டாட ஒரு இந்தியனோ, ஒரு பாகிஸ்தானியோ கூட உயிரோடு இருக்க மாட்டான். பேரழிவைக் கொண்டு வரும் இத்தகைய போரை இந்திய, பாகிஸ்தானிய உழைக்கும் மக்கள் ஒன்றுபட்டு முறியடிக்க வேண்டியதே இன்றைய அவசர அவசியமாகியுள்ளது. இரு நாடுகளின் போர்வெறி பிடித்தலையும் சர்வாதிகார ஆட்சியாளர்களை முறியடித்து தூக்கியெறிவதே அதற்கு முதற் தேவையாக உள்ளது.

அணுகுண்டு வெடிப்பைக் காட்டி தேசிய வெறி - போர் வெறியூட்டுவதையும், நாட்டுக்கு ஆபத்து என்ற பெயரில் அவசர நிலைப் பிரகடனம் - அடக்குமுறைச் சட்டங்களைப் பிறப்பித்து மக்களை ஒடுக்குவதையும், அணுகுண்டு வெடிப்பினால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சுமைகளை மக்கள் மீது திணிப்பதையும் எதிர்த்து இந்திய - பாக். மக்கள் தத்தமது நாடுகளில் பெரும்படையாய்த் திரண்டெழ வேண்டும். எவ்வளவு விரைவாகவும் உறுதியாகவும் இவற்றைச் செய்கிறோமோ அதைப் பொருத்தே இந்திய - பாகிஸ்தானிய சர்வாதிகாரிகளின் முடிவு நிச்சயிக்கப்படும்.

• மனோகரன்

## பொய் வழக்கு - கைது - 'பொடா'வை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம்

கோவையில் 30.5.98 அன்று இந்து - முஸ்லிம் மதவெறிக் கும்பல்களை எதிர்த்து மகஇக நடத்திய பொதுக் கூட்டத்தில் பேசிய தோழர்கள் மணிவண்ணன் (மகஇக செயலர், கோவை), காளியப்பன், (மகஇக மாநில இணைச் செயலர்), இராசேந்திரன் (தொழிலாளர் பிரச்சாரக் குழு அமைப்பாளர், கோவை) ஆகியோர் ராஜதுரோகம் (124 A), பல்வேறு வகுப்புகளிடையே பகைமையைத் தூண்டுவது (153 A) என்ற பொய்க் குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும், தமிழ்நாடு பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் திரும்பப் பெறக் கோரியும் தஞ்சையில் 10.6.98 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்திற்கு தஞ்சை மகஇக தோழர் அருள் தலைமை வகித்தார். தஞ்சை மகஇக தோழர் இராவணன் ஆர்ப்பாட்டத்தைத் துவக்கி வைத்து உரையாற்றினார்.

திருச்சி மகஇக தோழர் சுரேஷ் கண்டன உரையாற்ற, திருச்சி புமாஇமு அமைப்பாளர் தோழர் சேகர் சிறப்புரை ஆற்றினார். மாற்றுக் கட்சிகள், அமைப்புகளைச் சார்ந்த நண்பர்கள் பலர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

கைதைக் கண்டித்து கோவையிலும், தமிழகத்தின் பிற பகுதிகளிலும் சுவரொட்டி இயக்கம் எடுக்கப்பட்டது.

ம.க.இ.க.,
தஞ்சை.



படிப்பகம்

www.padippakam.com

# போலீசு - ஓட்டுக் கட்சிகளின் ஆசியோடு கந்துவட்டிக் கும்பலின் சாதி வெறியாட்டம்

விவசாயம் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவதால் கிராமப்புறங்கள் வாழ வழியற்றவையாக மாறி வருகின்றன. அரசின் தாராளமய, தனியார்மயக் கொள்கைகளால் நகரங்களில் வேலை வாய்ப்பும் பறிபோகிறது.

இதனால் வாழ்விழந்த உழைப்பாளிகள், கந்து வட்டிக் கொடுமையில் வீழ்கின்றனர். கந்துவட்டிக்காரர்களோ மனிதாபிமானமற்ற முறையில் சுரண்டுகின்றனர், ஒடுக்குகின்றனர். அவர்கள் சொந்த சாதிக்காரன் என்பதால் குறைந்த வட்டிக்குத் தருவதில்லை; அவர்கள் வீட்டுப் பெண்டு, பிள்ளைகளை விட்டுவிடுவதில்லை. இப்படிப்பட்ட கந்து வட்டிக் கொடுமைக்கு ஆளானவர்தான் குமார்.

தருமபுரியில் கோல்டன் தெருவைச் சேர்ந்த குமார், குப்பாண்டித் தெருவைச் சேர்ந்த முருகனிடம் ரூ. 1000/- கடன் வாங்கியிருந்தார். சாதாரண கடன் அடையும்படி பணம் கட்டியும், கந்து வட்டி என்பதால் கடன் முழுதாக அடைபடவில்லை. நிலுவைப் பணத்திற்கு வட்டிமேல் வட்டி போட்டு கடனைப் பூதாகரமாக்கினான் கந்துவட்டி முருகன். குமாரின் மிதிவண்டியைப் பிடுங்கிக் கொண்டான். கடன் கட்ட இயலாத குமாரின் வீட்டிற்கு 20 ரவுடிகளுடன் வந்து முருகன் தகராறு செய்தான். குமாரின் மண்டையை உடைத்து, இரத்தம் சொட்ட சொட்ட இழுத்துச் செல்ல முயன்ற கந்துவட்டி ரவுடிக் கும்பலை, கோல்டன் தெரு உழைக்கும் மக்கள் விரட்டியடித்தனர்.

கோல்டன் தெருவிலுள்ளவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். குப்பாண்டி தெருவிலுள்ளவர்கள் வன்னிய சாதியினர். இச்சாதியினரில் தான் கந்துவட்டிக்கு விடுபவர்கள் உள்ளனர். அடிபட்டு ஓடிய கந்து வட்டி ரவுடிகள் ஒருபுறம் சாதி வெறியைத் தூண்டி வன்னிய உழைக்கும் மக்களை அணி திரட்டினர். மறுபுறம் இலட்சக்கணக்கில் பணம் கந்துவட்டிக்குத் தந்துள்ளவர்கள், இயல்பாக ஒன்று திரண்டனர். தாழ்த்தப்பட்டவர்களைத் தாக்குவதன் முக்கிய நோக்கம், கொடுத்த பணத்திற்கு ஆபத்து வந்துவிடக் கூடாது என்பது மட்டுமல்ல; கந்து வட்டி கொடுமையால் வன்னியரிடையேயும் தற்கொலைகள் நடப்பதால், வன்னிய உழைக்கும் மக்கள், தாழ்த்தப்பட்டவர்களுடன் இணைந்து கந்து வட்டிக்கு எதிராகத் திரண்டு விடக் கூடாது என்பதுமாகும்.

200-க்கும் மேற்பட்டவர்கள் ஆயுதங்களுடன் கோல்டன் தெருவில் நுழைந்து சூறையாடினர். தாழ்த்தப்பட்டவர்கள் திருப்பித் தாக்கவே, ஓடிவிட்டனர். இதற்குள் சில வீடுகள், கடைகளை அடித்து நொறுக்கி விட்டனர். இத்தாக்குதலுக்கு திருநாவுக்கரசின் எம்.ஜி.ஆர். அதிமுகவைச் சேர்ந்த கந்துவட்டிக் கொள்ளையன் பழனி தலைமை தாங்கினான். பின் வாங்கி ஓடிய ரவுடிகள் மீண்டும் சாதி வெறியைத் தூண்டி, பெரும் கலவரம் செய்ய திட்டமிட்டனர்.

முதல் கலவரம் நடந்ததுமே பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட பெண்கள், திரண்டு சென்று, காவல் துறையிடம் புகார் செய்தனர். அப்பெண்கள் திரும்பி வரும் போது கந்து வட்டி ரௌடிகள் கற்களால் தாக்கினர். போலீசு வேடிக்கை பார்த்தது.

இந்நிலையில் விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, முற்போக்கு இளைஞர் அணி, மக்கள் ஜனநாயக இளைஞர் கழகம் போன்ற புரட்சிகர இயக்கங்கள் கந்துவட்டிக் கொடுமைக்கும், தாக்குதலுக்கும் ஆளான கோல்டன் தெரு மக்களுக்குத் துணையாக களத்திலிறங்கின.

புரட்சிகர அமைப்புகள் ஆதரவளிப்பதைத் தெரிந்து கொண்ட கந்து வட்டிக் கும்பல், காவல் துறையிடம் சமரசத்திற்குச் சென்றது. காவல்துறையோ கந்து வட்டிக்காரர்களின் தரகர்களாகச் செயல்பட்டனர். தாழ்த்தப்பட்ட மக்கள் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்திய கந்துவட்டி ரவுடிகளைக் கைது செய்யவில்லை. மாறாக, தாழ்த்தப்பட்ட மக்களையே கொலை முயற்சி வழக்கில் கைது செய்தனர். 10 பேர் மீது வழக்குப் போட்டு 4 பேரைக் கைது செய்தனர். மீதி ஆறு பேரைத் தேடுவதாக கோல்டன் தெருவில் அடிக்கடி சோதனையிட்டு மிரட்டுகின்றனர்.

அமைதிப் பேச்சுவார்த்தை என்ற பெயரில் ஒரு கட்டைப் பஞ்சாயத்தை போலீசு துணைக் கண்காணிப்பாளர் மாணிக்கமும், மாவட்ட வருவாய் அதிகாரியும் நடத்தினர். இவர்களுடன் அதிமுகவினரான வெற்றியும், டி.கே. ராஜேந்திரனும் கந்து வட்டிக் கும்பலுக்கு ஆதரவாக, தாழ்த்தப்பட்ட மக்களை மிரட்டினர். கலவரம் செய்வதாகக் குற்றம் சாட்டினர். இதில் கொடுமை என்னவென்றால் போலீசு அதிகாரி மாணிக்கம் தாழ்த்தப்பட்டவர்தான். இட ஒதுக்கீட்டில் உயர் பதவிக்கு வந்த மாணிக்கம், தாழ்த்தப்பட்ட மக்களின் நியாயத்தைக் கூடக் கேட்கவில்லை. கந்து வட்டிக்காரர்களின் எலும்புத் துண்டுக்கு விசுவாச நாயாக இருந்தார்.

சாதி பெயரைச் சொல்லி அணிதிரட்டும் 'தலித்' அமைப்புகளும் சரி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என வாய்ச்சவடால் அடித்துத் திரியும் பிற அமைப்புகளும் சரி, கோல்டன் தெரு மக்களுக்குத் துணை நிற்கவில்லை. போலி கம்யூனிஸ்டுகள் உட்பட எல்லா ஓட்டுப் பொறுக்கிகளும் கந்து வட்டிக்காரர்கள் அணியில். தமது உயிரையும் பொருட்படுத்தாது தாழ்த்தப்பட்ட மக்களுடன் துணை நின்றவர்கள் புரட்சிகர அமைப்பினர்தான். இதனால்தான் கந்து வட்டி கும்பல் இப்போது பின் வாங்கியது.

அப்பகுதியில் கந்து வட்டிக் கொடுமையால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரையும் வர்க்க ரீதியில் ஒன்று திரட்டும் பிரச்சாரத்தைப் புரட்சிகர அமைப்பினர் முன்னெடுத்து வருகின்றனர்.

கந்துவட்டிக் கொள்ளையர்களால் சூறையாடப்பட்ட கோல்டன் தெருவிலுள்ள ஒரு கடை



**தகவல்:**
**வி.வி.மு., பு.மா.இ.மு.,**
**தருமபுரி.**



படிப்பகம்

www.padippakam.com

## வரவு - செலவு அறிக்கை:

# சுதேசி பசப்பல் தகர்ந்தது

அணுகுண்டுகளை வெடித்து இந்தியாவை வல்லரசாக்கி விட்டதாகக் கூச்சல் போடும் பா.ஜ.க., தனது கூட்டணி அரசின் முதல் வரவு - செலவு அறிக்கையை, "உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாத்து வளர்க்கும்" நோக்கத்தின் அடிப்படையில் தயாரித்துள்ளதாகப் பீற்றிக் கொள்கிறது. பா.ஜ.க. மட்டுமல்ல, தாராளமயமாக்கலின் ஆதரவாளர்கள் அனைவருமே இந்த வரவு - செலவு அறிக்கையை, "சுதேசி பட்ஜெட்" என முத்திரை குத்துகின்றனர். தாராளமயவாதிகள் பயந்து அலறும்படி, பா.ஜ.க. வரவு - செலவு அறிக்கையில் அப்படியென்ன குண்டைத் தூக்கிப் போட்டு விட்டது?

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களில், மூன்றில் ஒரு பங்கு பொருட்களுக்கு கூடுதலாக எட்டு சதவீத இறக்குமதித் தீர்வை இந்த வரவு - செலவு அறிக்கையில் விதிக்கப்பட்டது. சிறு தொழில்களுக்கு எளிதாகக் கடன் கிடைக்கும்படி விதிகள் தளர்த்தப்பட்டு, சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன: விவசாயம், கல்வி உள்ளிட்ட சில துறைகளுக்கு சென்ற ஆண்டைக் காட்டிலும் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதைக்காட்டிதான் பா.ஜ.க., "சுதேசி பட்ஜெட்", "வளர்ச்சிக்கான பட்ஜெட்" என மாய்மாலம் செய்கிறது. தாராளமயவாதிகளும் சில இறக்குமதிப் பொருட்களுக்கு 8% கூடுதல் சுங்கத் தீர்வை விதிக்கப்பட்டிருந்ததை ஊதிப் பெருக்கி, பா.ஜ.க.வின் சுதேசி பித்தலாட்டத்திற்குத் துணை போயினர்.

பா.ஜ.க. இந்த "சுதேசி பட்ஜெட்டை" வெளியிடுவதற்கு முன்பாக, கடந்த ஏப்ரல் மாதம் உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைப்படி, 340 பொருட்களை எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து கொள்ள அனுமதித்தது; இப்பொருட்களுக்கான சுங்க வரியும் குறைக்கப்பட்டது. ஏப்ரல் மாத இறுதிக்குள் மேலும் 300 பொருட்களை கட்டுப்பாடு இன்றி இறக்குமதி செய்ய கொள்ள சீர்திருத்தம் செய்யப்படும் என்றும் உறுதியளித்தது. இந்நிலையில், இறக்குமதி செய்யப்படும் சில பொருட்களின் சுங்கத் தீர்வையை, உலக வர்த்தகக் கழகத்தின் வரம்புக்குட்பட்டு உயர்த்தியிருப்பதைக் காட்டி, "சுதேசி பட்ஜெட்" என பா.ஜ.க. நாடகமாடுவது மோசடித் தனமாகும். தாராளமய ஆதரவாளர்கள் இந்த உயர்வுக்கு எதிராக போட்ட கூச்சலால் அரண்டு போன இந்த 'சுதேசி' வாதிகள், இந்தத் தீர்வை உயர்வையும் பாதியாக - நான்கு சதவீதமாகக் குறைத்துக் கொண்டுவிட்டனர்.

மேலும், பா.ஜ.க. கூறுவது போல இச்சுங்கத் தீர்வை உயர்வும் கூட, 'இந்தியத் தொழில்களை' அந்நியப் போட்டியில் இருந்து பாதுகாத்துவிடப் போவதில்லை. மாறாக, குறைந்த செலவில் அந்நிய நாட்டுப் பொருட்களை இறக்குமதி செய்து, இந்தியச் சந்தையில் குவிக்கத்தான் பயன்படப் போகிறது. ஏனெனில், இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருட்களுக்குத்தான் இச்சுங்கத் தீர்வை உயர்வு விதிக்கப்பட்டுள்ளது; பூர்த்தி செய்யப்பட்ட பொருட்களின் (finished goods) இறக்குமதிக்கு இந்த உயர்வு கிடையாது. பா.ஜ.க.வின் இந்த கோமாளித்தனமான முடிவினால்; மூலப் பொருட்களை இறக்குமதி செய்து உற்பத்தி செய்வதைவிட, பூர்த்தியடைந்த பொருட்களை இறக்குமதி செய்து விற்பது மலிவானதாகிவிடும். இதனால் 'இந்தியத் தொழில்களை' இழுத்து மூடும் நிலைதான் ஏற்படும்.

இந்திய சிறு தொழில்களின் நசிவுக்கு, கடன் மூலதனம் கிடைக்கவில்லை என்பதைவிட, அதனின் சந்தையை பன்னாட்டு நிறுவனங்கள் விழுங்கத் தொடங்கிவிட்டதே முதன்மையான காரணமாகும். இறக்குமதிக் கொள்கைகளில் அடுத்தடுத்து செய்யப்படும் சீர்திருத்தங்கள், சிறு தொழில்களுக்கு எமனாகவே மாறிவிட்டன. பா.ஜ.க. ஏப்ரல் மாதம் இறக்குமதி கொள்கையில் கொண்டு வந்த சீர்திருத்தங்களினால், கேரள மாநிலத்தில் சிறு தொழில்கள் மூடப்படும் அபாயம் எழுந்துள்ளது. உள்நாட்டுச் சந்தையை பன்னாட்டு நிறுவனங்களிடம் தாரை வார்த்து விட்டு, சிறு தொழில் நிறுவனங்களுக்கு என்னதான் கடன் வசதி செய்து கொடுத்தாலும், பிரமாண்டமான மூலதனமும், நேர்த்தியான தொழில் நுட்பமும் கொண்ட பன்னாட்டு நிறுவனங்களோடு சிறு தொழில் நிறுவனங்கள் போட்டியிட்டு வென்று விட முடியாது. எனவே சிறு தொழில்கள் மீது பா.ஜ.க. காட்டும் அக்கறை வெற்று ஆரவாரக் கூச்சலாகத்தான் முடியும்!

இந்த 'சுதேசி' சவடால்கள் ஒருபுறமிருக்க, காப்பீட்டுத் துறையைத் தனியாருக்குத் திறந்து விடப் போவதாக வரவு - செலவு அறிக்கையிலே அறிவித்துள்ளது, பா.ஜ.க. இக்கொள்கை முடிவு, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நிதித் துறையில், பன்னாட்டு நிறுவனங்கள் புறக்கடை வழியாக நுழைவதற்கு வழியேற்படுத்தித் தந்துள்ளது. ஏனெனில், இந்திய அரசின் கீழ் இயங்கி வரும் காப்பீட்டு நிறுவனங்களுடன் போட்டியிட தனியார் முதலாளிகளுக்கு அதிகமான முதலீடும், அனுபவமும், திறனும் தேவை. இந்தியத் தரகு முதலாளிகளிடம் இந்த ஆற்றல் இல்லாததால் - பன்னாட்டு நிறுவனங்களோடு கூட்டுச் சேர்ந்து கொண்டு தொலைபேசித் துறையை ஏலம் எடுத்ததுபோல - அவர்கள் பன்னாட்டு காப்பீட்டு நிறுவனங்களோடு கூட்டு சேர்வது தவிர்க்க முடியாதது!

கிட்டதட்ட 200 பொதுத்துறை நிறுவனங்களில், இந்திய அரசு தனது மூலதனத்தின் பங்கை 26 சதவீதமாகக் குறைத்துக் கொள்ள முடிவெடுத்ததன் மூலம், இந்நிறுவனங்களை தரகு முதலாளிகளும், பன்னாட்டு நிதி மூலதன நிறுவனங்களும் கைப்பற்றிக் கொள்ள, பா.ஜ.க. வழியேற்படுத்திக் கொடுத்துள்ளது. இலாபத்தில் இயங்கும் பொதுத் துறை நிறுவனப் பங்குகளை பங்குச் சந்தையில் விற்று 5,000 கோடி ரூபாய் திரட்ட திட்டமிட்டுள்ளார், நிதியமைச்சர் சின்கா. பா.ஜ.க.வின் இத்தாராளமய மோகத்தின் பிடியில் இருந்து "இந்தியன் ஏர்லைன்ஸ்" நிறுவனமும் தப்பவில்லை. இந்நிறுவனத்தின் 49 சதவீதப் பங்குகளைத் தனியாருக்கு விற்றுவிட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், இந்தியத் தொழில் நிறுவனத்தின் ஒரு சதவீதப் பங்குகளைத்தான் வாங்க முடியும் என்ற விதி தளர்த்தப்பட்டு, 5 சதவீதப் பங்குகளை






படிப்பகம்

www.padippakam.com

## பட்ஜெட்டிலும் பார்ப்பனீயம்!

• பசுவதையைத் தடை செய்ய வேண்டும் என இந்து மதவெறி அமைப்புகள் கூச்சல் போட்டு இயக்கங்கள் எடுத்து வருகின்றன. இதற்கு அனுசரணையாக, பா.ஜ.க.வின் வரவு செலவு திட்டத்தில், இயந்திரமயமாக்கப்பட்ட இறைச்சிக் கூடங்களில் வெட்டப்படும் ஒவ்வொரு கால்நடையின் மீதும் ஆயிரம் ரூபாய் சேவை வரி விதிக்கப்பட்டுள்ளது. இந்த வரி விதிப்பின் மூலம் பா.ஜ.க. வெளிப்படுத்தியிருக்கும் பார்ப்பன மனோபாவம், முசுலீம்களுக்கு மட்டும் எதிரானதன்று; மாட்டுக்கறி உண்ணும் பண்பாட்டைக் கொண்டுள்ள தாழ்த்தப்பட்டோருக்கும் எதிரானதுதான்.

• வரவு - செலவு அறிக்கையின் கல்விக்கான ஒதுக்கீட்டில், தேசிய மறுகட்டுமானப் படை ஒன்றை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்படை, இந்துமதவெறிப் பரிவாரங்களின் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ்.ஐ தேசியமயமாக்குவது என்று எதிர்க் கட்சிகள் குற்றஞ்சுமத்தியுள்ளன.

வாங்கிக் கொள்ள சலுகை வழங்கப்பட்டுள்ளது. மேலும், அவர்களின் முதலீட்டிற்கு காப்பீட்டுறுதி வழங்கவும் பா.ஜ.க. முடிவெடுத்துள்ளது.

பா.ஜ.க. இந்த 'சுதேசி' பட்ஜெட்டைத் தாக்கல் செய்வதற்குச் சற்று முன்னதாக, அதாவது மே மாத மத்தியில், நெய்வேலியில் ''ஜீரோ யூனிட்'' மின் நிறுவனம் அமைத்து வரும் அமெரிக்க பன்னாட்டு நிறுவனத்திற்கும், விசாகப்பட்டினத்தில் மின் நிலையம் தொடங்கவுள்ள இந்துஜாக்களுக்கும், பத்ராவதி மின் திட்டத்தில் முதலீடு செய்யவுள்ள ஜப்பானின் நிப்பான் டென்ரோ இஸ்பாட் நிறுவனத்திற்கும், அவர்கள் இம்மின் நிலையங்களை அமைக்கப் போடும் மூலதனத்திற்கு ஏற்ப இலாப உத்திரவாதமளிக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

• 18 எண்ணெய் வயல்கள் பன்னாட்டு நிறுவங்களுக்குத் தாரை வார்க்கப்பட்டுள்ளன.

• பீகார், குஜராத், மகாஷ்டிரா, இராஜஸ்தான் மாநிலங்களில் 49000 சதுர கிலோமீட்டர் பரப்பு கொண்ட நிலத்தில் இருந்து கனிமப் பொருட்களைத் தோண்டியெடுக்க 28 பன்னாட்டு நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

• நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தைத் திருத்திய பா.ஜ.க. அரசு, வீடு கட்டும் தொழிலில் முதலீடு செய்ய பன்னாட்டு நிறுவனங்களுக்கும், வெளிநாட்டு இந்தியர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளது. இது தொடர்பாக பா.ஜ.க. அரசிற்கும், அமெரிக்க பன்னாட்டு நிறுவனமான எக்சானிற்கும் பேச்சு வார்த்தை நடந்து வருகிறது.

• அணுகுண்டு வெடிக்கப்பட்டதையடுத்து, ஓர் அமெரிக்க டாலருக்கு நாற்பது ரூபாயாக இருந்த இந்திய ரூபாயின் சந்தை மதிப்பு சரிந்து 43 ரூபாயாகிவிட்டது. இது மேலும் சரிந்து ரூ. 45-ஐத் தொடக்கூடும் எனக் கருதப்படுகிறது. பா.ஜ.க. அரசு இச்சரிவைத் தடுத்து நிறுத்த எவ்வித முயற்சியும் செய்யவில்லை. பா.ஜ.க. அரசின் இந்தப் பாராமுகம், ''ரூபாயின் மதிப்பை சந்தைதான் தீர்மானிக்க வேண்டும்'' என்ற உலக வங்கியின் கட்டளையை நயவஞ்சகமாக நிறைவேற்றும் உத்திதான். இப்படி ஏகாதிபத்தியங்களுக்கு நாட்டை எல்லா வழிகளிலும் அடகு வைத்து வரும் பா.ஜ.க., 'சுதேசி பட்ஜெட்' தயாரித்திருப்பதாகக் கூறுவது, கடைந்தெடுத்த அயோக்கியத்தனமாகும்.

தரகு முதலாளிகளுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் சலுகைகளை வாரியிறைத்துள்ள பா.ஜ.க., மக்கள் மீதோ கூடுதல் வரிச் சுமையையும், கட்டண உயர்வையும் ஏற்றி வைத்துள்ளது. பா.ஜ.க.வின் இந்த வரவு - செலவு அறிக்கையில் கூடுதலாக 9,000 கோடி ரூபாய்க்குப் புதிய வரிகள் விதிக்கப்பட்டுள்ளன. கடந்த பத்தாண்டுகளில் எந்தவொரு ஆட்சியும் இப்படி ஒரே சமயத்தில் கூடுதலாக வரி விதித்ததில்லை என முன்னாள் நிதியமைச்சர் ப. சிதம்பரமே அங்கலாய்த்துள்ளார்.

தபால் கட்டண உயர்வின் மூலம் 270 கோடி ரூபாயும், தேயிலை, வெண்ணெய் போன்று மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் பொருட்கள் மீது கலால் வரியை உயர்த்தியதன் மூலம் 3,304 கோடி ரூபாயும், சுங்கத் தீர்வை உயர்வின் மூலம் கிட்டதட்ட 5,000 கோடி ரூபாயும் சுரண்டிச் செல்லவுள்ளது பா.ஜ.க. அரசு. போக்குவரத்துச் சாலைகளை மேம்படுத்துவதற்காகத் தான் பெட்ரோல் கட்டணத்தை ஒரு ரூபாய் உயர்த்தியிருப்பதாக நியாயப்படுத்துகிறது. தொடர் வண்டிக் கட்டணங்கள் 450 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளன. தொடர் வண்டிக் கட்டணம் மற்றும் பெட்ரோல் விலை உயர்வு, தானாகவே மேலும் பல பொருட்களின் விலை உயர்வுக்கு வழி வகுத்து விடும்.

யூரியா விலை உயர்வையும், பெட்ரோல் மீது விதிக்கப்பட்ட கூடுதல் வரியையும், விவசாயிகளிடமிருந்தும் பொது மக்களிடமிருந்தும் கடும் எதிர்ப்புகள் கிளம்பியபின் தான் பா.ஜ.க. அரசு கைவிட்டது.

''சரிந்து கிடக்கும் இந்தியப் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்த அரசு பல துறைகளில் கூடுதலாக செலவு செய்யவுள்ளது. இதற்குத் தேவைப்படும் பணத்தைத் திரட்டும் முகமாகத் தான் வரிகள் உயர்த்தப்பட்டுள்ளன'' எனத் தனது சுரண்டலுக்கு நியாயம் கற்பிக்கிறது பா.ஜ.க. அரசு. இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்தால் யார் பலன் பெறுவார்கள் என்பது நாம் நன்கு அறிந்ததுதான். அந்த மேட்டுக்குடி கும்பல்கள், தொழிலதிபர்கள், பெரும் வர்த்தகர்கள் மீது புதிய வரிகள் எதுவும் விதிக்கப்படவில்லை என்பதோடு, அவர்களுக்கு 950 கோடி ரூபாய்க்கு வரிச் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. வரி ஏய்ப்பு - மோசடிகளில் ஈடுபடும் அக்கும்பலைத் தண்டிக்க வக்கற்ற பா.ஜ.க., அவர்கள் சேர்த்து வைத்துள்ள கள்ளப் பணத்தையும், பினாமி சொத்துக்களையும் சட்டபூர்வமாக்க, ''சரள்'', ''சம்மான்'', ''சமாதான்'' என மூன்று திட்டங்களை அறிவித்துள்ளது. அந்நியச் செலாவணி சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

இச்சலுகைகளோடு, 62,000 கோடி ரூபாயை நிதி மூலதனச் சந்தையில் கடனாகப் பெற்று, சரிந்து கிடக்கும் இந்தியப் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்தப் போகிறதாம்! பற்றாக்குறை ஏற்கனவே அதிகமாக இருக்கும் பொழுது, அரசு மேலும் கடன் வாங்கி செலவு செய்வது பணவீக்கத்தை அதிகரிக்கும் எனப் பொருளாதாரவாதிகள் எச்சரிக்கின்றனர். பண வீக்கம் அதிகரித்தால், பணத்தின் மதிப்பு மேலும் சரிந்து, விலைவாசி உயர்ந்து விடும். கூடுதல் வரிச் சுமை, பணவீக்கம், விலைவாசி உயர்வு - இவற்றைதான் இந்தப் போலி சுதேசிவாதிகள் இனி 'சாதனை'களாகச் சொல்லிக் கொள்ள முடியும்!

• கருப்பன்

## உலக வங்கி உத்தரவு! இலவச மின்சாரம் இரத்தாகும் அபாயம்!!

தொடர்ந்து விவசாயத்தைப் புறக்கணித்து வருவது போதாது என்று உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனங்களின் கட்டளைப்படி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் இலவச மின்சாரத்தை இரத்து செய்யும் அவசரச் சட்டத்தை பாரதீய ஜனதா அண்மையில் பிறப்பித்துள்ளது. விவசாயிகளுக்கு இலவசமாகவோ சலுகை விலையிலோ மின்சாரம் தரப்படுவதால் மின்சார வாரியங்கள் தொடர்ந்து நட்டமடைவதைத் தவிர்க்கவே இந்த அவசரச் சட்டம் என்கிறார் மைய மின்துறை அமைச்சர்.

இப்புதிய சட்டப்படி விவசாயிகளுக்குத் தரப்படும் இலவச அல்லது குறைந்த கட்டணம் என்ற சலுகை பறிக்கப்பட்டு, மின் உற்பத்தி - விநியோக செலவில் 50% தொகையாவது கட்டாயமாக பெற்றே தீரவேண்டும். இந்தச் சலுகையும் 3 ஆண்டுகளுக்கு மேல் நீடிக்கக்கூடாது. சலுகைகளால் ஏற்படும் இழப்புத் தொகையை மின் வாரியங்களுக்கு மாநில அரசுகள் தமது நிதியிலிருந்து தர வேண்டும்.

இதனால் மாநில அரசுகளுக்கு கடுமையான நிதி நெருக்கடி ஏற்பட்டு, இலவச மின்சாரத்தை இரத்து செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். இதன் விளைவாக விவசாய உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்பட்டு, உணவுக்காக ஏகாதிபத்தியங்களிடம் கையேந்த வேண்டியதாகி விடும். விவசாயிகள் ஓட்டாண்டிகளாக்கப்பட்டு நாடே பஞ்ச பூமியாகி விடும்.

விவசாயிகளைக் குப்புறத் தள்ளிவிட்டு, சவக்குழியையும் பறிக்க இந்துவெறி ஆட்சியாளர்கள் கிளம்பிவிட்டார்கள். இச்சதிகளை முறியடித்து, இலவச மின்சாரம் பெறுவது நாட்டின் முதுகெலும்பான விவசாயிகளின் அடிப்படை உரிமை என்பதை நிலைநாட்ட விவசாயிகள் பெரும் புயலாகத் திரண்டெழுவதே இன்றைய உடனடித் தேவையாக உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



## வரலாற்று ஆராய்ச்சிக் குழுவில் இந்து வெறியர்கள்

"இந்துக் கடவுள் சிவன் தலையிலிருந்து கங்கை நதி உற்பத்தியாகிறது. வேத காலத்தில் புஷ்பக விமானத்தில் பறக்குமளவுக்கு விஞ்ஞானம் வளர்ச்சி பெற்றிருந்தது'' என்று இனி மாணவர்களுக்கு வரலாற்றுப் பாடம் நடத்தப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்த அளவுக்கு, தமது இந்துத்துவ நோக்கங்களுக்கு ஏற்ப வரலாற்றைத் திரித்துப் புரட்டும் நரித்தனமான சதி வேலைகளில் இந்து வெறியர்கள் தீவிரமாக இறங்கிவிட்டனர். அண்மையில் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் விசுவ இந்து பரிஷத் விசுவாசிகளை இந்திய வரலாற்று ஆராய்ச்சிக் கவுன்சில் (ICHR) உறுப்பினர்களாக நியமித்துள்ளது. நியமிக்கப்பட்டுள்ளவர்களில் பெரும்பாலோர் இந்து வெறி பரிவாரங்களின் கண்ணோட்டத்திலான வரலாற்றை ஆதரிப்பவர்கள். அயோத்தில் ராமன் கோயில் கட்டுவதை நீண்ட காலமாக ஆதரித்து வருபவர்கள்.

நியமிக்கப்பட்டுள்ளவர்களில் முக்கியமானவர்களும் பிரபலமானவர்களுமான பி.பி.லால், பி.ஆர். குரோவர், கே.எஸ். லால், பி.பி. சின்ஹா ஆகிய வரலாற்றுப் பேராசிரியர்களிடம் ஓர் ஒற்றுமை உண்டு. இவர்கள் அனைவருமே ''அயோத்தியில் மிகப் பெரிய ராமன் கோயில் இருந்தது; அது இடிக்கப்பட்டு அங்கு மசூதி கட்டப்பட்டது'' என்று பிரச்சாரம் செய்து வருபவர்கள். பேராசிரியர் குரோவர் என்பவர், 1990-இல் அன்றைய சந்திரசேகர் அரசு பாபர் மசூதி செயல் கமிட்டியுடன் பேச்சுவார்த்தை நடத்திய போது, விசுவ இந்து பரிஷத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு வாதிட்டவர். பி.பி. லாலும், கே.எஸ்.லாலும் கடந்த பல ஆண்டுகளாக பத்திரிகைகளிலும், கருத்தரங்குகளிலும் விசுவ இந்து பரிஷத்தின் நிலைப்பாட்டை ஆதரித்து வெளிப்படையாகப் பேசியும் எழுதியும் வருபவர்கள்.



ரிக்ஷா வண்டியில் வாக்குப் பெட்டியுடன் மக்களிடம் கருத்துக் கணிப்பு தேர்தல் நடத்தும் பௌரியா ஆலைத் தொழிலாளர்கள்.

1975-80-களில் பாபர் மசூதியைச் சுற்றியுள்ள பகுதிகளில் ''இராமாயண அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட ஆதாரங்கள்'' என்று ஒரு அண்டப் புளுகை முன்னாள் தொல்லியல் துறை இயக்குநராக இருந்த பி.பி. லால் பத்தாண்டுகளுக்குப் பிறகு 1990-இல் அவிழ்த்து விட்டார். பாபர் மசூதி இருந்த இடத்தில்தான் ராமன் கோயில் இருந்தது என்ற அவரது வரலாற்று மோசடியை தில்லி பல்கலைக் கழக வரலாற்றியில் பேராசிரியர்களான ரோமிலா தாப்பர், சர்வபள்ளி கோபால், பணிக்கர் ஆகியோர் ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தினர். இப்போது இந்த வரலாற்றுப் புரட்டல் வாதிதான் இந்திய வரலாற்று ஆராய்ச்சிக் கவுன்சிலின் தலைவராக்கப்பட்டுள்ளார். இந்தியப் பூர்வகுடி மக்களின் பெருமைமிகு சிந்து சமவெளி நாகரீகத்தை, வந்தேறிகளான ''ஆரியர்களின் நாகரீகம்'' என்றும் அது கங்கை வரை இந்து ராஷ்டிரமாகப் பரவி இருந்தது என்றும் ஆர்.எஸ்.எஸ்.-இன் ''ஆர்கனைசர்,'' பத்திரிகையில் கட்டுரை எழுதும் பி.பி. லாலை வரலாற்றுப் பேராசிரியர் என்று ஏற்கத்தான் முடியுமா?

ஏற்கனவே மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம், பா.ஜ.க. தேர்தல் அறிக்கையை செயல்படுத்துமாறு நமது துறைக்கு அனுப்பிய சுற்றறிக்கை விவகாரமும், நேரு யுவ கேந்திர பள்ளிகளில் இந்துத்துவ பிரச்சாரம் செய்ய தீர்மானித்த விவகாரமும் அம்பலமாகியுள்ளது. இப்போது இந்துவெறி விசுவாசிகளை வரலாற்று ஆராய்ச்சிக் குழுவில் நியமித்துள்ள நிலையில் இச்சதிகளை அம்பலப்படுத்தினால் மட்டும் போதாது; வரலாற்று அகழ்வாராய்ச்சி குழிகளில் இந்து வெறி பரிவாரங்களைப் புதைப்பதுதான் தீர்வாக அமையும்.

## மூடிய ஆலையைத் திறக்கக் கோரி தொழிலாளர்களின் போராட்டம்

மேற்கு வங்க மாநிலத்தின் ஹவுரா மாவட்டத்திலுள்ள பௌரியா பருத்தி ஆலை கடந்த மூன்றாண்டுகளாக மூடிக் கிடக்கிறது. இதில் பணியாற்றி வேலையிழந்த 6000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஆலையைத் திறக்கக் கோரி மக்கள் ஆதரவுடன் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

1818-இல் தொடங்கிப்பட்ட மிகப் பழமை வாய்ந்த இந்த ஆலை, 1940-களில் நூற்பு மற்றும் நெசவாலையாக வளர்ந்தது. அப்போது 10,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றினர். 1991-இல் இந்த ஆலையை பங்குச் சந்தை தரகர் ஜலான் என்பவர் கைப்பற்றினார். 1992-லிருந்து 95 முடிய நான்கு முறை ஆலையை மூடியதோடு, 6,000 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்து, 95 மார்ச்சில் ஆலையை இழுத்து மூடிவிட்டார்.

மூன்றாண்டுகளுக்கு மேலாகியும் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தமது போராட்டத்திலிருந்து சற்றும் பின் வாங்கவில்லை. நடந்து முடிந்த பொதுத் தேர்தலின் போது ஆலையை மீண்டும் திறக்கக் கோரி கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை தொழிலாளர்கள் வெற்றிகரமாக நடத்தியுள்ளனர். கடந்த பிப்ரவரி 15, 16 தேதிகளில் 88 நடமாடும் வாக்குச் சாவடிகளை ரிக்ஷாக்களில் அமைத்து 72,000 பேரிடம் - அதாவது இத்தொகுதிக்கான அதிகாரபூர்வ வாக்காளர் பட்டியலில் உள்ளவர்களிடம் வாக்கு சேகரித்தனர். இதில் 38,250 வாக்குகள் பதிவாயின. இவற்றில் 832 ஓட்டுகள் செல்லாதவை. 377 ஓட்டுகள் மட்டுமே ஆலையைத் திறப்பதற்கு எதிராக விழுந்தன. மீதியுள்ள 37041 வாக்குகள் (96.84%) ஆலையை மீண்டும் திறக்கக் கோரியுள்ளன. ஆலையைத் திறப்பதென்பது நீண்ட போராட்டத்தின் மூலம்தான் சாத்தியம் என்றாலும், பொது மக்கள் கருத்தையும் நிர்ப்பந்தத்தையும் தோற்றுவிப்பதில் தொழிலாளர்கள் இதன் மூலம் முதல் கட்ட வெற்றியைச் சாதித்துள்ளனர்.

அண்மையில் ஆலையை மீண்டும் திறக்கக் கோரி மாவட்டம் தழுவிய கடையடைப்பு போராட்டத்தை வெற்றிகரமாக தொழிலாளர்கள் நடத்தியபிறகு, பொது மக்கள் நிர்ப்பந்தம் காரணமாக விரைவில் ஆலையைத் திறக்க ஆவன செய்வதாக போலி கம்யூனிஸ்டு அரசு வாக்குறுதி அளித்துள்ளது.

தாங்கள் ஆளும் மாநிலத்தில் மூடிக் கிடக்கும் 58,000 சிறிய - பெரிய ஆலைகளைத் திறக்க வக்கற்ற போலி கம்யூனிஸ்டுகள், இங்கே மூடிய ஆலைகளைத் திறக்கக் கோரி சவடால் அடிக்கின்றனர். வெட்கக் கேடு!

## அசாமில் ஒரு போஸ்னியா

யுகோஸ்லாவியாவில் செர்பியர்களுக்கு ஒரு போஸ்னியாவைப் போல, அசாமில் போடோக்களுக்கு கோக்ரஜ்கர் மாவட்டம் மாறிவிட்டது. போஸ்னியாவில் முஸ்லிம்களை நரவேட்டையாடி செர்பிய இனவெறியர்கள் காட்டுமிராண்டித் தனத்தில் இறங்கியதைப் போலவே, கோக்ரஜ்கர் மாவட்டத்தில் சந்தால் பழங்குடியின மக்களை போடோ இனவெறி தீவிரவாதிகள் நரவேட்டையாடி வருகின்றனர். கடந்த மே மாதம் 3, 5 தேதிகளில் பிஸ்முரி கிராமத்தில் போடோ தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 14 சந்தால்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் 6 பேர் பெண்களும் குழந்தைகளுமாவர். இது தவிர



படிப்பகம்

www.padippakam.com



சந்தால்களின் 100-க்கும் மேலான குடிசைகள் போடோக்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. இத்தகைய இனவெறியாட்டம் இப்போது முதன் முறையாக நடப்பதல்ல. கடந்த ஈராண்டுகளாகவே இத்தகைய கொடூரம் கேள்விமுறையின்றித் தொடர்கிறது. கடந்த ஆண்டில் மட்டும் 145 சந்தால்கள் போடோக்களால் கோரமாகக் கொல்லப்பட்டுள்ளனர். தாங்கள் உழைத்து பல்கிப் பெருகிய பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கிலிருந்து விரட்டப்பட்ட 1,50,000-க்கும் மேற்பட்ட சந்தால்கள் அகதி முகாம்களில் அல்லற்படுகின்றனர். போதிய உணவின்றியும், தொற்று நோய்கள் தாக்கியும் கடந்த ஆண்டில் 500 பேர் அகதி முகாம்களிலேயே மாண்டு போயுள்ளனர். இவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் குழந்தைகளாவர்.

பீகாரைச் சேர்ந்த சந்தால் பழங்குடியின மக்கள், பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கில் தேயிலை பயிரிடுவதற்காக வெள்ளையரின் காலனி ஆட்சிக் காலத்தில் கட்டாயமாகக் குடியேற்றப்பட்டு, நூறாண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வருகிறார்கள். சந்தால்களின் அளப்பரிய உழைப்பினால் இன்று அப்பள்ளத்தாக்கு உலகத் தரமிக்க தேயிலை பூமியாக வளங்கொழிக்கிறது. இந்த உண்மைகளை மறுதளித்துவிட்டு, கிறித்துவ் - பூர்வீக போடோ இனத்தவரைக் கொண்ட சுயாட்சி பிரதேசத்தை நிறுவுவதே போடோ தீவிரவாதிகள் மற்றும் மாணவர் அமைப்புகளின் நோக்கமாக உள்ளது. இதற்காக சந்தால்களை அந்நியர்களாகச் சித்தரித்து 'இனத் தூய்மை'ப் படுத்தும் வன்முறை வெறியாட்டங்களைத் தொடர்கின்றனர். சுயாட்சி கோரும் போடோ அமைப்புகளுக்கு, அரசு சலுகை - சன்மானங்களைப் பொறுக்கித் தின்பதைத் தவிர வேறு இலட்சியம் எதுவுமில்லை என்பதை அவர்களது செயல் திட்டமே நிரூபித்துக் காட்டுகிறது. இந்திய கொலைகார உளவுப் படையான ''ரா'' (RAW) வின் கைக்கூலிகளாக மாறி இன வெறியாட்டம் போடும் போடோ அமைப்புகள் சுயாட்சி பற்றி பேசவும் அருகதையில்லை.




போடோ இனவெறியாட்டத்துக்கு எதிராக கல்கத்தாவில் சந்தால் பழங்குடி மாணவர்கள் நடத்தும் கண்டன ஊர்வலம்.

போடோக்களின் ஓட்டுக்களைப் பெறுவதற்காக அவர்களுடன் கள்ளக் கூட்டு சேர்ந்து கொண்டும், சந்தால்களுக்கு நிவாரணப் பிச்சை போட்டு ஆதரவாளராக நாடகமாடுவதுமே எல்லா ஓட்டுக் கட்சிகளின் பித்தலாட்டக் கொள்கையாக உள்ளது. போடோ தீவிரவாதிகளின் இன வெறியாட்டத்தை எந்த ஓட்டுக் கட்சியும் வெளிப்படையாக எதிர்க்கவுமில்லை. சொந்த மண்ணிலேயே சந்தால்கள் அகதிகளாக்கப்படுவதை எதிர்த்துப் போராடவுமில்லை. இந்து வெறி ஆட்சியாளர்களோ, ஆபத்தை எதிர் நோக்கி சந்தால்கள் பரிதவித்துக் கொண்டிருக்கும் போது, நாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக போர்வெறியூட்டி அணுகுண்டு வெடித்து வக்கிரமாக கூத்தடித்துக் கொண்டிருக்கின்றனர்.

## மேலாதிக்கப் போர்வெறியின் எதிர்விளைவு: கொலைகாரர்களாகப் பள்ளிச் சிறுவர்கள்

சிவசங்கரி, உதயமூர்த்தி கும்பல்களால் உலகின் நாகரீகமிக்க நாடாகச் சித்தரிக்கப்படும் அமெரிக்காவில், பள்ளிச் சிறுவர்கள் சக மாணவர்களையும் ஆசிரியர்களையும் துப்பாக்கியில் சுட்டுக் கொல்லும் வன்முறைக் கலாச்சாரம் அண்மைக் காலமாக தீவிரமாகிவிட்டதைக் கண்டு, அந்நாடும் மக்களும் பீதியடைந்து செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

நியூயார்க் அருகே ஸ்பிரிங்.ஃபீல்டில் உள்ள தாம்சன் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் கின்கெல் என்ற 15 வயது மாணவன், பள்ளிக்கூடத்துக்குத் துப்பாக்கியை எடுத்து வந்ததற்காக பள்ளியிலிருந்து கடந்த மே 20 அன்று நீக்கப்பட்டான். அடுத்த நாள் பள்ளிச் சிற்றுண்டி விடுதிக்குள் துப்பாக்கியுடன் நுழைந்த அவன், மாணவர்களை நோக்கி 50 ரவுண்டுகள் வெறி தீரச் சுட்டான். குண்டுகள் தீர்ந்ததும் மற்றொரு கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொண்டே தப்பியோடினான். இக்கொலை வெறியாட்டத்தில் இரு மாணவர்கள் அங்கேயே மாண்டனர். 24 சிறுவர்கள் படுகாயமடைந்தனர். இக்கொலைகளுக்கு முன்னதாக அவன் தனது பெற்றோரையே சுட்டுக் கொன்றுள்ளான் என்பது தெரிய வந்து, அந்த வட்டாரமே அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளது.

இவ்வாண்டு மார்ச் 24 அன்று ஜோனாஸ்போரோ நகரில் உள்ள வெட்சைடு மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் 11 வயது சிறுவன், பள்ளியிலுள்ள தீவிபத்து எச்சரிக்கை ஒலிப்பானை அழுத்தி, மாணவர்களும் ஆசிரியர்களும் அவசரமாக வெளியே ஓடி வரும்போது, தனது நண்பனுடன் சேர்ந்து கொண்டு கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டான். இக்கொலை வெறியாட்டத்தில் 4 சிறுமிகளும் ஓர் ஆசிரியையும் மாண்டு போயினர். 9 குழந்தைகளும் இரு ஆசிரியைகளும் படுகாயமடைந்தனர். இதையறிந்து நாடே அதிர்ச்சியடைந்தது.

கடந்த எட்டு மாதங்களில் மட்டும் பள்ளிச் சிறுவர்களின் கொலை வெறியாட்டத்தால் 15-க்கும் மேற்பட்ட பள்ளிக் குழந்தைகளும் இரு ஆசிரியைகளும் மாண்டு போயுள்ளனர்.

இவை தவிர, சக மாணர்கவளைப் பந்து மட்டையால் தாக்குவது, சிறு கத்தியால் குத்திக் காயப்படுத்துவது, கணித வடிவவியல் கருவிகளால் குத்துவது முதலான 1000-க்கும் மேற்பட்ட சிறுசிறு வன்முறைத் தாக்குதல்கள் கடந்த ஆண்டில் நடந்துள்ளன. துப்பாக்கியுடன் பள்ளிக்கு வரும் மாணவர்களையும், வன்முறையில் ஈடுபடும் மாணவர்களையும் பள்ளியிலிருந்து நீக்கினாலும் பிரச்சினை தீரவில்லை. அவர்கள் ஆசிரியர்களுக்கு ''இ-மெயில்'' மூலம் மிரட்டல் கடிதம் அனுப்புகின்றனர். தனியே வரும் ஆசிரியர்களை நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு தாக்குகின்றனர்.

''ராம்போ''வின் வீரசாகச சினிமாவையும், ஈராக் போரையும் காட்டி மேலாதிக்கப் போர் வெறியை நாட்டு மக்களிடம் ஊட்டி வளர்த்த அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், அதன் எதிர்விளைவாக இளம் தலைமுறையினர் வன்முறையாளர்களாக, கொலை வெறி பிடித்தவர்களாக மாறிவிட்டதைக் கண்டு அரண்டு போய் நிற்கின்றனர்.

## பீகார் போலீசு குண்டர்களின் சாதி வெறி ரவுடித்தனம்

பீகாரில் லட்சுமண்பூர் - பதே கிராமத்தில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் தாழ்த்தப்பட்டோர் மீது ரன்பீர் சேனா எனும் மேல் சாதி வெறி குண்டர்கள் நடத்திய கொலை வெறியாட்டத்தில் 61 தாழ்த்தப்பட்டோர் கோரமாகக் கொல்லப்பட்டனர். அதைத் தொடர்ந்து தேர்தல் வந்ததும் பாதுகாப்பு என்ற பெயரில் இப்பகுதியிலும், தாழ்த்தப்பட்டோர் அடிக்கடி படுகொலை செய்யப்படும் சோனோ நதிக்கரையை ஒட்டிய பகுதியிலும் போலீசு குவிக்கப்பட்டு முகாமிட்டது. தேர்தல் முடிந்த பிறகும் இன்னமும் வெளியேறாத போலீசு ரன்பீர் சேனாவின் எடுபிடிகளாகச் செயல்படுவதோடு, தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளைச் சூறையாடுவதையும் இலஞ்சம் பறிப்பதையுமே தொழிலாகக் கொண்டு கொட்டமடித்து வருகின்றனர்.

''தோலா'' எனப்படும் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளில் புகுந்து உணவு தானியங்கள், பாத்திரங்கள், மேசை - நாற்காலி -



படிப்பகம்

கட்டில்களைக் களவாடிச் செல்வது, ஆடு - மாடுகளைக் கூட நள்ளிரவில் இழுத்துச் செல்வது என்பதாக போலீசின் களவாணித்தனம் எல்லை மீறிப் போய்விட்டது. ஜெகனாபாத் மாவட்டம் பார்சவ்னா கிராமத்தில் சர்ப், லைபாய் சோப்பு, பிஸ்கட்டுகளைக் கூட போலீசு ரவுடிகள் பறித்துச் சென்றுள்ளனர். போலீசு வழக்கில் தேடப்பட்டு தலை மறைவானவர்களின் சொத்துக்களை சட்ட விரோதமாகப் பறிமுதல் செய்யும் அட்டூழிங்களில் ஈடுபடுகின்றனர். சித்திரவதை செய்யாமல், பிடித்துச் செல்லாமல் இருக்க, பொய் வழக்குப் போடாதிருக்க என வகை பிரித்து ரூ. 5000 வரை இலஞ்சம் பறிப்பது போலீசாரின் வாடிக்கையாகிவிட்டது. ஜுனாதி கிராமத்தில் கடந்த இரு மாதங்களில் 20 முறை தேடுதல் வேட்டை நடத்தி சூறையாடினர். அந்திரசாக் கிராமத்தில் வாரம் இருமுறை இதுபோல் சூறையாடல் நடந்தது.

படாரியா கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் தீடீரென வந்திறங்கி வானத்தை நோக்கிச் சுட்டு விட்டு, போலீசுடன் மோதல் நடந்ததாகக் கூறிக் கொண்டு சூறையாடலில் ஈடுபட்டனர். பெண்களை மானபங்கம் செய்வது, ஆபாச வசவுகளால் அவமானப்படுத்துவது, விடியற்காலையில் வயல் வேலைக்குச் செல்லும் பெண்கள் ஆயுதங்களை மறைத்து வைத்துள்ளதாகக் குற்றஞ்சாட்டி ஆடைகளை உருவும் கொடூரமும் போலீசு முகாமிட்டுள்ள கிராமங்களில் தொடர்கின்றன. இலஞ்சம் கொடுக்காதவர்களின் கை, கால் எலும்புகளை முறித்து விட்டு, போலீசு காவலிலிருந்து தப்பியோடியபோது கீழே விழுந்து அடிபட்டுக் கொண்டதாகக் கதைகட்டிச் சிறையிலடைப்பது என்பதாக போலீசின் வெறியாட்டம் கேள்விமுறையின்றித் தொடர்கிறது. பீகாரில் காங்கிரசின் பாசிச ஆட்சியானாலும், லல்லுவின் சமூக நீதி ஆட்சியானாலும் தாழ்த்தப்பட்டோர் மீதான கொலை வெறியாட்டங்களும், போலீசு அட்டூழியங்களும் ஒரு போதும் மாறிவிடவில்லை என்பதையே இவை மீண்டும் நிரூபித்துக் காட்டுகின்றன.

## மதவெறி குண்டர்களின் நாசகாரித்தனம் கலவரத் தீயில் கருகிய ஐதராபாத்



உயிர் பிழைக்க ஐதராபாத் நகரை விட்டுத் தப்பியோடும் குடும்பங்கள்

ஆந்திராவின் தலைநகர் ஐதராபாத்தில் கடந்த ஜூன் 5, 6 தேதிகளில் நடந்த மிகப் பெரிய மதக் கலவரத்தால் அந்நகரமே பீதியில் உறைந்து போயுள்ளது. இந்து வெறியர்களும் இஸ்லாமிய வெறியர்களும் எதிர் எதிர் அணியாக நின்று கொண்டு, நகரையே தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து, கொலை வெறியாட்டம் போட்டனர். அப்பாவி இந்துக்களை வழிமறித்து இஸ்லாமிய குண்டர்கள் கத்தியால் குத்தி, வெட்டிக் கொல்வதும், அதற்குப் பதிலடியாக அப்பாவி முஸ்லிம்களை இந்து வெறியர்கள் வெட்டிக் கொல்வதும், வீடுகள், கடைகள், வாகனங்கள், பேருந்துகளைக் கொளுத்திச் சூறையாடுவதும், வழிபாட்டுத் தலங்களைச் சேதப்படுத்துவமாக மதவெறி குண்டர்கள் நாசகாரித் தனத்தைக் கட்டவிழ்த்து விட்டனர். இந்து - இஸ்லாமிய மத வெறியர்களின் கொலை வெறியாட்டத்தாலும் போலீசு துப்பாக்கிச் சூட்டினாலும் 8 பேர் பலியாகியுள்ளனர். 80-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றனர். அவர்களில் பெரும்பாலோர் நடைபாதை வியாபாரிகள், தள்ளுவண்டிக்காரர்கள், கூலித் தொழிலாளிகளாவர். இன்னும் சில பகுதிகளில் இரு தரப்பு மதவெறி குண்டர்களும் மாற்று மதத்தைச் சேர்ந்த பெண்களை மானபங்கம் செய்வது, பாலியல் வன்முறையை ஏவுவது முதலான அதிக்கிரமங்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

கலவரத்தைக் கட்டுப்படுத்துவது என்ற பெயரில் குவிக்கப்பட்ட விரைவு அதிரடிப் படையும் (RAF), மத்திய ரிசர்வ் போலீசு படையும் 4000-க்கும் மேற்பட்ட மாநில ஆயதப் படை போலீசு குண்டர்களும் மதவெறியர்களுக்குப் போட்டியாக ரவுடித்தனத்திலும் சூறையாடல் பாலியல் வன்முறையிலும் இறங்கி அட்டூழியம் புரிந்தனர். போலீசு அணிவகுப்பை வேடிக்கை பார்த்த அப்பாவி மக்கள் மீதே தாக்குதலை ஏவி வக்கிரமாக ரசித்தனர். ஒருபுறம் மதவெறியர்கள், மறுபுறம் போலீசு குண்டர்கள் எனும் இருமுனைத் தாக்குதலுக்கு அஞ்சி பல குடும்பங்கள் ஐதராபாத் நகரை விட்டே தப்பியோடுகின்றன.

கடந்த ஜூன் 2-ந் தேதி முதலாக முஸ்லிம்களை இழிவுபடுத்தி இந்தியிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட ஒரு துண்டுப் பிரசுரம் ஐதராபாத் பழைய நகரெங்கும் விநியோகிக்கப்பட்டது. காரில் வந்து பிரசுரங்களை விநியோகித்து விட்டு குண்டர்கள் தப்பியோடிவிட்டனர். இப்பிரசுரத்தால் ஆத்திரமடைந்த முஸ்லிம்கள் ஜூன் 5-ந் தேதி வெள்ளிக் கிழமையன்று தொழுகை முடிந்த பிறகு, இக்குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டிக்கக் கோரி சாலை மறியலில் ஈடுபட்டனர். நியாயமான இந்தப் போராட்டம் முஸ்லிம் மதவெறியர்களால் அடுத்த சில நிமிடங்களிலேயே வன்முறை - மதக் கலவரமாக மாற்றப்பட்டது. நகரப் பேருந்துகள் - வாகனங்களைத் தாக்கித் தீயிடுவது, இந்துக்களின் கடைகளைச் சூறையாடித் தீயிடுவது, கல்லெறிதல் என்று முஸ்லிம் மதவெறியர்கள் இறங்கியதும், அதற்குப் பதிலடியாக இந்து வெறியர்களும் சூறையாடல், தீவைப்பு, கத்திக் குத்து, மசூதிகளைத் தாக்குவது என்று கலவ்ரத் தீயைக் கொழுந்து விட்டு எரியச் செய்தனர்.

தொடர்ந்து கலவர நகரமாக விளங்கிய ஐதராபாத் கடந்த எட்டாண்டுகளாக மதக் கலவரம் ஏதுமின்றி அமைதியாகவே இருந்தது. ஆனால், தேர்தலுக்குப் பின் ஆளும் தெலுங்கு தேசக் கட்சி பாரதீய ஜனதாவுக்கு ஆதரவாகத் திரும்பியதால் முஸ்லிம்களிடம் வெறுப்பையும் நம்பிக்கையின்மையையும் ஏற்படுத்தியது. இதைச் சாதகமாக்கிக் கொண்டு இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகள் மதவெறியை அவர்களிடம் ஊட்டி வந்தன. இந்நிலையில், இஸ்லாமியர்களை இழிவுபடுத்தும் வகையில் பிரசுரம் விநியோகிக்கப்பட்டதும், அது மதவெறி தீவிரவாதிகளை மேலும் வெறிகொள்ளச் செய்து கலவரத்துக்குத் தள்ளிவிட்டுள்ளது. அப்பாவி இந்துக்களை தமது எதிரியாகக் கருதி வெட்டிக் கொல்லும் அளவுக்கு அறிவின் இடத்தை வெறி ஆக்கிரமித்துக் கொண்டு அவர்கள் ஆட்டம் போட்டுள்ளார்கள். இத்தகைய மத வெறியாட்டங்கள், முஸ்லிம்களை மேலும் தனிமைப்படுத்தி ஒடுக்கவும், இந்து வெறியர்கள் கொட்டமடிக்கவும்தான் உதவுவதாக அமையும். மதச்சார்பற்ற, புரட்சிகர - ஜனநாயக சக்திகளுடன் ஐக்கியப்பட்டு போராடுவதன் மூலமே முஸ்லிம்கள் தம்மைத் தற்காத்துக் கொள்ள முடியும்.

www.padippakam.com

# தமிழனை ஒடுக்க வரும் மு.க.வின் "பொடா" சட்டம்

தமிழக அரசு அவசர அவசரமாக மே 26-இல் தமிழக சட்டமன்ற உறுப்பினர்களி டையே தமிழ்நாடு பயங்கரவாத தடைச் சட்ட (''பொடா'') நகலைச் சுற்றுக்கு விட்டு, அதனை மே 30-இல் சட்டமாக நிறைவேற்றி விட்டது. இந்தச் சட்டம் ஏற்கனவே காலாவதி யான 'தடா' சட்டத்தின் மறுபதிப்பே. சில சட்டவிதிகள் முன் பின் மாற்றி எழுதப்பட் டுள்ளன.

'தடா'வில் பயங்கரவாதம் மற்றும் கல வர நடவடிக்கைகள் என்பதற்கான வரைவி ளக்கம் தனியான அல்லது பொதுவான பரந்து விரிந்த செயல்பாடுகள் அனைத்தை யும் உள்ளடக்குமாறு விரிவானதாக இருந் தது.

'பொடா'விலும் பயங்கரவாதம் என் பது என்ன என்பதற்கான விளக்கம் தெளி வாக வரையறுக்கப்படவில்லை. இந்த வரை யறையைப் பாருங்கள்.

''2. (g) ''பயங்கரவாத நடவடிக்கை'' என்பதன் பொருள் செய்கின்ற எந்தச் செய லும், -

i) மக்களிடையே அல்லது எந்த ஒரு பிரிவு மக்களிடையே அல்லது வேறுபட்ட பிரிவினரான மக்களிடையே நிலவுகின்ற சுமூக உறவைப் பாரதூர மாகப் பாதிக்கின்ற வகையில், பயபீதியூட் டும் வகையில் வெடி குண்டு, டைனமைட் அல்லது எந்த ஒரு வெடிபொருளோ அல் லது தீப்பற்றக்கூடிய பொருளோ அல்லது சுடு கருவிகளோ அல் லது அபாயகரமான ஆயுதங்களோ அல்லது விசமோ அல்லது நச்சுக் காற்றோ அல்லது பிற இரசாயனப் பொருட்களோ அல்லது வேறு ஏதாவது ஆபத்தான பொருட்களி னாலோ (உயிரியல் அல்லது பிற பொருட் கள்) ஒரு நபருக்கு அல்லது நபர்களுக்கு சாவோ அல்லது காயமோ அல்லது இழப்போ அல்லது பாதிப்போ அல்லது சொத்துக்களுக்குச் சேதமோ விளைவிக்கும் படி செய்வது; அல்லது.

ii) எந்த ஒரு நபரையாவது கடத்தி வந்து அடைத்து வைத்துக் கொன்று விடுவேன் அல் லது காயப்படுத்துவேன் என மிரட்டி ஒரு நபரை அல்லது அதிகாரத்தைக் கட்டாயப்ப டுத்தி ஒரு செயலைச் செய்ய வைப்பது அல் லது செய்ய உள்ளதைத் தடுப்பது:''

இதை எப்படி வேண்டுமானாலும் வளைத்து, யாரையும் பயங்கரவாதியாக்க லாம். உதாரணமாக உங்கள் வீட்டுக் குழந்தை விளையாட்டாக வானொலி அல்லது தொலைக்காட்சிப் பெட்டியின் சத்தத்தை திடீ ரென உயர்த்திவிட்டது எனக் கொள்வோம். அச்சத்தம் பக்கத்து வீட்டுக்காரரைத் திடுக்கிட வைத்து, அவர் வேலையைப் பாதித்து விட லாம். கையிலிருந்த பொருள் கீழே விழுந்து உடைந்து விடலாம். இதை மேலே உள்ள சட்ட சரத்துப்படி பயங்கரவாதம் என வரைய றுக்க முடியும்.

'தடா' சட்டத்தில் போலீசு பயங்கரவாதி என ஒருவர் மீது குற்றம் சாட்டும். நீதி மன்றத் தில் பயங்கரவாதி இல்லை எனக் குற்றம் சாட் டப்பட்டவர் தான் நிரூபிக்க வேண்டும். அப் படி நிரூபிக்காத வரையில் குற்றம் சாட்டப்பட் டவர் குற்றவாளி என்கிறது 'தடா' சட்டம். 'பொடா' சட்டத்திலும் இதே தான் உள்ளது.

இந்திய அரசியல் சட்டப்படியும், குற்ற வியல் சட்டப்படியும் போலீசு ஒருவரைக் கைது செய்தால், குற்றவாளி என நிரூபிக்க வேண்டியது போலீசின் கடமை. குற்றம் நிரூ பிக்கப்படும் வரை கைதானவர் குற்றவாளி இல்லை. இதுதான் இயற்கை நீதி; இந்திய அரசியல் சட்டம். இங்கு இது தலைகீழாக உள்ளது.

'தடா'வில் பயங்கரவாதி என கைது செய்யப்படுபவருக்கு, என்ன குற்றம் செய் தார் எனக் கூற வேண்டியதில்லை. யார் குற் றம் சாட்டுகிறார் எனவும் கூறத் தேவை யில்லை. 'பொடா'விலும் இதே விதி உள்ளது.

'தடா' சட்டப்படி கைது செய்தவரை விசாரணையின்றி ஓராண்டு சிறை வைக்க லாம். பிறகு நீதிமன்றத்தில் கூறி அடுத்தடுத்து ஆண்டுக்கணக்கில் விசாரணையின்றி சிறை வைக்கலாம். 'பொடா'வில் விசாரணை யின்றி 180 நாள் சிறை வைக்கலாம். நீதிமன்ற அனுமதி பெற்று அடுத்தடுத்து ஆண்டுக்க ணக்கில் விசாரணையின்றி சிறை வைக்க லாம். கைது செய்தவரின் உறவினர்க ளுக்கோ, வழக்கறிஞருக்கோ தகவல் தர வேண்டும் என்ற இந்திய அரசியல் சட்ட விதி இரண்டிலுமே மீறப்படுகிறது.

பிணையில் விடுவிப்பது பற்றி 'தடா', 'பொடா' இரண்டிலும் கூறப்பட்டிருந்தாலும், 10 ஆண்டு கால 'தடா' கொடூரத்தில் ஓரிருவ ரைத் தவிர, குற்றம் சாட்டப்பட்ட பெரும்பால னவர்கள் பிணையில் விடுவிக்கப்பட வில்லை. நடைமுறையில் 'பொடா' சட்டத்தி லும் இதேதான் நடக்கும்.

'தடா' சட்டப்படி விசாரணை செய்ய தனியே சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டு, அங்கு பூட்டிய அறைக்குள் விசாரணை இரக சியமாக நடக்கும். 'பொடா'விலும் தனி சிறப்பு நீதிமன்றம், இரகசிய விசாரணை என் விதிகள் அப்படியே உள்ளன. இவை அனைத்துமே இயற்கை நீதிக்கு எதிரானவை. இந்திய அரசியல் சட்டம் வழங்கும் அடிப் படை உரிமைகள், குற்றவியல் சட்ட விதிக ளுக்கு எதிரானவை.

'தடா' சட்டப்படி பயங்கரவாதி எனக் குற்றம் சாட்டப்பட்டவரின் சொத்துக்கள் பறி முதல் செய்யப்படும். அவருக்கு உதவியவர் கள், வெறுமனே தொடர்பு கொண்டிருந்தவர் கள், தெரிந்தோ தெரியாமலோ தங்க உதவிய வர்கள் என அனைவரையுமே பயங்கரவாதி எனக் குற்றம் சாட்டி, விசாரணையின்றி சிறை யிலடைக்கலாம். 'பொடா' சட்டமும் இதே விதிகளைக் கொண்டுள்ளன.

தடாவைப் போன்றே போலீசு காவலில் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள் ''பொடா''விலும் சாட்சியங்களாக அனும திக்கப்படுகின்றன. இது இந்தியக் குற்றவியல் சட்டத்திற்கு எதிரானது. மாதக் கணக்கில் விசாரணையின்றி போலீசு காவலில் வைத்தி ருக்கும் போது, வாக்குமூலம் எப்படிப் பெறு வதென போலீசுக்குச் சொல்லியா தர வேண் டும்!

'தடா'விலும் சரி, 'பொடா'விலும் சரி, பயங்கரவாதிக்கு எதிராக சாட்சியமளிப்பவ ரின் இரகசியம் பாதுகாக்கப்படும். பிறகு அவ ரைக் குறுக்கு விசாரணை செய்ய குற்றம் சாட் டப்பட்டவருக்கு உரிமையில்லை. ஆனால் முகம் தெரியாத ஒருவரின் குற்றச்சாட்டை, குற்றம் சாட்டப்பட்டவர் பொய் என நிரூபிக் காதவரை அவர் குற்றவாளியே. அவர் சிறை யிலிருந்து வெளிவர வழியில்லை.

பயங்கரவாதி என போலீசால் குற்றம் சாட்டப்பட்டவர் பல ஆண்டு சிறைவாசத்துக் குப் பின் நிரபராதி என விடுவிக்கப்பட்டால், குற்றமே செய்யாமல் தண்டனை அனுபவித்த தற்காக அந்த போலீசார் மீதோ, அரசு மீதோ வழக்குத் தொடுக்க முடி யாது. நட்ட ஈடு கோர வும் முடியாது. 'தடா', 'பொடா' இரண்டிலுமே இதே விதிகள் உள்ளன.

இப்படி எல்லா வகைகளிலும் 'தடா' வின் நகலாகவே 'பொடா' சட்டம் உள் ளது. 'தடா'வில் உச்ச நீதி மன்றத்தில் மட்டுமே மேல் முறையீடு செய்ய முடியும். 'பொடா'வில் உயர்நீதி மன் றம், உச்சநீதி மன்றம் இரண்டிலும் அடுத்த டுத்து மேல் முறையீடு செய்து கொள்ளலாம்.

தமிழக 'பொடா' சட்டம் பல வழிகளில் 'தடா'வை விடக் கொடூரமானதாக உள்ளது. இதில் கைதுகளைப் பரிசீலிக்க 'போர்டு' இல்லை. விசாரணை அதிகாரி யார் என்ற வரையறை இல்லை. சாதாரண உதவி ஆய் வாளர் கூட சிறை வைக்கலாம். இச்சட்டத்தில் 10 இலட்சம் வரை அபராதம் என கூடுதலான தண்டனை உள்ளது. தடாவில் வெறும் சிறை தண்டனை மட்டும்தான். 'பொடா'விலோ தூக்கு தண்டனையே உள்ளது.

அரசியல் நிர்ணயச் சட்டம் உத்தரவாத மளிக்கும் ஒவ்வொரு பாதுகாப்பும், அந்த பாதுகாப்பு மீறப்படும் போது அதை சோதித்து சரிசெய்வதற்காக அது உருவாக்கி யுள்ள அமைப்பும் அதன் நடைமுறையும், இயற்கை நீதியியலை மீறாமலிருப்பது என்ற மனிதாபிமான இலட்சியம், நமது மக்கள் பல் லாண்டு காலமாகப் போராடிப் பெற்ற குறைந்த பட்ச ஜனநாயக உரிமைகள் இவை எல்லாமே காற்றில் பறக்க விடப்பட்டுள்ளன.

'பொடா' மீது தமிழக சட்டமன்றத்தில் பெரிய அளவு விவாதம் நடக்கவில்லை. இந் திய தேசியலீக், சி.பி.ஐ., சி.பி.எம்., புதிய தமிழகம், பா.ம.க. உறுப்பினர்கள் தவறு என வாதிட்டனர். இதை மீறி மிகவும் அவசர அவசரமாக சட்ட முன்வரைவு வைக்கப்பட்



படிப்பகம்

www.padippakam.com

டது. மிருக மெஜாரிட்டி இருப்பதால் ஒரே நாளில் சட்டமாக்கப்பட்டுள்ளது. எல்லாவற்றிலும் தி.மு.க.வை எதிர்க்கும் அ.தி.மு.க., இச்சட்டத்தை வரவேற்றுள்ளது. இதிலிருந்தே இச்சட்டத்தின் யோக்கியதையை நாம் புரிந்து கொள்ளலாம்.

'பொடா' சட்டமே தவறானது. இந்திய அரசியல் சட்டத்திற்கு எதிரானது. தவறான இந்த 'பொடா' சட்டத்தை தவறாகப் பயன்படுத்த மாட்டோம் என வாக்குறுதி தருகிறார்கள். அப்படியானால் சட்டத்தையே கைவிட வேண்டியதுதானே! இதே போலத்தான் 'தடா'வை பயங்கரவாத பகுதியில் மட்டுமே பயன்படுத்துவோம் என்கின்றனர். ஆனால் 'தடா'வை எந்த அளவு கேடுகெட்ட முறையில், நாடு முழுதும் பயன்படுத்தினார்கள் எனக் கேட்டால் நெஞ்சம் குமுறும். கல் நெஞ்சமும் கரையும்.

● பரோடாவைச் சேர்ந்த 15 வயதேயான, மனநிலை குன்றிய சிறுவனும் தடாவில் கைதாகியிருந்தான்.

● குஜராத்தில், ஜாம்ஜோத்பூர் காவல் நிலையத்தில் ஒரு கர்ப்பிணிப் பெண்ணும், ஒரு 8 வயதுச் சிறுவனும் தடாவில் கைது செய்யப்பட்டுச் சித்திரவதைக்குள்ளாயினர். இச்செய்தி மெல்லக் கசிந்து அக்டோபர் 30, 1991-இல் வெளிவந்தது. மேலும் இதே காவல் நிலையத்தில் மேலும் பல அப்பாவிகளை 'தடா'வின் கீழ் சிறை வைத்தனர். இது தவிர பலரையும் 'தடா'வில் கைது செய்வோம் என போலீசு மிரட்டியது. இது பற்றிய புகார் வந்து, நீதிமன்ற விசாரணையில் உண்மை என நிருபணமானது. வேறு வழியற்ற அரசு, ஜாம்ஜோத்பூர் நகர உதவிக் கமிஷனரை மாற்றம் செய்தது.

● தங்கள் வாழ்க்கைக்காகப் போராடிய மத்திய வனப் பிராந்தியங்களைச் சேர்ந்த ஆதிவாசிகள் 'தடா'வில் சிறைப்பட்டனர்.

● குஜராத்தில் அம்பானியின் ரிலையன்ஸ் குரூப்பினுடைய விமல் ஆலைகளில் வேலை நிறுத்தம் செய்த தொழிலாளிகள் இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

● பத்திரிகையாளர்களும் கல்வியாளர்களும் குடியுரிமைப் போராளிகளும் கூட இச்சட்டத்தால் சிறையிலடைக்கப்பட்டனர். இவர்கள் மீது பொய்க்குற்றம் சாட்டி, பழிவாங்கும் நடவடிக்கையாக 'தடா'வை ஏவினர்.

● நெய்வேலி ம.க.இ.க. தோழர்கள் நான்கு பேர் 'ஜெயா'வின் அராஜகத்தைக் கண்டித்து சுவரொட்டி ஒட்டியதற்கு 'தடா'வில் சிறையிலடைத்து சித்திரவதைக்குள்ளானார்கள்.

● அப்பாவி முஸ்லிம்கள் பல்லாயிரம் பேர் நாடு முழுதும் சிறையிடப்பட்டனர்.

● 10 ஆண்டுகளில் 'தடா'வில் சுமார் 70,000 பேர் நாடு முழுதும் கைதாயினர். இதில் தண்டிக்கப்பட்டவர்கள் சுமார் 400 பேர்தான். அதாவது ஒரு சதவீதத்தினர் கூட பயங்கரவாதிகள் என நிரூபிக்கப்படவில்லை.

இவ்வளவு கொடிய சட்டமியற்றி, போலீசு அதை மிகமிகக் கேடாக, பலிவாங்க மட்டுமே பயன்படுத்தியது என எவ்வித சந்தேகத்திற்குமிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.

காங்கிரசு ஆண்ட மாநிலங்களில் எதிர்க்கட்சியினரும், எதிர்க்கட்சியினர் ஆளும் மாநிலங்களில் காங்கிரசு கட்சியினரும் 'தடா'வில் சிறைப்பட்டனர். எல்லா மாநிலங்களிலும் முஸ்லிம்கள், அப்பாவிகள், தொழிலாளிகள் சிறைப்பட்டனர். 'தடா'வை முதலில் எதிர்த்த சி.பி.எம். கட்சி, மேற்கு வங்கத்தில் 'தடா'வைக் கேடாகப் பயன்படுத்தியது.




இதே வழியில் தமிழகத்திலும் 'பொடா' கேடாகப் பயன்படுத்தப்படும் என்பதில் எள்முனையளவும் சந்தேகத்திற்கிடமில்லை.

முஸ்லிம் மதவெறியர்கள் குண்டு வீசினார்களே என சிலர் கேட்கலாம். இன்றுள்ள கிரிமினல் சட்டத்தின்படி இக்குற்றவாளிகளைக் கைது செய்து தண்டிக்கலாம்.

356-இன் கீழ் ஆட்சிக் கலைப்பு என்ற பயங்கரம்தான் கருணாநிதியை கனவிலும் துரத்துகிறது. இதை எதிர்த்து மக்களைத் திரட்டிப் போராடத் திராணியற்ற கருணாநிதி, கருப்புச் சட்டமியற்றி, முஸ்லிம்களை ஒடுக்கி, பாரதீய ஜனதாவின் கடைக்கண் பார்வைக்குத் தவமிருக்கிறார். இந்த கருணாநிதிதான் மேடைதோறும் 'மிசா'வையும், 'தடா'வையும் எதிர்த்ததாக மார் தட்டியவர்.

'பொடா' மூலம் அளவற்ற அதிகாரம் பெற்ற போலீசு வரையறையின்றி நரவேட்டையாடும். ஏற்கனவே கோவையில் பார்ப்பன மதவெறி கும்பலுடன் சேர்ந்து 21 அப்பாவி முஸ்லிம்களை தீயிட்டும், சுட்டும் கொன்றுள்ளது போலீசு. 'பொடா' வந்தால் கேள்வி கேட்கக்கூட முடியாது.

அது மட்டுமல்ல, சமூக ஒற்றுமைக்குத் தீங்கு விளைவித்ததாக, சாதீய ஒடுக்குமுறையை எதிர்க்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் கைது செய்யப்படலாம்.

தமிழின உணர்வாளர்கள் 'பொடா'வில் கைது செய்யப்படலாம்.

போலீசாரின் அட்டூழியங்களை அம்பலப்படுத்தும் பத்திரிகையாளர்களும் ஜனநாயக சக்திகளும் பொது அமைதிக்கு கேடு செய்தவர்களாக 'பொடா'வில் சிறை வைக்கப்படலாம்.

புரட்சிகர அமைப்பினர், மக்கள் நலனுக்காகப் போராடினாலும் 'பொடா'வில் கைது செய்யப்படலாம்.

ஏன் '356'-ஐ தூக்கிப் போட்டு, தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டால், இன்று சட்டமியற்றிய தி.மு.க.வினரே, நாளை 'பொடா' கைதிகளாகும் வாய்ப்பு உண்டு. இச்சட்டத்தை 'உள்துறை அமைச்சர் அத்வானியே பாராட்டி, மற்ற மாநிலங்களும் இச்சட்டத்தைப் பின்பற்றி, சட்டம் கொண்டு வர வேண் டும் எனப் பேசியுள்ளார்' என கருணாநிதி அகமகிழ்கிறார்.

உண்மைதான். மனிதர்களை நரவேட்டையாடும் அத்வானி இந்த ஆள்தூக்கிச் சட்டத்தைப் பாராட்டுவார். பிற மாநிலங்களுக்கும் பரிந்துரைப்பார். பாரதீய ஜனதா 'தடா'வை நீக்கக் கூடாது என திரும்பத் திரும்ப வலியுறுத்திய கட்சி. ஆனால் ஹைதராபாத்தில் பத்திரிகையாளர்களிடம் பேசும்போது, மத்திய அரசு 'தடா'வைக் கொண்டு வராது என்றார். மாநில அரசுகளே 'பொடா' போன்று சட்டமியற்றலாம் என தமிழகம் ஒரு முன்மாதிரியாகச் செயல்படும்போது, மத்திய அரசு கொண்டு வர வேண்டியதில்லேயே! இப்படி பாசிஸ்டுகளின் பங்காளியானதற்கு கருணாநிதியும் மகிழலாம்.

ஆனால் இந்த கேடு கெட்ட, கொடூர, அரசியல் சட்டம் வழங்கிய அடிப்படை உரிமைகளைப் பறிக்கும், மனிதாபிமானமற்ற 'பொடா' சட்டத்தை ஜனநாயக உணர்வுள்ள, மனிதாபிமானமுள்ள எவரும் அனுமதிக்க முடியாது! கூடாது!

● வீரையன்



படிப்பகம்

www.padippakam.com

## தென்கிழக்காசியப் பொருளாதார வீழ்ச்சி:

# நாணய மதிப்புக் குறைப்பு வல்லரசுகளின் மறுகாலனியாதிக்க ஆயுதம்

தென் கிழக்காசிய நாடுகளில் சென்ற ஆண்டில் ஏற்பட்ட நாணய மதிப்பின் சரிவு, தாய்லாந்து, இந்தோனேஷியா, தென் கொரியா - இம்மூன்று நாடுகளில்தான் மிகவும் கோரமான விளைவுகளை ஏற்படுத்தியது; இம்மூன்று நாடுகளுமே தாங்கள் வாங்கியிருந்த அந்நியக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல், "மஞ்சக் கடுதாசி" கொடுக்கும் நிலைக்குச் சென்றன. இப்பொருளாதாரச் சரிவில் இருந்து இந்நாடுகளை மீட்டெடுக்க சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எஃப்.) முன் வந்தது.

ஏழை நாடுகளுக்கு கடன் கொடுக்கவும், நிதியுதவி செய்யவும் ஐ.எம்.எஃப். முன் வைக்கும் நிபந்தனைகள், பொதுவாகவே அந்நாடுகளின் வளத்தை ஏகாதிபத்தியங்கள் கொள்ளையிட வழி ஏற்படுத்தித் தரும் நோக்கம் கொண்டவைதான்.

ஆனால், அந்நியக் கடன் வலையில் சிக்கிக் கொண்ட இம்மூன்று நாடுகளுக்கு நிதியுதவி செய்ய ஐ.எம்.எஃப். முன் வைத்த நிபந்தனைகள், இந்நாடுகளின் நிதி மற்றும் தொழிற்துறைகளைப் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் எளிதாகக் கைப்பற்றிக் கொள்ள வழி ஏற்படுத்தித் தந்துள்ளன. இதுநாள்வரை ஏகாதிபத்தியங்களுக்குச் சேவை செய்து வந்த தரகுப் பெரு முதலாளிகளுள் ஒரு பிரிவினரைக் கூடப் பன்னாட்டு நிறுவனங்கள் கபளீகரம் செய்யும் வண்ணம், இந்நாடுகளில் தாராளமயமாக்கலைத் தீவிரமாக நடைமுறைப்படுத்த ஏகாதிபத்தியங்கள் உத்தரவிட்டுள்ளன. சுருக்கமாகச் சொன்னால், இம்மூன்று நாடுகளிலுமே சர்வதேச நாணய நிதியம், மிகவும் வெளிப்படையாகவே ஒரு "சூப்பர்" அரசாங்கம் போல் செயல்படத் துவங்கிவிட்டது.

தென் கொரியாவுக்கு 5,700 கோடி அமெரிக்க டாலர்கள் கடன் வழங்க முன் வந்த ஐ.எம்.எஃப்., இதற்காக பல நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தத்தை சென்ற ஆண்டின் இறுதியில் தயாரித்தது. அதன்படி,

- "தென் கொரியாவின் வங்கித் துறையில் அந்நிய நாட்டினர் முதலீடு செய்வதற்கு இருந்த தடைகளை நீக்கிவிட்டு, அவர்கள் 55 சதவீதம் வரை முதலீடு செய்யலாம் என்ற சலுகையை பிப்ரவரி 98-க்குள் தென் கொரியா அரசு அறிவிக்க வேண்டும்."
- "அந்நிய முதலீட்டு நிறுவனங்கள் உள்நாட்டு வங்கிகளின் பங்குகளை வாங்கி குவித்துக் கொள்ளுவதற்கு எவ்வித தடையும் இருக்கக் கூடாது."

இந்த இரு நிபந்தனைகளால் மட்டும் தென் கொரியா நாட்டைச் சேர்ந்த 26 வர்த்தக வங்கிகள், 21 தொழில் - வர்த்தக முதலீட்டு வங்கிகள், 12 காப்பீட்டு நிறுவனங்கள், 27 பங்கு பத்திர நிதி நிறுவனங்களை பன்னாட்டு நிதி நிறுவனங்கள் கைப்பற்றிக் கொள்ளும் அபாயம் எழுந்துள்ளது. தென் கொரியாவின் பணமதிப்பு அதளபாதாளத்தில் வீழ்ந்து கிடப்பதால், மேலே குறிப்பிடப்பட்டுள்ள அத்துணை நிறுவனங்களையும், வெறும் 370 கோடி அமெரிக்க டாலருக்கு (14,800 கோடி ரூபாய்) பன்னாட்டு நிறுவனங்கள் விலைக்கு வாங்கி விடலாம்.

தென் கொரியாவின் நிதித் துறையை மட்டுமல்ல, அந்நாட்டு நிதி அமைச்சகத்தையும் முடமாக்கி விட வேண்டும் என்பதுதான் ஏகாதிபத்தியவாதிகளின் நோக்கம். நமது நாட்டின் ரிசர்வ் வங்கியைப் போல, தென் கொரியாவின் நிதித் துறையைக் கட்டுப்படுத்திக் கண்காணித்து வரும் கொரியா வங்கியை மறு ஒழுங்கு செய்ய வேண்டும் என்றும், நிதி அமைச்சகத்தின் அதிகாரங்களைக் குறைக்க வேண்டும் என்றும் ஐ.எம்.எஃப். நிபந்தனை விதித்தது. தென் கொரியாவின் நிதி மற்றும் செலாவணிக் கொள்கைகளை அந்நிய முதலீட்டாளர்கள்தான் வரையறுப்பார்கள் என்பதும் ஐ.எம்.எஃப். கட்டளைகளுள் ஒன்று.

தென் கொரியா மேற்கத்திய நாடுகளுக்கு இணையாகத் தொழில் வளர்ச்சி அடைந்த நாடாகும். மின்னணுப் பொருட்கள் - மோட்டார் வாகனங்கள் தயாரிப்பிலும், ஏற்றுமதியிலும், தென் கொரியாவுக்கு உலகச் சந்தையில் கணிசமான பங்குண்டு. இந்நாட்டைச் சேர்ந்த தேவூ, கியா, ஹுண்டாய், சாம்சங் உள்ளிட்ட பல தொழிற்கழகங்கள், தென் கொரிய அரசின் ஆதரவு, நிதியுதவியுடன் மேற்கத்திய பன்னாட்டு நிறுவனங்களுடன் போட்டியிடும் அளவிற்கு வளர்ந்தன.

தென் கொரியாவின் நிதிச் சந்தையையும், நிதி அமைச்சகத்தையும் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதன் மூலம், தென் கொரியாவின் தொழிற்துறையையும் முடமாக்கி விழுங்கி விடுவதுதான் ஏகாதிபத்தியங்களின் திட்டம். இதனின் முதல் கட்டமாக, உள்நாட்டு நிதிச் சந்தையில் இருந்து இத்தொழிற்கழகங்கள் கடன் பெறுவதற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. ஏற்றுமதி வாணிகத்தில் தென் கொரியத் தொழிற்கழகங்களின் பங்கை வீழ்த்துவதற்காக, தொழிற்துறை உற்பத்தியை சரிபாதியாகக் குறைக்கும்படி உத்தரவிட்டுள்ளது, ஐ.எம்.எஃப். மேலும், ஏகாதிபத்திய நாடுகளின் - குறிப்பாக ஜப்பான் நாட்டில் இருந்து தொழிற்துறை உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு இதுவரை இருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

★☆★

தாய்லாந்து, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 1720 கோடி அமெரிக்க டாலர்கள் கடன் பெற ஏற்றுக் கொண்ட நிபந்தனைகளால், அந்நாட்டின் 15 வர்த்தக வங்கிகளை, அந்நிய நாட்டு பண முதலைகள் கைப்பற்றி விடும் நிலை எழுந்துள்ளது.

- அமெரிக்க நாட்டின் "சிட்டி பாங்க்", தாய்லாந்தின் "முதல் பாங்காங் நகர வங்கியின்" 50% சதவீதப் பங்குகளை வாங்குவதற்கு ஒப்பந்தமிட்டுள்ளது.
- நாணய மதிப்பின் வீழ்ச்சியால் தாய்லாந்தின் 58 நிதி நிறுவனங்கள் இழுத்து மூடப்

ஐ.எம்.எஃப். விதித்த நிபந்தனைகளை எதிர்த்து தென்கொரியாவின் மைய வங்கி ஊழியர்களின் ஆர்ப்பாட்டம்.





படிப்பகம்

www.padippakam.com

பட்டுவிட்டன. எஞ்சிய நிறுவனங்களுள் ஒன்றான பாங்காங் முதலீட்டு நிறுவனத்தின் 80 சதவீத பங்குகளை, அமெரிக்காவின் ''ஏ.ஐ.ஜி. கன்ஸ்யூமர் பைனான்ஸ் குரூப்'' கைப்பற்றிவிட்டது.

• ''அமெரிக்கன் இண்டர்நேஷனல் குரூப்'', சிங்கப்பூர் வளர்ச்சி வங்கி உள்ளிட்ட பல அந்நிய நிதி நிறுவனங்களும், வங்கிகளும் இரையைத் தேடி அலையும் புலி போல, தாய்லாந்தின் நிதித்துறையை விழுங்கிவிட அந்நாட்டினுள் அலைந்து திரிகின்றன.

★☆★

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 4300 கோடி அமெரிக்க டாலர்கள் கடன் பெறவுள்ள இந்தோனேஷியா, தனது நாட்டின் நாணய மதிப்பின் வீழ்ச்சியைத் தடுப்பதற்காக, சில நடவடிக்கைகளை எடுக்கத் திட்டமிட்டது. இந்தோனேஷியாவின் இந்நடவடிக்கைக்கு ஐ.எம்.எஃப். ஒப்புதல் அளிக்கவில்லை. ஏனெனில், நாணய மதிப்பின் வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்திவிட்டால், இந்தோனேஷியாவின் தொழில்களை பன்னாட்டு நிறுவனங்கள் அடிமாட்டு விலைக்கு வாங்க முடியாமல் போய் விடும் என்ற ஏகாதிபத்திய அக்கறைதான் ஐ.எம்.எஃப்.-இன் எதிர்ப்புக் குக் காரணம். பாமாயில், பிளைவுட் உற்பத்தியிலும், மரம் ஏற்றுமதியிலும் ஏகபோகமாகத் திகழும் உள்நாட்டு தொழிற் கழகங்களில் அந்நிய நிறுவனங்கள் நுழைவதற்கு வசதியாக சட்ட திருத்தம் கொண்டு வர ஐ.எம்.எஃப். உத்திரவிட்டுள்ளது.

★☆★

ஓராண்டுக்கு முன்னர் வரை, ஏகாதிபத்திய பொருளாதாரவாதிகள் தென் கொரியாவை ஆசியப்புலி என உச்சி முகர்ந்தனர். இந்தோனேஷியாவும், தாய்லாந்தும் புலிக் குட்டிகள் என்றழைக்கப்பட்டன. இந்நாடுகளின் நிதித்துறையில் செய்யப்பட்ட சீர்திருத்தங்களைப் பயன்படுத்திக் கொண்டு, உள்நாட்டு தனியார் முதலாளிகள் பன்னாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து குறைந்த வட்டிக்குக் கடன் பெற்று, அதை அதிக வட்டிக்கு உள்நாட்டில் முதலீடு செய்ததைத்தான் ஏகாதிபத்தியவாதிகள் பிரமிக்கத்தக்க வளர்ச்சி என ஊதிப் பெருக்கினர். ஆனால், இந்நாடுகளில் குவிக்கப்பட்ட மூலதனத்திற்கு ஏற்ப உற்பத்தித் திறன் வளராததாலும், (குறிப்பாக, இந்த அந்நியக் கடன் மூலதனம் தாய்லாந்தில் ''ரியல் எஸ்டேட்'' சூதாட்டத்தில் போடப்பட்டது) சர்வதேச ஏற்றுமதி வியாபாரத்தில் ஏற்பட்ட மந்தத்தாலும், அமெரிக்க டாலர் நாட்டினுள் வருவது திடீரென்று குறைந்து போய், வெளியேறிச் செல்வது அதிகமானதால் ஏற்பட்ட நாணய மதிப்பின் வீழ்ச்சியினாலும் தான் இந்நாடுகள் அந்நியக் கடன் வலைக்குள் சிக்கிக் கொண்டன.

அதே சமயம், கடன் கொடுத்த பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்கோ, கடன் வாங்கிய தனியார் முதலாளிகளுக்கோ இதனால் எந்தவித நட்டமும் ஏற்பட்டுவிடவில்லை. நாணய மதிப்பு விழத் தொடங்கியவுடனேயே தனியார் முதலாளிகள், தாங்கள் நடத்தி வந்த நிதி நிறுவனங்களை இழுத்து மூடிவிட்டு ஓடிவிட்டனர். பன்னாட்டு நிதி நிறுவனங்களோ, இச்சரிவைப் பயன்படுத்திக் கொண்டு இரு வழிகளில் இலாபமடைந்துள்ளன.

தனியார் முதலாளிகளுக்குத் தாங்கள் கொடுத்த கடன் திவாலாகிப் போய்விடாமல் தடுப்பதற்காக, ஐ.எம்.எஃப். மூலம் இந்நாடுகளுக்குக் கடன் கொடுத்து, தாங்கள் கொடுத்த கடனைத் திரும்ப வசூலித்துக் கொள்வதற்கு உத்திரவாதம் ஏற்படுத்திக் கொண்டுவிட்டன. அதாவது தனியார் முதலாளிகள் வாங்கிய கடன் இப்பொழுது நாட்டின் பொதுக் கடனாகிவிட்டது. இரண்டாவதாக, கடன் கொடுப்பதற்கும் நிபந்தனைகளை விதித்து, இந்நாடுகளின் தொழில்களையும் விழுங்கத் தொடங்கிவிட்டன.

அதே பொழுதில், தனியார் முதலாளிகளும், பன்னாட்டு நிதி நிறுவனங்களும் கூட்டுச் சேர்ந்து இந்நாடுகளின் பொருளாதாரத்தைச் சூதாட்ட மயமாக்கியதின் எதிர் விளைவுகள் அனைத்தையும் - ஆலை மூடல், வேலையிழப்பு, விலைவாசி உயர்வு, அந்நியக் கடன் அதிகரிப்பு - பொது மக்கள் தாங்கிக்கொள்ள வேண்டிய கேடு கெட்ட நிலையை உருவாக்கிவிட்டன.

ஒரு நாட்டின் நாணய மதிப்பை வீழ்த்துவதன் மூலம், அந்நாட்டின் தொழில் நிதித் துறைகளைக் கைப்பற்றிக் கொண்டு, அந்நாட்டை மறுகாலனியாக்குவதை ஏகாதிபத்தியங்கள் தீவிரமாக்குகின்றன என்பதைத்தான் இந்நாடுகளின் அனுபவங்கள் சுட்டிக் காட்டுகின்றன. இதற்காகத்தான் நிதித்துறையில் தாராளமயமாக்கலை விரைந்து புகுத்துமாறு ஏகாதிபத்தியங்கள் கட்டளையிடுகின்றன. இந்தியாவில், பா.ஜ.க. அரசு காப்பீட்டுத் துறையைத் தனியாருக்குத் திறந்துவிட்டிருப்பதன் மூலம், ஏகாதிபத்தியங்களின் இச்சூழ்ச்சிக்குத் துணை போயுள்ளது என்றுதான் கூற வேண்டும்!

• செல்வம்

**ஒரு நாட்டினை மறுகாலனியாக்குவதைத் துரிதப்படுத்த, அந்நாட்டின் நாணய மதிப்பை வீழ்த்துவதை ஏகாதிபத்தியங்கள் ஓர் உத்தியாகக் கையாளத் தொடங்கியுள்ளன. இதற்காகத் தான் நிதித் துறையில் தாராளமயமாக்கலை விரைந்து புகுத்துமாறு கட்டளையிடுகின்றன. இந்தியாவில், பா.ஜ.க. காப்பீட்டுத் துறையைத் தனியாருக்குத் திறந்து விட்டிருப்பதன் மூலம் ஏகாதிபத்தியங்களின் இச்சூழ்ச்சிக்குத் துணை போயுள்ளது.**

## ரவுடிகளின் ஆதிக்கத்திலிருந்து பொன்மலையை மீட்டெடுப்போம்!

திருச்சி பொன்மலை பகுதியில் மைய தொடர் வண்டித் தொழிலகம் உள்ளது. இங்கு தொழிலாளிகள் குவிந்து வசிக்கின்றனர். தொழிலாளர்கள் தானுண்டு தன் வேலையுண்டு என ஒதுங்கும் போக்கில் வசிப்பதால், கையளவேயான சிறு கும்பலின் பெருகிவரும் ரவுடித்தனங்கள் அப்பகுதி மக்களைப் பீதியூட்டி வருகின்றது.

கள்ளநோட்டு, கடத்தல், கந்து வட்டி என சட்டவிரோத - சமூக விரோத நடவடிக்கைகள் மூலம் பணம் குவிப்பதையே குறியாகக் கொண்ட 'ரோக்' என்பவன் தலைமையில் இயங்கும் ரவுடிக் கும்பலைக் கொலைகார கூட்டமாக வளர்த்துவிட்ட 'பெருமை' பொன்மலை காவல் நிலைய உதவி ஆய்வாளராயிருந்த செந்தில்வேலையும், வடக்கு 'D' பகுதியில் வசிக்கும் ரெபல்லோ என்ற குத்துவிளக்கு மந்திரவாதியையும் சேரும். இவர்களால் கொல்லப்பட்ட சேகர் என்பவரது உறவினர்கள் இன்று பிச்சமுத்து என்ற ரவுடி கும்பலிடம் அடைக்கலம் அடைந்துள்ளனர். பொன்மலைப் பகுதியில் இவர்கள் ரவி என்பவரது தலைமையில் இயங்குகின்றனர்.

இந்த இரு ரவுடிக் கும்பலுக்கிடையிலான மோதலில் தலா 4 பேர் என 8 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மக்களைப் பீதியூட்டும் இக்கொலைகாரக் கும்பலை எதிர்த்து பொன்மலையில் 16.5.'98 அன்று மக்கள் கலை இலக்கியக் கழகம் பொதுக் கூட்டம் நடத்தியது. ''பொன்மலை ரயில்வே வொர்க்கர்ஸ் யூனியன்'' செயலர் தோழர் முருகானந்தம் தலைமையில், தோழர் காளியப்பன் சிறப்புரையாற்றினார்.

திடீர் பணக்கார ரவுடிகளை எதிர்த்து சில ஆண்டுகளுக்கு முன் ம.க.இ.க. - வி.வி.மு. - பு.மா.இ.மு.வினர் இயக்கம் எடுத்தனர். அவ்வியக்கத்திற்கு மக்கள் பெருமளவு ஆதரவு தந்தபோது, இச்சமூக விரோதக் கும்பல் பெட்டிப் பாம்பாய் அடங்கியது. மக்கள் பயந்து ஒதுங்குவதால்தான், இவர்கள் கொட்டமடித்து வருகிறார்கள். மக்கள் ஒன்று சேர்ந்தால் பொன்மலை ரவுடி கும்பல் ஒழிந்துவிடும் என விளக்கி, புரட்சிகர அமைப்புகளில் அணி திரள அறைகூவினர். கூட்ட இறுதியில் புரட்சிகர கலை நிகழ்ச்சி மக்களைத் தட்டியெழுப்பியது.

தகவல்:
பொன்மலை தொடர்வண்டி
தொழிலாளர் சங்கம்,
திருச்சி.



படிப்பகம்

# இந்தோனேஷிய மாணவர் போராட்டம்:
# கனவு நனவாகவில்லை

**இந்தோனேஷிய நாடெங்கும் மே மாத மத்தியில் கொழுந்து விட்ட எரியத் தொடங்கிய மாணவர் போராட்டம், அந்நாட்டு அதிபர் சுகர்டோ பதவி விலகிய பின்பு தணிந்து போனது. கடந்த 32 ஆண்டுகளாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆசியோடும், இந்தோனேஷிய இராணுவத்தின் ஆதரவோடும் சர்வாதிகார ஆட்சி நடத்தி வந்த சுகர்டோவின் பதவி விலகல், இந்தோனேஷிய மாணவர்களின் தியாகங்கள் நிறைந்த, போர்க் குணமிக்க போராட்டத்திற்குக் கிடைத்த குறிப்பிடத்தக்க வெற்றியாகும். எனினும், சுகர்டோவின் பதவி விலகல், இந்தோனேஷிய மாணவர்கள் கோரியபடி அந்நாட்டு அரசியல் வாழ்வில், ஆட்சி முறையில் மாற்றத்தைக் கொண்டு வந்து விடுமா என்பது சந்தேகத்திற்குரியதே!**

★☆★

இந்தோனேஷியா, தென் கிழக்காசியாவில், பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள 13,700 தீவுக் கூட்டங்களை உள்ளடக்கிய நாடாகும். பல்வேறு இன மக்கள் (Ethnic People) வாழும் இந்நாடு 1945-க்கு முன்பு டச்சுக் காலனியாக இருந்தது. காலனியாதிக்கத்தில் இருந்து நாட்டை விடுதலை செய்ய இந்தோனேஷிய கம்யூனிஸ்டுகளும், தேசியவாதிகளும் இணைந்து ஆயுதப் போராட்டத்தை நடத்தினர். 1945 ஆம் ஆண்டு இந்தோனேஷியா விடுதலை அடைந்த பின்பு, சுகர்னோ என்ற தேசியப் போராளியின் தலைமையில் தேசிய அரசாங்கம் அமைந்தது. இத்தேசிய அரசாங்கத்தில் கம்யூனிஸ்டுகளும் பங்கெடுத்துக் கொண்டனர்.

இளம் தேசிய அரசாங்கங்களைக் கவிழ்த்து விட்டு, தனது கைப்பாவைகளைக் கொண்டு பொம்மையாட்சி நிறுவும் சதியினை பல நாடுகளில் அரங்கேற்றிய அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ., இந்தோனேஷியாவிலும் மூக்கை நுழைத்தது. இந்தோனேஷிய தேசிய இராணுவத்தில் தளபதியாக இருந்த சுகர்டோ, சி.ஐ.ஏ. ஆதரவோடு, 1965 ஆம் ஆண்டு ஓர் அதிரடி அரண்மனைப் புரட்சியை நடத்தி, சுகர்னோ தலைமையில் இருந்த தேசிய அரசாங்கத்தைக் கவிழ்த்து விட்டு, ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டார். கம்யூனிசப் பூச்சாண்டியைக் காட்டி, தனது அதிரடி அரண்மனைப் புரட்சியை நியாயப்படுத்தினார், சுகர்டோ.

ஆட்சியில் அமர்ந்த மறுநிமிடமே, ''புதிய ஒழுங்கமைப்பு'' என்ற பெயரில் கம்யூனிசப் புரட்சியாளர்களை நர வேட்டையாடும் அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டார். இரண்டே ஆண்டுகளில் 15 இலட்சத்துக்கும் அதிகமான கம்யூனிசப் புரட்சியாளர்களும், அவர்களது ஆதரவாளர்களும் படுகொலை செய்யப்பட்டனர்; இரண்டு இலட்சத்துக்கும் அதிகமானோர் தனிக் கொட்டடிச் சிறைகளில் தள்ளப்பட்டனர். இலட்சக்கணக்கான கம்யூனிஸ்டுகளை நர வேட்டையாடியதற்காகவே அமெரிக்க ஏகாதிபத்தியம் சுகர்டோ அரசாங்கத்திற்கு நிதியுதவிகளை அள்ளி வழங்கியது.

கம்யூனிஸ்டுகளை மட்டுமல்ல, தனக்கு எதிரான சட்டபூர்வ எதிர்க்கட்சிகள் செயல்படுவதைக் கூடச் சகித்துக் கொள்ளாத பாசிஸ்டுதான் சுகர்டோ. நாடெங்கிலுமே அனைத்து சனநாயக இயக்கங்களின் குரல் வளைகளும் நெறிக்கப்பட்டன. ஐரியன் ஜாவா, கிழக்கு திமோர் போன்ற சிறுபான்மை தேசிய இனங்கள் மிருகத்தனமாக ஒடுக்கப்பட்டன. தனக்கு விசுவாசமான இராணுவ அதிகாரிகளின் தலைமையில் அமைந்த தொழிற்சங்கங்களே செயல்பட அனுமதிக்கப்பட்டன. இந்தோனேஷிய நாட்டுப் பாராளுமன்றம் சுகர்டோவின் தலைமையில் இயங்கும் கோல்கர் கட்சியைச் சேர்ந்த விசுவாசிகளின் மடமாக மாற்றப்பட்டது.

சுகர்டோவை சர்வாதிகாரியாகச் சித்தரிக்கும் முதலாளித்துவவாதிகள் கூட, அவரின் சாதனையாக இந்தோனேஷியாவைப் பொருளாதார வளமிக்க நாடாக மாற்றியதைக் குறிப்பிடுகிறார்கள். ஆனால், இந்த 'வளர்ச்சி'க்கு இந்தோனேஷியா கொடுத்த விலை மிக அதிகம். இன்று அந்நாட்டின் மொத்த தேசியக் கடன் 8,000 கோடி அமெரிக்க டாலர்கள் (3,20,000 கோடி ரூபாய்); தனியார் முதலாளிகள் 7,000 கோடி அமெரிக்க டாலர்களை அரசிடமிருந்தும், பன்னாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து கடனாகப் பெற்றுள்ளனர். அரசின் 1996-ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி இரண்டு கோடி இந்தோனேஷியர்கள் அடுத்த வேளை சோற்றுக்கு வழியின்றி ஏழ்மையில் சிக்கித் தவிக்கின்றனர்.

மறுபுறம், இந்தப் பொருளாதார வளர்ச்சி சுகர்டோவின் குடும்பத்திற்கும், அவருக்கு நெருக்கமாக இருந்த சிறு கும்பலுக்கும் தான் கொள்ளை இலாபத்தை அள்ளித் தந்தது. சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த சுகர்டோவின் இன்றைய சொத்தின் மதிப்பு 64,000 கோடி ரூபாய்.

பீற்றிக் கொள்ளப்பட்ட இந்தப் பொருளாதார வளர்ச்சியும், சென்ற ஆண்டின் மத்தியில் ஏற்பட்ட நாணய மதிப்பின் சரிவால் முதுகொடிந்து மரணப் படுக்கையில் வீழ்ந்து விட்டது. இதனால், மேலும் இரண்டு கோடி இந்தோனேஷியர்கள் வறுமை படுகுழிக்குள் தள்ளப்படும் அபாயம் எழுந்து நிற்கிறது.

சுகர்டோ ஆட்சியின் ஊழலையும், அதிகார முறைகேடுகளையும், இராணுவ ஒடுக்குமுறையையும், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும் சகித்துக் கொள்ள முடியாமல் குமுறிக் கொண்டிருந்த இந்தோனேஷிய மக்களின் ஆத்திரத்தை, இப்பொருளாதாரச் சரிவு பெரும் காட்டுத் தீயாக மாற்றியது. நாணயத்தின் மதிப்பு சரிந்தவுடனேயே மாணவர்கள் சுகர்டோவைப் பதவி விலகக் கோரிப் போராடத் தொடங்கினர்.

ஆனால், சுகர்டோ கடந்த மார்ச் மாதம் ஏழாவது முறையாக தனக்குத் தானே அதிபர் பட்டம் சூட்டிக் கொண்டார். ஐ.எம்.எஃப். கட்டளைக்குப் பணிந்து எரிபொருட்களின் விலையை உயர்த்தினார். இது எரிகிற தீயில் எண்ணெயை ஊற்றியது போல் ஆயிற்று.

பல்கலைக்கழக வளாகத்தைச் சுற்றி நடந்து வந்த மாணவர்களின் போராட்டம், வீதிகளெங்கும் பரவியது. மாணவர்களின் போராட்டத்திற்குப் பொது மக்களும், எதிர்க்கட்சிகளும் ஆதரவளித்தன. இராணுவத்துடன் நடந்த மோதலில் பல மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். சமரசப் பேச்சு வார்த்தைக்கு வர மறுத்துவிட்ட மாணவர்களை அமைதிப்படுத்த எரி பொருட்களின் விலையைக் குறைத்தார் சுகர்டோ. இதனால் ஆத்திரமடைந்த ஐ.எம்.எஃப். நிதியுதவி தரமாட்டேன் என பயமுறுத்தத் தொடங்கியது. நிலைமை கை மீறிப் போவதை உணர்ந்த சுகர்டோ விசுவாசிகளின் ஒரு பிரிவு சபாநாயகர் தலைமையில் அவருக்கு எதிராகத் திரும்பினர். இந்நிலையில் தான் தனது நீண்ட நாள் நண்பரும் உதவி அதிபருமான ஹபீபை அதிபராக்கி விட்டு, பதவி விலகினார் சுகர்டோ.

இந்தோனேஷிய மாணவர்களின் போராட்டம் தன்னெழுச்சியாக வெடித்தெழுந்த அரசியல் போராட்டமாகும். மாணவர்கள் கோரிய அரசியல் சீர்திருத்தம், இந்தோனேஷியாவில் பல கட்சி நாடாளுமன்ற ஆட்சிமுறை செயல்பட வேண்டும் என்பதுதான். ஆனால், சுகர்டோவின் வாரிசாகப் பதவியேற்றுள்ள ஹபீப், ஆட்சிமுறை மாற்றத்திற்கு எந்த உத்தரவாதமும் கொடுக்கவில்லை. சுகர்டோ பதவி விலகிய பின்பு, போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு எப்படி வளர்த்துச் செல்வது என்ற திசைவழியும் மாணவர்களிடம் இல்லாததால், போராட்டத்தின் வீச்சு தணிந்து போனது.

இந்தியப் போலி கம்யூனிஸ்டுகளோ

சுகர்டோவைத் தண்டிக்கக் கோரி நடந்த ஆர்ப்பாட்டம்



www.padippakam.com

இந்தோனேஷிய மாணவர்களின் போராட்டம் பெரும் அரசியல் புரட்சியைச் சாதித்து விட்டது போல, அதனைத் திரித்துப் புரட்டி ஊதிப் பெருக்குகின்றனர். உண்மையில், இந்தோனேஷியாவில் நடந்திருப்பது அதிபர் மாற்றம்தான்; இதைத் தொடர்ந்து அரசியல் சீர்திருத்தங்கள் செய்யப்படலாம் என்ற நம்பிக்கைதான் பரவலாக உள்ளது. ஆட்சிமுறையிலும், அரசியலிலும் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டாலும், அவை பெரிதாக எதையும் சாதிக்கப் போவதில்லை; ஏற்கனவே இது போல் மாற்றங்கள் நடந்த பாகிஸ்தான், வங்காளதேசம் போன்ற நாடுகளை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கச் சுரண்டலும், இராணுவத்தின் துணையோடு நடந்து வரும் பாசிச சர்வாதிகார ஆட்சியும் தான் இந்தோனேஷியாவை வாட்டி வதைக்கும் பிரச்சினைகளுக்கு மூல காரணமாகும். இந்த இரண்டு நுகத்தடிகளையும் ஆயுதப் போராட்டப் பாதையில் தூக்கியெறியும் உறுதி கொண்ட புரட்சிகரப் பாட்டாளி வர்க்கக் கட்சியைக் கட்டியமைக்க இந்தோனேஷிய மக்கள் முன் வர வேண்டும்!

• ரஹீம்

## ''ஏ.வி.டி. பிரிமியம் டீ''யின் அடக்குமுறைச் சுரண்டல்!

'வாங்கிட்டீங்களா...? வாங்கிட்டீங்களா?' என வாய் கிழிய ஒரு பெண் சிரித்துக் கொண்டே வானொளி திரை முழுக்க வருவார். ''ஏ.வி.டி. பிரிமியம் டீ அதிக சுவைக்கு'' என்ற எழுத்துக்கள் மின்னி மறையும்.

கேரளாவில் இடுக்கி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டங்களைக் கொண்ட இந்த நிறுவனத்தின் அதீத வளர்ச்சிக்கு அரும்பாடுபடும் தேயிலைத் தோட்டத் தொழிலாளிகளின் வாழ்க்கையோ அவல நிலையில். கரடிக்குழி, வசுபிடுங்கி, பசுப்பாறை என்ற மூன்று எஸ்டேட்டுகளுக்கு 'ஹைலண்ட்' என்று பெயர். அர்ணக்கல், டீப்டின், ஹில்லாஷ், தர்மா வேலி, மாட்டுப்பெட்டி என்ற ஐந்து எஸ்டேட்டுகளுக்கு 'மிட்லண்ட்' என்று பெயர். இந்த எட்டு எஸ்டேட்டுகளுக்கும் முதலாளி ஏ.வி. தோமஸ் என்பவர். ஆனால் ஹைலண்ட், மிட்லண்ட் என இரண்டாகப் பிரித்து இரண்டு தனித்தனி நிர்வாகத்தில் வைத்துள்ளார்.

ஹைலண்டில் உணவு இடைவேளை 1 மணி நேரம் உட்பட மொத்தம் வேலை நேரமே எட்டுமணி நேரம் தான். ஆனால் மிட்லண்டில் உணவு இடைவேளைக்கு என தனியே நேரமில்லை. மொத்த வேலை நேரமோ 9 1/2 மணி நேரம்.

ஹைலண்டில் இதுவரை 20 சதவீதமும் அதற்கு மேலாகவும் தான் போனஸ் வழங்கப் பட்டுள்ளது. ஆனால் மிட்லண்டில் இதுவரையில் அதிகபட்சமாக வழங்கிய போனஸ் 10.5 சதவீதம்தான்.

ஹைலண்டில் உள்ள தொழிலாளிகளில் 25 சதவீதத்தினர் மலையாளிகள். அங்கு தொழிற்சங்கமும் உரிமைகளும் போராடிப் பெற்றுள்ளனர். மிட்லண்டிலோ எல்லோருமே தமிழர்கள். இங்கு தொழிற்சங்கம் கிடையாது. இவர்களில் 88 சதவீதத்தினர், தாழ்த்தப்பட்ட மக்கள். நிர்வாகம் இவர்களை கொடூரமாக, மிருகத்தனமாக, அடிமைகளாக நடத்துகிறது.

இக்கொடுமைகளை எதிர்த்து நியாயம் கேட்டவர்களை குளிர்காலத்தில் சதம்பல் நிலத்தில் வாய்க்கால் வெட்டச் சொல்லி, சேற்றுக்குள்ளேயே நிற்க வைக்கிறது. இப்படித்தான் மாரியப்பன் என்ற தொழிலாளியை இடுப்பளவுக்கு தண்ணீரில் நிற்க வைத்தது. அவருக்கு வாதநோய் முற்றி இன்று நடக்க முடியாமல் கிடக்கிறார்.

மிட்லண்ட் தொழிலாளிகள் மீது பொய்வழக்குப் போடுவதற்காகவே 'ஐ.ஆர்.ஓ' என்ற பதவியில் ஒருவனை வேலைக்கமர்த்தியுள்ளனர். இவனுக்கு மாதச் சம்பளம் ரூ. 6000/- தவிர ஒரு பைக், அதற்கான எரிபொருள், பங்களா, மின்சாரம் என அனைத்தும் இலவசம். நிர்வாகச் செலவில் இரண்டு வேலையாளும் உண்டு. ஆனால் நிர்வாகம் இலாபம் சம்பாதிக்க உழைக்கும் தொழிலாளிக்கோ எவ்வித அடிப்படை வசதிகளும் கிடையாது.

பச்சை தேயிலைக் கொழுந்துகளை பறிக்கும் பெண்கள் சராசரியாக 70/- ரூபாய்க்கு 40 கிலோ பறிக்கிறார்கள். இதை எடை போடும் கங்காணிகள் ஒவ்வொரு முறை எடைபோடும் போதும் 5 கிலோ வரை எடையைக் குறைத்தே கணக்கு எழுதுவார்கள். இப்படி ஒரு நாளில் ஒரு தொழிலாளி 15 கிலோ வரை இலவசமாக எடுத்துத் தருகிறார். சுமார் 4000 பெண் தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்கள். ஒரு நாளைக்கு மட்டும் கூலியின்றி 60 டன் தேயிலைக் கொழுந்து கிடைக்கிறது.

ஆயினும் இதுவரை ஏ.வி.டி. நிர்வாகம் நட்டக் கணக்கே காட்டுகிறது. அடிக்கடி சேமிப்புக் கிடங்குகளில் தீ வைத்து விடுவார்கள். எல்லாமே எரிந்து போனது என்பார்கள். ஆனால் தீ வைக்கும் முன், உள்ளே இருப்பவற்றை மாற்றி இருப்பார்கள். இந்த மோசடிகளுக்கு ஆளும் ''இடது சாரி'களான சி.பி.எம்.மும் அவர்களது கூட்டாளிகளும் உடந்தையே.

பனியிலும் மழையிலும் நனைந்து, அட்டைகள் இரத்தம் உறிஞ்ச தேயிலைக் கொழுந்துகளைப் பறிக்கும் இந்தத் தொழிலாளிகளின் உழைப்பை உறிஞ்சிக் கொழுக்கும் ஏ.வி.டி. நிர்வாகம், இதில் மட்டுமின்றி பொறியியல் உற்பத்தி உட்பட பல துறைகளிலும் விரிந்து பரந்துள்ளது. மிட்லண்ட் தொழிலாளிகள் ஓரணி திரண்டு போராடினாலொழிய, இந்த ரத்தங் குடிக்கும் முதலாளித்துவ சுரண்டலிலிருந்து மீள முடியாது.

— பு.மா.இ.மு.,
வண்டிப்பெரியார்.

## கிரிமினல், கழிசடை நாயகி ஜெயலலிதாவையும் பார்ப்பன பாசிசக் கும்பல் பாரதீய ஜனதாவையும் முறியடிப்போம்!

தமிழகத்தில் பொறுக்கி - கிரிமினல் அரசியலை உச்ச கட்டத்திற்குக் கொண்டு சென்ற பார்ப்பன பாசிச ஜெயா, தன் மீதும் தனது உடன்பிறவா சகோதரி மீதும் உள்ள ஊழல் - கிரிமினல் வழக்குகளை முறியடிக்க மிகக் கேவலமான நடைமுறைகளைக் கையாள்கிறார்.

இந்தக் கிரிமினல் கழிசடையுடன் கூட்டணி கண்ட பாரதீய ஜனதாவோ எதிர்த் தரப்பை முடக்கவும், நாட்டை மறுகாலனியாக்கும் தனது தாராளமயப் பொருளாதாரக் கொள்கையிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பவும் அணுகுண்டு வெடித்து தேசியவெறி - போர் வெறியைத் தூண்டுகிறது. மறுபுறம் தனது பார்ப்பன மதவெறியையும் தூண்டி அரசியல் ஆதாயம் தேட முனைகிறது.

இப்பாசிசக் கும்பல்களை எதிர்த்து முறியடிக்க அறைகூவி மக்களிடையே பிரச்சார இயக்கம் எடுத்து வருகின்றன புரட்சிகர அமைப்புகளான மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி.

கோவை, கம்பம், பென்னாகரம், விழுப்புரம், சென்னை, மதுரை, திருச்சி ஆகிய நகரங்களில் விரிவாகப் பிரச்சாரம் செய்து, தொழிலாளர்கள், இளைஞர்கள், பெண்கள், விவசாயிகள் உள்ளிட்ட உழைக்கும் மக்கள் பெருமளவு கலந்து கொண்ட கருத்தரங்கக் கூட்டங்கள் நடந்தன.

பட்டுக்கோட்டை, இராசபாளையம், தேவி பட்டணம் (நெல்லை மாவட்டம்), பெருவளப்பூர், கோவை, திருச்சி, ஆயுதகலம், ஜெயங்கொண்ட சோழபுரம் ஆகிய இடங்களில் பரந்துபட்ட மக்கள் கலந்து கொண்ட பொதுக்கூட்டங்கள் சிறப்பாக நடந்து முடிந்தன. கூட்ட இறுதியில் கலை நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற்றன.

தகவல்:
ம.க.இ.க. - பு.மா.இ.மு. - வி.வி.மு.,
தமிழ்நாடு.



படிப்பகம்

www.padippakam.com

## ஆட்சிக் கலைப்பு எப்போது?

# கூட்டணியில் லாவணி

வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறிய கதையாக, பாசிச ஜெயா தி.மு.க. ஆட்சிக் கலைப்புக் கோரிக்கையுடன் தனது ஆட்டத்தைத் தொடங்கி விட்டார். பா.ஜ.க. தலைவர்கள் மீது பகிரங்கக் குற்றஞ் சாட்டி, அவர் அன்றாடம் விடுக்கும் பரபரப்பு அறிக்கைகளும் அவற்றுக்கு தமிழக பா.ஜ.க.வினரின் எதிர் அறிக்கைகளுமாக கூட்டணியில் லாவணி களைகட்டத் தொடங்கிவிட்டது.

''தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு மோசமடைந்து விட்டது; தி.மு.க. அரசு பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தத் தவறி விட்டது. தமிழகத்தில் பாகிஸ்தான் உளவாளிகளின் ஊடுருவலும் நடமாட்டமும் அதிகரித்து, நாட்டுக்குப் பேரபாயம் ஏற்பட்டுள்ளது; எனவே, தி.மு.க. ஆட்சியை உடனடியாகக் கலைக்க வேண்டும்'' என்று கூச்சலிட்டுக் கொண்டு, ஜூன் மத்தியில், ஜெயா கட்சி எம்.பி.க்கள் ஒருவார காலத்துக்கு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் வெளிநடப்புச் செய்தனர்.

அ.தி.மு.க. கூட்டணியிலுள்ள பா.ம.க.வின் தலித் எழில்மலை, இராமதாசு மற்றும் வாழப்பாடி ராமமூர்த்தி ஆகியோரும், அரசியல் தரகன் சு.சாமியும் ஆட்சிக் கலைப்பை வலியுறுத்தி அறிக்கைகளும் பேட்டிகளும் வெளியிட்டனர். பாசிச ஜெயாவோ வரும் ஆகஸ்ட் மாதத்துக்குள் தி.மு.க. ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று கெடு வைத்து மிரட்டுகிறார், விவசாயிகளின் தோழியாக திடீர் அவதாரம் எடுத்து, மாவட்டத் தலைநகரங்களில் தனது கட்சியினரை ஏவி ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்.

பாசிச ஜெயா மீதுள்ள இலஞ்ச - ஊழல் - கிரிமினல் வழக்குகளில், ஏதாவது ஒன்றில் விசாரணை முடிந்து தண்டனை வழங்கப்பட்டு விட்டால், தேர்தலில் அவர் மீண்டும் போட்டியிட முடியாது. எனவேதான், வழக்குத் தீர்ப்பு வருமுன் தி.மு.க. ஆட்சியைக் கலைத்து, வழக்கை பிசுபிசுக்கச் செய்துவிட வேண்டும் எனத் துடிக்கிறார். ஜெயா கும்பலுடன் முழுமையாக உடன்படும் பாரதீய ஜனதா, பொருத்தமான தருணத்திற்காகக் காத்திருக்குமாறு அறிவுறுத்தி நம்பிக்கையூட்டி வந்தது. ஜெயாவைத் திருப்திபடுத்த, தி.மு.க. ஆட்சியின் சட்டம் - ஒழுங்கு நிலைமையை ஆராய மைய அரசின் குழுவை அனுப்பி வைத்தும், தி.மு.க. ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று பா.ஜ.க. தலைவர்களை அறிக்கை வெளியிடச் செய்தும் போக்கு காட்டி வந்தது.

இதே போல கூட்டணியிலுள்ள சமதா கட்சி மற்றும் திர்ணாமுல் காங்கிரசின் நிர்பந்தங்களால், பீகார் மற்றும் மே.வங்கத்தில் சட்டம் - ஒழுங்குநிலையை ஆராய மைய அரசின் குழுவை அனுப்பி வெள்ளோட்டம் பார்த்தது. மே. வங்கத்திற்கு மையக் குழு வந்தபோது, அம்மாநில அரசு ஒத்துழைக்க மறுத்து எதிர்ப்பைக் காட்டியது. எதிர்க்கட்சிகள் ஆளும் மாநில அரசுகளைக் கலைக்க முயற்சிப்பதை ஐக்கிய முன்னணி - 'இடதுசாரி' கட்சிகள் கடுமையாக எதிர்த்தன. நாளும் கொலைகளும் வன்முறையும் தலைவிரித்தாடும் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களின் யோக்கியதையைப் பட்டியல் போட்டு அம்பலப்படுத்தத் தொடங்கின.


இந்நிலைமைகளைக் கண்டு, எதிர்க்கட்சிகளின் மாநில ஆட்சிகளைக் கலைப்பதைத் தற்காலிகமாகத் தள்ளிப் போடுவதன் மூலம், கண்ணியமிக்க ஆட்சி நடத்துவதாக பிரமையூட்டி, மக்களிடம் ஆதரவை விரிவுபடுத்திக் கொள்ள முடியும் என்று இந்து வெறியர்கள் தொலைநோக்கு கணக்குப் போடுகின்றனர். அதன்படியே பிரதமர் வாஜ்பாய், தி.மு.க. உள்ளிட்டு எந்த எதிர்க்கட்சிகளின் ஆட்சியையும் கலைக்க மாட்டோம் என்றார்.

இதனால் ஆத்திரமடைந்த ஜெயா, தி.மு.க.வுக்கும் பாக். உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ.க்கும் இரகசிய தொடர்பு உள்ளது என்று தமிழகத்தின் சட்டம் ஒழுங்குநிலை பற்றி பீதியூட்டும் அறிக்கை வெளியிட்டு மிரட்டத் தொடங்கியதும், பா.ஜ.க. மாநிலத் தலைவர் கணேசன், மைய அரசுக்கு ஆதரவு அளித்து வருவதை ஜெயா விலக்கிக் கொண்டால், தமிழக மக்கள் மன்னிக்க மாட்டார்கள் என்று அறிக்கை வெளியிட்டார். இந்த லாவணியின் உச்சகட்டமாக, தி.மு.க. ஆட்சியைக் கலைப்பது என்ற எழுதப்படாத ஒப்பந்தத்துடன்தான் கூட்டணி உருவானது என்பதை வெளிப்படையாக போட்டு உடைத்த ஜெயா, வாஜ்பாயியையும் அத்வானியையும் தேசப் பாதுகாப்பில் அக்கறை இல்லாதவர்கள், அ.தி.மு.க.வை உடைக்கச் சதி செய்கிறார்கள், தி.மு.க.வுடன் கள்ள உறவு வைத்துள்ளார்கள் என்று பேட்டியளித்து வசை பாடினார். அதைத் தொடர்ந்து இராமதாசு, வாழப்பாடி ஆகிய கூட்டணி காக்கைகளும் பாரதீய ஜனதாவைச் சாடி அறிக்கை விடுக்கின்றன. இந்த லாவணிக் கச்சேரியில் சுருதி பேதமாக, 356-ஆவது சட்டப் பிரிவை ஏவி தி.மு.க. அரசைக் கலைக்கக் கூடாது. இது ஜனநாயக விரோதமானது என்று ம.தி.மு.க.வின் வை.கோ. சாக்கடையில் உட்கார்ந்து கொண்டு சாம்பிராணி புகை எழுப்புகிறார்.

''தேர்ந்தெடுக்கும் உரிமை மக்களுக்கு; கலைக்கும் அதிகாரம் தில்லிக்கா?'' என்று 356-ஆவது அரசியல் சட்டப் பிரிவு ஜனநாயக விரோதமானது எனச் சாடி எதிர்க்கும் ஓட்டுக் கட்சிகள் அனைத்துமே, தாங்கள் ஆளும் கூட்டணியில் இருந்தபோது ஆதரித்தே வந்துள்ளன. போலி கம்யூனிஸ்டுகளும் இதற்கு விதிவிலக்கல்ல. ஐக்கிய முன்னணி ஆட்சியின் போது 1996-இல் பா.ஜ.க.வின் குஜராத் அரசையும், உ.பி.யில் கல்யாண் சிங் அரசையும் கலைக்குமாறு 'இடது'கள் கோரி வந்தனர். இப்படி இருபுறமும் கூரான கத்தியான 356-ஆவது சட்டப் பிரிவை எதிர்த்தும் ஆதரித்தும் சந்தர்ப்பவாத சதிராட்டம் போடுவதே தி.மு.க., ம.தி.ம.க. உள்ளிட்ட எல்லா ஓட்டுக் கட்சிகளின் நடைமுறையாக உள்ளது. ஜனநாயக விரோத இச்சட்டப் பிரிவு நீடிக்கும் வரை இத்தகைய கூத்துக்கள் தொடர்வதைத் தடுக்கவும் முடியாது.

முன்பு நரசிம்ம ராவ் தலைமையிலான காங்கிரசுடன் ஜெயா கும்பல் கூட்டணி கட்டியது போலவே இப்போதும் இந்துவெறியர்களுடன் ஜெயா கும்பல் வலுவான பார்ப்பன பாசிசக் கூட்டணியைக் கட்டியுள்ளது. அதில் பங்காளிகளுக்கிடையே நடக்கும் நிழல் சண்டையையே நிஜ சண்டை போல கிசுகிசு பத்திரிகைகள் ஊதிப் பெருக்கி பரபரப்பூட்டுகின்றன. முன்பும் இதேபோல காங்கிரசு - ஜெயா கும்பல்களுக்கிடையே லாவணி நடந்து, தமிழக சட்டமன்றத் தேர்தலின் போது பணப் பெட்டிக் கூட்டணியாக துளிர்த்துக் கொண்டது. அதேபோல, பிரிவினைவாத - பயங்கரவாதப் பீதியூட்டி பார்ப்பன பாசிசத்தை நிறுவும் அடிப்படையான கொள்கையில் ஒன்றுபட்டு நிற்கும், கிரிமினல் பலமும் பண பலமும் கொண்ட ஜெயா கும்பலை இந்துவெறியர்கள் புறக்கணிப்பதற்கோ, மறுபுறம் பாசிச ஜெயா கும்பல் இந்துவெறியர்களைப் பழி வாங்கி கூட்டணியை முறித்துக் கொள்வதற்கோ தற்சமயம் அடிப்படை இல்லை. அதேசமயம், பங்காளிச் சண்டையும் உடனடியாக முடிவுக்கு வந்துவிடும் என்பதற்கும் முகாந்திரமில்லை.





இப்படி கூட்டணி, ஆதரவு - விலகல், ஆட்



படிப்பகம்

www.padippakam.com

சிக் கவிழ்ப்பு, தேர்தல், புதிய கூட்டணி, மீண்டும் லாவணி என்று மாறி மாறி இந்த விஷச் சுழற்சி தொடர்கிறது. இதிலிருந்து மீள முடியாமல், நாட்டையும் மக்களையும் இப்புதை குழியில் தள்ளிவிட்டு, பாசிச அடக்குமுறையை நோக்கி நாடாளுமன்ற அராஜகம் பாய்ந்து கொண்டிருக்கிறது. நாடு மறுகாலனியாக்கப்படுவதன் விளைவாக தீவிரமாகி வரும் ஆலைமூடல், வேலையின்மை, இலவச மின்சாரம் ரத்தாகும் அபாயம், விலையேற்றம், கட்டண உயர்வு, அடக்குமுறைச் சட்டங்கள் என அடுத்தடுத்துத் தொடரும் அரசியல் - பொருளாதாரத் தாக்குதல்களிலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்பி எப்போதும் தன்னைச் சுற்றியே அரசியல் நடக்குமாறு செய்ய பாசிச ஜெயா கும்பல் தீவிரமாக முயற்சிக்கிறது.

இதற்கு முன்பும் இதேபோல பிரிவினைவாத - பயங்கரவாத பீதியூட்டும் கழிசடை அரசியல் மூலம் தான் இக்கும்பல் தமிழக ஆட்சியைப் பிடித்தது. இப்போது மீண்டும் அதே உத்தியுடன் இழந்த சொர்க்கத்தை மீட்க அலைகிறது. இக்கழிசடை - ஊழல் - கிரிமினல் - பார்ப்பன பாசிச கும்பலை தமிழக அரசியலிலிருந்து துடைத்தெறிவதும் அதன் பாசிசக் கூட்டாளிகளான இந்துவெறியர்களை முறியடிப்பதும்தான் இன்றைய உடனடிக் கடமையாகும்.

• வேந்தன்

# சுரங்கத் தொழிலாளர் போராட்டம்:

# குலுங்கியது ரசியா

மீண்டும் ரசிய நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் புதிய ஜார்களை நடுநடுங்க வைக்கும் போராட்டப் பாதையில் புறப்பட்டுள்ளனர். சந்தைப் பொருளாதாரத்தைப் புகுத்தி முதலாளித்துவ நாடாக்கிய எல்ட்சின், பாலாறும் தேனாறும் ஓடும் என்றார். ஆனால் உழைத்து ஓய்ந்த தொழிலாளர்களுக்குக் கூலி கொடுக்கக் கூட வக்கற்றுப் போன நிலை தான் இன்றுள்ளது.

சுரங்கத் தொழிலாளிகளின் நிலையோ மிகமிகப் பரிதாபகரமானது. சுரங்கத்தில் உற்பத்தியை விட சாவு நிச்சயம் என்ற ஆபத்தான நிலைமை. பல மாதங்களாகச் சம்பளமும் கிடையாது. சில சுரங்கங்களில் 1996-லிருந்தே சம்பளம் தரப்படவில்லை. மாதத்தில் 10 நாள் வேலை கிடைப்பதே அரிது. தொழிலாளர் குடும்பங்கள் கந்தைக் கூரையின் கீழ் வாழ்கின்றன.

இவற்றுக்குக் காரணம் பல நிலக்கரிச் சுரங்கங்களை எல்ட்சின் தனியார்மயமாக்கியதுதான். சதி - மோசடிகள் மூலம் சுரங்கங்களைக் கைப்பற்றிய திடீர் முதலாளித்துவ கும்பல்கள், தொழிலாளர்களுக்கு கூலி கூடக் கொடுக்காமல் சுரண்டி ஏப்பம் விட்டன; சுரங்கச் சொத்துக்களை பங்குச் சந்தை சூதாட்டத்தின் மூலம் வேறு தொழில்களுக்கு கடத்தி உறிஞ்சிக் கொழுக்கின்றன. மறுபுறம், அரசுத் துறை நிறுவனங்கள் தாம் வாங்கிய நிலக்கரிக்கான தொகையைச் செலுத்த முடியாமல் ஊழல் - மோசடிகளால் நட்டமடைந்து திவாலாகிவிட்டன. ஏகாதிபத்திய உலக வணிக - சந்தைப் பொருளாதாரத்தால் ஏற்பட்ட நெருக்கடியின் சுமைகள் சுரங்கத் தொழிலாளர்கள் தலையில் சுமத்தப்பட்டன.

தமக்கு 'கூலி வேண்டும், வேலை வேண்டும்' எனத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம், பட்டினிப் போராட்டம், அதிகாரிகளைப் பணயக் கைதிகளாகச் சிறைப்பிடிப்பது என படிப்படியாகப் போராடிப் பார்த்தனர். வாக்குறுதிகளை வாரி வீசிய அரசாங்கம் ஏமாற்றியது. கோபாவேசமாகக் கொதித்தெழுந்த தொழிலாளர்கள், தொழிற்சங்க கட்டளைகளை மீறி தன்னெழுச்சியாக ரயில் மறியல் போராட்டத்தில் குதித்தனர்.

கடந்த மே 13-இல், வடக்கு ரசியாவிலுள்ள இன்டா சுரங்கத் தொழிலாளிகள் தெற்கு நோக்கி மாஸ்கோவிற்குச் செல்லும் இருப்புப் பாதையில் கூடாரமிட்டு மறியல் செய்தனர். ஒரு வாரம் கழித்து மேலும் இரண்டு இருப்புப் பாதை வழிகளையும் மறித்து ரசியாவின் கிழக்கு, வடக்கு, தெற்குப் பகுதிகளை நாட்டின் பிற பகுதியிலிருந்து துண்டித்தனர்.

இதற்கு முன்பு சுரங்கத் தொழிலாளர்கள் நடத்திய போராட்டங்கள் கிரெம்ளின் மாளிகையில் சிறு துரும்பைக் கூட அசைக்கவில்லை. ஆனால் இந்தப் போராட்டம் நெற்றிப் பொட்டில் தாக்கியதைப் போல அரசாங்கத்தைத் தாக்கி நிலைகுலைய வைத்தது.



சுரங்கத் தொழில்ாளிகளின் தொடர்வண்டி மறியல் போராட்டம்

பல நூற்றுக்கணக்கான ரயில்கள் ஓடாமல் நின்றன. இதனால் ஆலைகளுக்கான கச்சாப் பொருள்கள் முடங்கிப் போய், ரசியப் பொருளாதாரமே முற்றாக செயலற்றுப் போகும் பேரபாயம் உருவானது.

சமீபத்தில் பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரதமர் செர்னோமிர்டினின் மோசமான ஆட்சிதான் சுரங்கத் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்குக் காரணம் என எல்ட்சின் பழியை எதிரியின் மேல் போட்டார். உண்மையான காரணமோ எல்ட்சினின் பொருளாதார சீர்திருத்தங்கள் தான் என தொழிலாளர்கள் மிகச் சரியாகவே புரிந்துள்ளனர். எனவே 'எல்ட்சினே பதவி விலகு' என்ற கோரிக்கையும் வைத்தனர்.

பல நாட்கள் துணைப் பிரதமர்கள் இருவருடன் நடந்த பேச்சு வார்த்தையின் முடிவில் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் தமது சம்பளத்தைப் பெற அரசு உதவும் என உறுதியளித்துள்ளனர். இனி சுரங்கங்களை மூடுவதற்கு முன் அந்தத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலையும் சமூகப் பாதுகாப்பும் வழங்க உறுதி கூறியுள்ளனர்.

இதற்கு முன்பும் இப்படி உறுதியளித்தனர். கடந்த 3 ஆண்டுகளில் சுரங்கங்களை மூடியதில் 1.11 இலட்சம் தொழிலாளர்கள் வேலையிழந்தனர். இவர்களில் 6500 பேருக்கு மட்டுமே மாற்று வேலை தந்தனர். இப்போது உலக வங்கியின் கட்டளைப்படி மொத்தமுள்ள 240 சுரங்கங்களில் 140-ஐ இரண்டு ஆண்டுகளில் மூட உள்ளனர். இதனால் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுரங்கத் தொழிலாளிகள் வேலை இழக்கும் அபாயம் உள்ளது. மேலும் பொருளாதாரத்தைச் சீர்படுத்த சேவைத் துறைகளுக்கான செலவை நிறுத்தும்படியும் உலக வங்கி உத்தரவிட்டுள்ளது. இதனால் சுரங்கத் தொழிலாளிக்கான அற்ப நிவாரணமும் நிறுத்தப்படும் அபாயம் உள்ளது.

இந்த இரயில் மறியல் போராட்டம் பயனளிக்கவில்லை என்றால் என்ன செய்வீர்கள் என்ற கேள்விக்கு சைபீரிய சுரங்கத் தொழிலாளி ''அடுத்தமுறை ஆயுதமேந்துவோம்'' என பதிலளித்தார்.

நமது நாடு மீண்டும் மறுகாலனியாக்கப்படும் இவ்வேளையில் இந்தியத் தொழிலாளிகளும் அரசைப் பணிய வைக்கும் போராட்ட வழிகளைக் கற்க வேண்டும். அதற்குப் புரட்சிகரத் தொழிற்சங்கங்களில் திரள வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## தாழ்த்தப்பட்டோருக்கு குடிநீர் மறுப்பு

குஜராத் மாநிலத்தில் தேவலியா கிராமத்தைச் சேர்ந்த ''படேல்'' மேல்சாதி வெறியர்கள், அக்கிராமத்தில் வாழும் தாழ்த்தப் பட்டோர் இந்தக் கோடையின் பொழுது குடிநீர் இன்றி தத்தளிக்க வேண்டும் எனத் திட்டமிட்டு, தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளுக் குச் செல்லும் குடிநீர்க் குழாய்களை அடித்து நொறுக்கி விட்டனர். அரசு அதிகாரிகள் லாரிகள் மூலம் குடிநீர் வழங்குவதையும் தடுத்து விட்ட மேல்சாதி வெறியர்கள், இரவு நேரத்தில் கிராமத்திற்கு வெளியே சென்று குடிநீர் எடுத்துவர முயன்ற தாழ்த்தப்பட்டோரை யும் வழிமறித்துத் தாக்கினர். பா.ஜ.க.வைச் சேர்ந்த புருசோத்தமன் ரூபாலா என்ற எம்.எல்.ஏ. உருவாக்கிய ''சிவசாகி யுவக் மண்டல்'' என்ற மேல்சாதி அமைப்புதான் இவ்வெறியாட்டத்தை நடத்தியுள்ளது.

## இராசனின் நினைவை அழிக்க அதிகார வர்க்கத்தின் குறுக்குப் புத்தி

அவசர நிலைக் கால பாசிச ஆட்சியின் பொழுது, கேரள மாநிலப் போலீசாரால் சித்திரவதை செய்து கொல்லப்பட்ட பொறியி யல் மாணவர் இராசனின் தந்தை ஈச்சர வாரியர், தனது மகனின் சாவுக்கு அரசு வழங்கிய நட்ட ஈட்டுத் தொகை ஆறு இலட்ச ரூபா யைக் கொண்டு கொச்சி அரசு மருத்துவமனையில் இராசனின் நினை வாக ''வார்டு'' ஒன்றைக் கட்டிக் கொடுத்துள்ளார். இராசனின் நினை வாக இவ்வார்டைக் கட்டிக் கொடுப்பதற்கும் கூட, அவர் அரசு இயந் திரத்தை எதிர்த்துப் பல வருடங்கள் போராட வேண்டியிருந்தது. கொச்சி மாவட்ட ஆட்சியாளர் வார்டு கட்ட இருந்த நிலத்தில் பேருந்து நிழற்குடை கட்டப் போகிறோம் என உத்திரவிட்டு, வார்டு கட்டுவதைத் தடுத்துவிட முயன்றார். இம்மாவட்ட ஆட்சியாளர், இரா சன் படுகொலை செய்யப்பட்டபொழுது கேரள முதல்வராக இருந்த கருணாகரனின் கைத்தடி என்பது குறிப்பிடத்தக்கது. அதிகார வர்க்கத் தின் இந்த ஈனபுத்தியை எதிர்த்து பொதுமக்களிடமிருந்தும், நீதிமன் றத்திடமிருந்தும் கண்டனங்கள் எழுந்த பின்புதான், அரசு இயந்திரம் அடி பணிந்தது.

## பார்ப்பனமயமாகும் உ.பி. பள்ளிகள்


உ.பி. மாநிலத்தில் ஆரம்பப் பள்ளியில் படிக்கும் சிறுவர்களின் மனதில் இந்துமத வெறியை ஆழமாக விதைப்பதற்கு அடுத்தடுத்து பல உத்தரவுகளைப் போட்டு வருகிறது கல்யாண் சிங் அரசு. முதலில், வருகைப் பதிவின் பொழுது 'உள்ளேன் ஐயா' எனக் கூறுவதற்குப் பதிலாக 'வந்தே மாதரம்' எனக் கூற வேண்டும் என உத்தரவிட்டது பா.ஜ.க. அரசு. இப்பொழுது, ''ஆரம்பப் பள்ளிகளில் சரஸ்வதி பூஜை கொண்டாடப்பட வேண்டும்; மதிய உணவுக்கு முன் 'போஜன மந்தி ரங்களை'க் கூற வேண்டும்; மூன்றாம் வகுப்பு தொடங்கி அனைத்து மாணவர்களும் சமஸ்கிருத மொழியைக் கட்டா யமாகப் பயின்று தேற வேண்டும்'' என உத்தர விட்டு, பார்ப்பனீயத்தைச் சட்டபூர்வமாக்கத் துடிக்கிறது.

## தி.மு.க. அரசின் ஆன்மீகப் பணி

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் 75 ஆவது பிறந்த நாளன்று, தமிழக சுற்றுலாத் துறை ''திராவிடக் கலாச்சார சுற்றுலா'' என்ற புதிய திட்டத்தைத் தொடங்கியது. சுற்றுலாப் பய ணிகளை காஞ்சிபுரத்திலுள்ள கைலாசநாதர், ஏகாம்பரேஸ்வரர் ஆலயங்களுக்கும் மற்றும் திருக்கழுகுன்றம் கோயிலுக்கும் அழைத்துச் சென்று, ஆண்டவனைத் தரிசித்துத் திரும்புவது தான் திராவிடக் கலாச்சார சுற்றுலாவின் நோக் கம்.

## பறி போகும் பாரம்பரிய உரிமை

வேம்பு, மஞ்சளை மட்டுமல்ல இந்தியா வில் விளையும் நூற்றுக்கும் மேலான தாவர வகைகளின் மீதும் அமெரிக்கா, ஜப்பான், பிரான்சு, இங்கிலாந்து, ஜெர்மனி, கனடா ஆகிய நாடுகள் காப்புரிமை பெற்றுள்ளன. இந்நாடு களில் கடுகின் மீது பதினான்கு வகையான காப்புரிமைகளும், ஆம ணக்கின் மீது ஏழு வகையான காப்புரிமைகளும் வழங்கப்பட்டுள் ளன. இவை தவிர 22 மூலிகைத் தாவர மற்றும் விவசாயப் பொருட்க ளின் மீதும் காப்புரிமை வழங்கப்பட்டுள்ளது.



அவசர நிலை பாசிச ஆட்சிக்குப் பலியான இராசன்

## காமுகர்களுக்குத் துணை போன பஞ்சாப் போலீசு

பஞ்சாப் மாநிலத்தில் ஃபெரோஸ்பூர் நகருக்கு அருகில் உள்ள மோஹர்சிங்வாலா கிராமத்தைச் சேர்ந்த ஷீலா என்ற பெண்மணியை (உண்மை பெயர் மாற்றப்பட்டுள்ளது) இரு வருடங்களுக்கு முன்பு, அண்ணன் தம்பிகளான குல்மீத் சிங், குர்மீத் சிங் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து பாலியல் பலாத்காரப்படுத்தினர். இப்பாலியல் வன்முறையை மறந்து விடும்படி கிராமப் பெரிய மனிதர்கள் கூறிய 'அறிவுரை'யை ஒதுக்கித் தள்ளிய ஷீலா, குற்றவாளிகளைத் தண்டிக்கக் கோரி வழக் குத் தொடர்ந்தார். குற்றவாளிகளுக்கு பத்து ஆண்டுகால சிறை தண் டனை விதித்து ஏப்ரல் 28 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால், தீர்ப்பு வந்த மறுநாளே குற்றவாளிகள் இருவரும் தப்பித்து, கிராமத் திற்கு வந்து, ஷீலாவின் இடது காலை வெட்டியெறிந்து விட்டுத் தப்பியோடி விட்டனர். இக்காமுகர்கள் ஷீலாவைப் பழிதீர்த்துக் கொள்ள போலீசாரே உதவியிருப்பதாக அம்மாநில பத்திரிகைகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

## தாழ்த்தப்பட்டோர் மாணவர் விடுதிகள் தனியாருக்குத் தாரை வார்ப்பு!

தமிழ்நாட்டில், தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதிகளையும், பழங் குடியினப் பள்ளிகளையும் இனி அரசின் பொறுப்பில் நடத்தாமல், இப்பள்ளிகளையும் விடுதிகளையும் ஏலம் விட்டுத் தனியாரிடம் ஒப்ப டைக்க முடிவெடுத்துள்ளது தி.மு.க. அரசு. நிதியை மட்டும் அரசு ஒதுக்கிக் கொடுத்து விடும்; நிர்வாகம் - கட்டுப்பாடு எல்லாம் இனி தனியார் கைகளில் தான். இத்திட்டத்தின் முதல் கட்டமாக 25 தாழ்த்தப் பட்ட மாணவர் விடுதிகளை ஏலம் போடப் போகிறது தமிழக அரசு. இவ்விடுதிகளை நடத்துவதில் அதிகார வர்க்க அடித்து வந்த கொள் ளையில், இனி தனியார் முதலாளிகளும் கூட்டுச் சேர்ந்து கொள்வார் கள். இதுதான் நிர்வாகப் புலி கருணாநிதியின் சீர்திருத்தம்!

## பா.ஜ.க. பூசி மெழுகும் இந்து ஒற்றுமை எங்கே?

ஒரிஸ்ஸா மாநிலத்தின் பூரி மாவட்டத்திலுள்ள பானாபுர் கிராமத்தைச் சேர்ந்த சந்திரமணி பெஹரா தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர். இவர், காணாமல் போன தனது மாட்டைத் தேடி பக்கத்துக் கிராமமான கதபதன்புருக்குச் சென்ற பொழுது, வழியில் தன்னுடன் பள்ளியில் படித்த பலராம் பத்ராவைப் பார்த்து நட்புடன் சகோதரா என அழைத்தார். மேல்சாதியைச் சேர்ந்த தன்னை ஒரு தாழ்த்தப்பட்டவன் எஜமானரே என மரி யாதையாக அழைக்காமல், சகோதரா என உறவு பாராட்டுவதா என ஆத்திரமடைந்த மேல் சாதி வெறியன் பலராமும் அவனது நண்பர்க ளும் சந்திரமணி பெஹராவைத் தாக்கி விரட்டி விட்டனர். இதன்பின், கதபதன்புர் கிராமத்தைச் சேர்ந்த மேல்சாதிவெறிக் கும்பலொன்று, ஆயுதங்களைத் தூக்கிக் கொண்டு பானாபுர் கிராமத்திற்குள் நுழைந்து தாக்குதல் தொடுத்ததில், ஒரு தாழ்த்தப்பட்ட இளைஞர் வெட்டிக் கொல்லப்பட்டார்; மேலும் இருவர் வெட்டுக் காயங்களோடு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்தாக்குதல் போலீசா ரின் கண்முன்னே நடந்த பின்னும் கூட, மேல் சாதி வெறியர்கள் ஒருவரும் கைது செய்யப்பட வில்லை.

Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ

PUTHIYA JANANAYAGAM
(TAMIL FORTNIGHTLY)

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER
FOR INDIA UNDER NO. 42648/85

Regd. No. TN/MS(S) 622 / 98



இந்தப் படத்தில் நாம் காணும் அனைவரும் அரியானா மாநிலம் பானிபட் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் கூலி விவசாயிகள். இவர்களுள் மிகப் பெரும்பாலோர் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள்;

நவீன உழுபடைக் கருவிகளின் படையெடுப்பு; பணப் பயிர் பயிரிடப்படும் நவீன முதலாளித்துவப் பண்ணைகளாக விளை நிலங்கள் மாற்றப்படுவது; மேட்டுக் குடியினருக்காகப் பண்ணை வீடுகளும், ஐந்து நட்சத்திர விடுதிகளும், நவீன குடியிருப்புகளும் கட்ட விவசாய பூமி சரக்காக மாறி விற்கப்படுவது - தாராளமயம் உருவாக்கியுள்ள இந்த விபரீதப் போக்கு, இவர்களை விவசாயத்தில் இருந்து அப்புறப்படுத்தி, முன்னாள் கூலி விவசாயிகளாக்கி விட்டது. அரியானா மாநிலமெங்குமே மேல் சாதியினர் பிடியில் இருக்கும் கிராமப் பஞ்சாயத்துகள், கிராமப் பொது நிலங்களைத் தனியார் முதலாளிகளுக்குக் குத்தகைக்கு விட்டு விடுவதால், வேலையிழந்த (தாழ்த்தப்பட்ட) கூலி விவசாயிகள், கிராமத்தில் ஆடு - மாடு மேய்த்துப் பிழைக்கக் கூட வழியில்லாமல் போய்விட்டது.

இதனால் பானிபட் நகரமே கூலியுழைப்பு விற்பனைச் சந்தையாக மாறி விட்டது; யாராவது வந்து தங்கள் உழைப்பை வாங்கிச் செல்ல மாட்டார்களா என்ற எதிர்பார்ப்புடன்தான் இவர்கள் காத்து நிற்கிறார்கள்; தாராளமயமாக்கலின் ஒரு முகம் இது; அதற்கு இன்னொரு முகமும் உண்டு!

இதோ இவரின் பெயர் ஜி.எஸ். கெஹ்ரா. பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர். படத்தைப் பார்க்கும்பொழுது கெஹ்ரா தனது குடும்பத்தோடு கிராமத்திற்கு ''பிக்னிக்'' வந்திருப்பதைப் போலத் தோன்றும். ஆனால் உண்மை அதுவல்ல. கெஹ்ரா தாராளமயம் பெற்றெடுத்துள்ள நவீன விவசாயி. தனது நிலம் உழப்படுவதைத்தான் மேற்பார்வையிட்டுக் கொண்டிருக்கிறார். நமது நாட்டு மக்களுக்கு என்ன தேவை என்பதைவிட, அமெரிக்காவிலும், ஐரோப்பிவிலும் வாழும் வெள்ளைக்காரனுக்கு என்ன தேவை என்பதுதான் இவருக்கு முக்கியம்.

# இதுதான் இன்றைய இந்தியா



கெஹ்ராவைப் போல நூற்றுக் கணக்கான நவீன விவசாயிகள் பஞ்சாப் மாநிலமெங்கும் முளைத்து விட்டார்கள். ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் இவர்களிடம் குவிந்து கிடக்கிறது. நெல்லையும், கோதுமையையும் பயிரிடும் அந்தக் கால அப்பாவி விவசாயிகள் இல்லை, இவர்கள். பூக்கோசு, கோசுக்கீரை, முட்டைக்கோசு, எலுமிச்சை, நார்த்தம் பழம், கொடி முந்திரி, திராட்சை மற்றும் பலவகையான வெளிநாட்டுப் பூ வகைகள், காய்கறிகளைப் பயிரிட்டு, ஏற்றுமதி செய்து இலட்ச இலட்சமாகச் சம்பாதிக்கும் புதிய பண்ணையார்கள் இவர்கள். உலக வங்கிக்கு அடிபணிந்து அரிசியும், கோதுமையும் பயிரிடும் விவசாயிகளுக்கு மானியத்தை வெட்டும் ஆட்சியாளர்கள், இவர்களுக்குத் தாராளமாக சலுகைகளை வாரி வழங்குகிறார்கள். ஏனென்றால், இவர்கள் அமெரிக்க டாலரை அரசின் கஜானாவில் கொண்டு வந்து கொட்டுகிறார்களாம்!

பரம்பரை பரம்பரையாக மண்ணையும், மரபு விவசாயத்தையும் பேணி பாதுகாத்து வளர்த்தவர்களை நாடோடிகளாக்கி விட்டு, இலாப வெறி மட்டுமே கொண்ட திடீர் பண்ணை அதிபர்களை உருவாக்கி, இந்திய விவசாயத்தை நாசமாக்கி வரும் தாராளமயம் இனியும் தொடர அனுமதிக்கலாமா?